# ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

TG 462

# கிறிஸ்தவம்

## தரம் - 6




சமயக் கல்வித் துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# கிறிஸ்தவம்

## தரம் - 6

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

சமயக் கல்வித் துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

கிறிஸ்தவம்
தரம் - 6
ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

முதற்பதிப்பு - 2007
மீள்பதிப்பு - 2009

© தேசிய கல்வி நிறுவகம்

எல்லா உரிமையும் இலங்கை அரசினருக்கே

சமயக் கல்வித்துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

வெளியீடு
கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்காக கிரபிக்டெக் தனியார் நிறுவனத்தினால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

## பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

தற்போதைய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது ஆசிரியர்கள் தமது பாடங்களைக் கற்பிப்பதற்குப் பின்பற்ற வேண்டிய அவசியமான கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகளை மேற்கொள்வதற்கு சிறந்த ஒரு வழியாட்டியாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது நீங்கள், உங்கள் வகுப்பறைச் செயற்பாடுகளை மாணவர் - மையக் கற்றலுக்கு ஏற்ற வகையில் ஒழுங்கமைப்பதற்கான வழிகாட்டலை வழங்குகின்றது. இன்றைய வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை மாணவர் மையமாக ஒழுங்கமைப்பதென்பது எமது இலங்கை ஆசிரியருக்கும் வகுப்பறைக்கும் ஒரு புதிய அனுபவமன்று. எவ்வாறாயினும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி மூலம் மாணவர் மையக் கற்றல் - கற்பித்தல் முறைமையியலுக்கு ஒரு புதிய பண்புக் கூறு கிடைக்கிறது.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது மாணவர்களின் பங்குபற்றுதலை உறுதிப்படுத்தும் வகையில் பாடத்தைத் திட்டமிடுவதற்கு அவசியமான பாதையை வழங்குவதோடு மட்டுமல்லாது அதற்கு அவசியமான சூழலை மதிநுட்பத்துடன் கட்டியெழுப்பவும் உதவுகிறது.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த அடிப்படையானது ஆசிரியர் என்பவர் வெறுமனே அறிவை ஊடுகடத்துபவராக அல்லாது அறிவில் மாற்றத்தை ஏற்படுத்துபவராகவும் இருக்க வேண்டும் என்னும் தத்துவத்தைக் கொண்டுள்ளது. இச்செயற்பாடானது மாணவரை கற்பவர் என்னும் நிலையிலிருந்து அறிவைத் தேடுபவர் என்னும் நிலையை அடைவதற்கும், இதன் மூலம் புதிய அறிவை உருவாக்கவும் உதவுகின்றது. ஆகவே, ஆசிரியர் என்பவர் மாணவருக்கு புதிய அறிவை ஆய்ந்தறிந்து கண்டுபிடிப்பதற்கான வழிகாட்டியாகவும் தூண்டியாகவும் செயற்பட வேண்டும்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த தத்துவமும் செயற்பாட்டு வடிவமைப்பும் பழமையான கற்பித்தல் முறைமையியலையும் சிந்தனைகளால் உண்டாகும் தடைகளையும் தகர்த்தெறிய ஆசிரியர்களைத் தூண்டும் என நம்பப்படுகின்றது. எனவே, ஆசிரியர்கள் புதிய கற்பித்தல் அணுகுமுறைகளையும் கற்பித்தல் முறைகளையும் அவசியம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். புதிய ஆயிரமாம் ஆண்டானது மிகப் பரந்த எல்லையற்ற புதிய அறிவின் தோற்றத்தையும் உருவாக்கத்தையும் கண்டுள்ளது. ஆகவே, ஒவ்வொருவரும் தமது புதிய செயற்பாடுகளை ஒரு முகப்படுத்தித் திட்டமிடுவதற்குப் பழைய முறைகளை மாற்றியமைக்க வேண்டிய தேவையுள்ளது.

ஆசிரியர் தனது கற்பித்தல் பணியில் பயன்படுத்தக்கூடிய அடிப்படையான அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் உயர் அணுகுமுறைகளை நோக்கி அவரை வழிநடத்துவதும் இவ்வகையான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் ஊடாக எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் ஆசிரியர், இவ் அறிவுரைப்பு வழிகாட்டியை உரிய முறையில் கற்று அதனுடைய நோக்கங்களைக் கொண்டு வகுப்பறையில் உச்ச பயனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம், வகுப்பறையை வினைத்திறன் மிக்கதும் தரமானதுமாக்குவதுடன் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை உயர்வடையச் செய்வதற்கும் ஆசிரியர் பெரும் முயற்சி மேற்கொள்ளுவார் என்பது எனது நம்பிக்கையாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் திறம்படத் தயாரித்து வெளியிடுவதற்கு தமது நேரத்தையும் சிறப்புத் திறமைகளையும் பங்களிப்பு செய்த தேசிய கல்வி நிறுவகத்தைச் சேர்ந்த பாட நிபுணத்துவர்களுக்கும் வெளி வளவாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

பேராசிரியர் லால் பெரேரா
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

# முன்னுரை

இலங்கையின் கலைத்திட்டக் கொள்கையில், பாடசாலைப் பாடத்திட்டமானது எட்டு வருடங்களுக்கு ஒருமுறை காலத்திற்கு இயைந்ததாகத் திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றது. இதற்கேற்ப, 2007 ஆம் ஆண்டிலிருந்து. நடைமுறைக்கு வருகின்ற கல்விச் சீர்திருத்தத்தின் கீழ், இப்பாடத்திட்டமும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியும் அறிமுகஞ் செய்யப்படுகின்றன.

இதுவரை நடைமுறையில் இருந்த பாடத்திட்டங்களில் குறித்த பாடத்துடன் தொடர்பான விடயத் தலைப்புகளும் அவற்றின் உள்ளடக்கமும், அமைந்திருந்தமையால் அவற்றைக் கற்பிக்கும் பணி ஆசிரியரின் மீது சுமத்தப்பட்டிருந்தது. இச்செயற்பாடுகள் மூலம் ஏராளமான தகவல்களை மாத்திரம் அறிந்த மாணவர் பரம்பரை ஒன்று உருவானது.

புதிய கலைத்திட்டச் சீர்திருத்தத்தின் கீழ் அறிமுகஞ் செய்யப்படுகின்ற பாடத்திட்டங்களில், அவ்வப் பாடங்களில் மாணவர் அடைந்துகொள்ள வேண்டிய தேர்ச்சிகள் பல இனங்காணப் பட்டுள்ளன. இந்தப் புதிய பிரவேசத்தின் மூலம் அதிகமான விடயங்களைக் கற்ற, அதே நேரம் அவற்றை நடைமுறையில் செயற்படுத்துகின்ற, தேர்ச்சி கொண்ட மாணவர் பரம்பரை ஒன்றை உருவாக்குவது எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால், புதிய பாடத்திட்டத்தைக் கையாளுகின்ற ஆசிரியர்கள் இவ்வேறுபாட்டைச் சரியாகப் புரிந்து கொள்வதுடன், அதில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இந்நூலின் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிப் பகுதியில், புதிய கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு ஒன்று விதந்துரைக்கப்பட்டுள்ளது. இச்செயலொழுங்கின் கீழ் மாணவர் நூலகத்தைப் பயன்படுத்துதல், புத்தகங்கள் வாசித்தல், சுற்றாடலை அவதானித்தல், தகவல் அறிந்தோரைச் சந்தித்து விடயங்களைச் சேகரித்தல், தமது சகபாடிகளிடமிருந்து பல்வேறு விடயங்களைக் கற்றல், தாம் அறிந்தவற்றை அவர்களுடன் பரிமாறிக்கொள்ளல், இயலுமெனின் இணையத்தளம் மூலம் தகவல் திரட்டல் போன்ற கண்டறிதல் மூலமான கற்றல் கலாசாரம் ஒன்றைக் காண முடிகின்றது. இதற்கு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள பாடப்புத்தகத்தினை உசாத்துணை நூலாகக் கொள்ள முடியும். இவ்வாறு கண்டறியப்படுகின்ற தகவல்கள் மிகச் சரியாகவும், ஒழுங்குபடுத்தப்பட்டும் முழுமையாகவும் மாணவர்களுக்கு அமையச் செய்வது ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற பணியாகும். இந்த வகையில் ஆசிரியரின் வகிபாகம் புதிய அறிவுகள் மூலம் போசிக்கப்படுவது அவசியமாகும். இங்கு மாணவர்கள் ஏராளமான விடயங்களைக் கண்டறிந்து பல்வேறு அம்சங்களையும் தெரிந்தவர்களாக மாற்றுகின்றனர். இத்தகைய செயற்பாட்டுக் கற்றற் சூழலானது மாணவர்களைப் பெரிதும் கவர்வதாக அமையும்.

இதற்காக, இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் விதந்துரைக்கப்பட்ட மாதிரிச் செயற்பாடுகளைக் கையாண்டு இன்னும் பல்வேறு செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வதற்கும் இந்நூலை ஒரு வழிகாட்டியாகக் கொள்ளுங்கள். இதனூடாக 'புத்தாக்கத் திறனுடைய ஓர் ஆசிரியராக இருந்து, பல்வேறு புதிய செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வீர்களென எதிர்பார்க்கின்றோம்.

இந்த புதிய வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கின்போது, மாணவர் எப்பொழுதும் செயற்படுபவர்களாகக் காணப்படுவர். இதனால் அவர்களது திறமைகள், ஆற்றல்கள் வெளிக் கொணரப்படும். அவற்றுக்கு நீங்கள் மதிப்பளியுங்கள். அவர்களை உற்சாகப்படுத்துங்கள். இன்னும் மாணவர் சில சந்தர்ப்பங்களில் எதிர்கொள்கின்ற கஷ்டங்கள்/இடையூறுகளை உங்களால் அவதானிக்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில், நீங்கள் உதவி செய்யுங்கள். அயலில் உள்ள சகபாடிக்கு உதவி செய்ய மாணவரை வழிப்படுத்துங்கள். இவ்வாறு செயற்பாட்டின் போது இடம்பெறுகின்ற கணிப்பீட்டுச் செயலொழுங்கானது, சிறந்ததொரு கற்றலுக்கு உதவியாக அமையும்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் செற்பாட்டினை நீடிப்பதற்கான உபகரணமானது, ஒப்படையாக அல்லது பயிற்சியாக மாணவர் கற்றவற்றை மேலும் பலப்படுத்தக்கூடிய விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதனைச் செயற்படுத்துவதில் உங்களது அவதானத்தைச் செலுத்துங்கள். இதனை மாணவரை மதிப்பீடு செய்வதற்கான சந்தர்ப்பமாகவும் ஆக்கிக்கொள்ளுங்கள். இவ்வாறான கற்றல் - கற்பித்தலை நீடிக்கும் உபகரணங்களைத் தயாரித்து, பல்வேறு பயிற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதில் உங்களது கவனத்தைச் செலுத்துங்கள்.

இதனூடாக புதிய உலகிற்குப் பொருத்தமான தேர்ச்சிகளுடன் கூடிய மாணவர் பரம்பரை ஒன்றை உருவாக்குவதும் அதற்குப் பொருத்தமான ஆசிரியர் வகிபாகம், வகுப்பறை, புதிய கற்றல் கலாசாரத்திற்கு ஏற்ப உருவாக வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

விமல் சியம்பலாகொட
உதவிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

## கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி

யாவருக்கும் கல்வி என்னும் நோக்கத்தை மையமாகக் கொண்டு எமது அரசு நாட்டிலுள்ள சகல பாடசாலை மாணவர்களுக்கும் இலவசமாகப் பாடநூல்களை வழங்கி வருகின்றது. அத்துடன் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை ஆக்கி வழங்குவதானது கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் பண்புத்தர விருத்தியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வகுப்பறைக்குள்ளும் அதற்கு வெளியேயும் மாணவர்களின் அறிவுவிருத்திச் செயற்பாட்டுக்கு வழிகாட்டுவோர் ஆசிரியர்களே. மேலும், 'பாடத்திட்டத்தால் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டங்களை நோக்கி மாணவர்களை வழிநடாத்தும் முக்கிய நபரும் ஆசிரியரேயாவார். இந் நோக்கத்தை அடைவதற்கு இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்குக் கைகொடுக்கும். இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களைக் கற்றுப் பின்பற்றுவதன் மூலம் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை அதிக பயனுறுதியுடையதாக மாணவர்களுக்கு வழங்கும் பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களைச் சார்ந்ததாகும். இப் பொறுப்பை உணர்ந்து செயற்படும் நீங்கள் பெறுமதிமிக்க ஒரு வளம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், தேர்ச்சிகள் என்பவற்றையும் வலிமையான சமூக மற்றும் உள்ளார்ந்த திறன்களையும் கொண்ட முழுமையான பிரசைகளை சமூகத்திற்கு வழங்கும் பொறுப்பு உங்களுடையதே. தற்கால உலகின் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய எதிர்கால சந்ததியை நீங்கள் உருவாக்குவீர்கள் என்பதே என் எதிர்பார்ப்பாகும். உங்கள் ஆற்றலை உறுதியாக்குவதன் மூலம் அவ் எதிர்பார்ப்பை வெற்றிகரமாக்குவதற்கு இவ் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்கு உதவும் என உறுதியாக நம்புகின்றேன்.

டபிள்யு.எம்.என்.ஜே புஸ்பகுமார

கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்

'இசுருபாய'

பத்தரமுல்ல

## ஆலோசகர் குழுவும் எழுத்தாளர் குழுவும்

**பணிப்பு** : பேராசிரியர் ஜே.டப்ளியு. விக்ரமசிங்க
பணிப்பாளர் நாயகம்

**ஆலோசனை** : திரு. விமல் சியம்பலாகொட
உதவிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

**ஆலோசனைக் குழு** : அருட்கலாநிதி ஜெயசிறி டி. பீறிஸ்
பேரருட்பணி கெனத் பெனான்டோ

**ஆக்கக் எழுத்தாளர் குழு**

: திருமதி வினித்தா டி சில்வா (BA.dip.Edu . Msc)
திருமதி ஆஷினி பெனான்டோ (BA.dip.Edu. Pr. - Gr -1)
திருமதி ரதிக்கா மென்டீஸ் (BA.dip.Edu . MA)
திருமதி பிரியானி பெனான்டோ
திருமதி நிலாந்தி பெரேரா (பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியை)
திரு. ஹேமசந்திர பெரேரா (BA.dip.Edu.)
திருமதி குளோரி எப்சியா
திருமதி செல்வநிதி பெரேரா (பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியை)

**செயற்றிட்டத் தலைவர்:** அருட் கலாநிதி. ஜயலத் பலகல்ல
பிரதான செயற்றிட்ட அதிகாரி

**கணினி கோர்ப்பும் வடிவமைப்பும்**
செல்வி. எப். நிஸ்மியா அமீர்

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 6.1.0 | விரிவான பாடத்திட்டம் | |
| 6.1.1 | பாட அறிமுகம் | 01 |
| 6.1.2 | பாடத்திட்டத்தின் நோக்கங்கள் | 03 |
| 6.1.3 | வகுப்புக்குரிய தேர்ச்சிகள் | 03 |
| 6.1.4 | பாடத்திட்டம் | 04 |
| | தேர்ச்சி | |
| | தேர்ச்சி மட்டங்கள் | |
| | பாட உள்ளடக்கம் | |
| 6.1.5 | கற்றல் - கற்பித்தல் முறை | 09 |
| 6.1.6 | பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் | 10 |
| 6.1.7 | கணிப்பீடும் மதிப்பீடும் | 10 |
| 6.2.0 | செயற்பாட்டுத் தொடரகம் | 11 |
| 6.2.1 | கற்றல் - கற்பித்தல் முறை அறிமுகம் | 12 |
| 6.2.2 | தர உள்ளீடு | 17 |
| 6.2.3 | செயற்பாட்டுத் தொடரகம் | 18 |
| 6.3.0 | கணிப்பீடும் மதிப்பீடும் | 86 |
| 6.3.1 | கணிப்பீடும் மதிப்பீடும் அறிமுகம் | 87 |
| 6.3.2 | கற்றல் - கற்பித்தலை மேலும் விரிவுபடுத்துவதற்கான கருவிகள் | 90 |

# 6.1.0
# விரிவான பாடத்திட்டம்

## 6.1.1 அறிமுகம்

நற்பண்புள்ள, நன்றிமிக்க சமூகத்தை படைப்பதற்கு அனைவரும் மறையறிவினால் ஊட்டம் பெறுவது அவசியம். எவ்வாறாயினும் மறையறிவு, அறிவுக்கு மாத்திரம் வரையறுக்க முடியாது. அதனால் மாத்திரம் மேற் குறிப்பிட்ட நோக்கை அடைய முடியாது. அதற்காகப் பெற்ற அறிவினை வாழ்வில் இணைத்து நடைமுறைப்படுத்த வேண்டும். சமயக் கல்வி ஒவ்வொரு நபரை போன்றே, சகல சமூகத்தினதும் கோட்பாட்டை ஒழுங்கமைப்பதில் முக்கிய பங்கை வகிக்கின்றது.

புதிய கலைத்திட்டம் தேர்ச்சிகளை மையமாகக் கொண்டுள்ளமை மேற் குறிப்பிட்டதை அடைவதற்குத் தேவையான வழியை வகுக்கும். தேர்ச்சி என்பது, அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவைகளை ஒன்றோடொன்று இணைத்து, அவற்றை வாழ்வின் வழக்கமாகக் கொள்வது என எளிதாகக் குறிப்பிடலாம். தேர்ச்சியை அடையும் வழியாக ஒவ்வொரு பாடப் பகுதிக்கும் அல்லது ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் இணைத்து தேர்ச்சி மட்டம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆசிரியரின் செயலாவது, மாணவன் இத்தேர்ச்சி மட்டத்தை அடைவதற்காக வளப்பகிர்வாளராக (Resouce Person) வழிகாட்டுவது.

சமய பாடத்தைக் கவனத்தில் கொள்ளும்போது, மாணவரை ஒழுங்காக ஓர் தேர்ச்சி மட்டத்தை நோக்கி இட்டுச் செல்லும்போது, மிக பொறுமையுடன் செயலாற்ற வேண்டும். ஏனெனில், மாணவரின் சமய ரீதியான நற்பண்பு வளர்ச்சியை, அப்பியாசங்கள் அல்லது செயற்பாடுகளில் இலகுவாகக் கணிப்பிட முடியாது. அவ்வாறான வளர்ச்சி உடனே நடைபெறும் ஒன்றல்ல. அதனால் ஆசிரியர் மாணவருடன் மிகப் பொறுமையாகச் செயலாற்றுவதுடன், மாணவருக்கு தனது வாழ்வு ஒரு முன் மாதிரியாவதும் அவசியம்.

அநேகமாக மாணவரை நற்பண்புள்ள வாழ்விற்கு இட்டுச் செல்ல முடிவதும், அவருள் மறை விழுமியங்களை வளர்க்கவும் இயலுவது முதலில் ஆசிரியர் நற்பண்புள்ள வாழ்வை வாழும் மறை விழுமியங்களை தம்முள் வளர்த்துக் கொண்டவர் என்பதை மாணவர் புரிந்து கொண்ட பின்பே.

10ஆம், 11ஆம் வகுப்பு மாணவர்களை நோக்கும் போது ஆசியருக்குரிய பங்கு மிக முக்கிய இடத்தை வகிக்கும். பல வேளைகளில் மாணவரின் சமயக் கற்றல் 11ஆம் வகுப்புடன் முடிவடையும். ஆகையால் 6ஆம் வகுப்பில் இருந்து பெற்றுக்கொள்ள முயற்சித்த தேர்ச்சி, இப்பொழுது அவர்களின் சிறந்த வாழ்க்கை எண்ணக்கருக்களாக்கி, பரிபூரண கிறிஸ்தவ வாழ்வை வாழ அவர்களுக்கு முடியும் வகையில் அவர்களை சமூகத்திற்கு அனுப்ப ஆசிரியர் திறமையுள்ளவராக வேண்டும்.

ஆறாம் வகுப்பில் இருந்து பதினோறாம் வகுப்பு வரை கத்தோலிக்க பாடநெறியின் அனைத்து பாடங்களும்

- மூவொரு இறைவன்
- விசுவாச வாழ்வினை செயல்படுத்தல்
- விசுவாச வாழ்விற்கு ஊட்டம்
- செப வாழ்வு

ஆகிய நான்கு ஆய்வுப் பொருளின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே ஒவ்வொரு வகுப்பிலும் அவ் ஆய்வுப் பொருள்களை ஆழமாகக் கற்பதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட அனைத்தும் திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் அவர்களால் குறிப்பிட்ட விசேட கமிட்டி ஒன்றின் மூலம் எழுதப்பட்ட ''கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி'' (Cathechism of the Cathalic Church) எனும் நூலில் வரும் ஆய்வுப் பொருள்களுக்கமைய ஒழுங்கமைந்துள்ளது.

புதிய கலைத்திட்டத்திற்கு ஏற்ப எதிர்பார்ப்பது மாணவரின் கைக்கெட்டும் பாடநூல் வகுப்பில் வாசித்து அதனை கற்பிப்பதல்ல. ஆராய்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு மாணவரை செயற்பாடுகளில் ஈடுபடுத்தல். அதனூடாக இறுதியில் மாணவரை ஓர் தேர்ச்சி மட்டத்திற்கு இட்டுச் செல்வதே. கத்தோலிக்க மறையறிவினை மிகவும் அர்த்தமுள்ளதாகவும், மனங்கவரும் வகையிலும் மாணவரிடம் கொண்டு செல்ல இப்புதிய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி உதவும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

## 6.1.2 பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

- உயிர்த்தெழுந்த கிறிஸ்துநாதரின் அழைப்பை ஏற்று அவரது உயர்ந்த பண்புகளைப் பின்பற்றி வாழுதல்

- இலங்கைக் குடிமக்களாகவும் கிறிஸ்து நாதரைப் பின்பற்றுபவராகவும் இருந்து தமது திறமைகளையும் ஆற்றல்களையும் தேசிய அபிவிருத்திக்குச் செலுத்துவதற்குத் தேவை யான மேலதிகமான ஆற்றல்களை வளர்த்தல்

- அன்பை அடிப்படையாகக் கொண்ட சேவை மனப்பான்மையுடன் சமூகத்தை உருவாக்கு வதற்குத் தேவையான வழிவகைகளைச் செய்து கொடுத்தல்

- இலங்கைக் கலாசாரத்தை மதித்து அக்கலாசாரத்தின் பெறுமானங்கள் மூலம் செபங்கள், தியானங்கள் என்பவற்றைச் சேர்த்துக் கொண்டு வழிபாடுகளை ஒழுங்குசெய்து அர்த்த முள்ள வழிபாடாக நடத்துவதற்கு வழிவகுத்தல்

- தேசிய ரீதியானதும் சமயங்களுக்கிடையிலானதுமான நட்புறவை வளர்ப்பதற்காக, நீடித்து நிலைக்கக்கூடிய மனித தொடர்புகளைக் கட்டியெழுப்புவதன் மூலம் இறை அருளைப் புவியில் விரிவாக்குவதற்கான பங்களிப்பிற்குத் தேவையான பின்னணியை உருவாக்குதல்

- தன்னைச் சூழவுள்ள இயற்கைச் சூழலைக் கடவுளின் கொடை எனக் கருதி அதனைப் பாதுகாத்து விருத்தி செய்வதற்கான படிமுறைகளை மேற்கொள்வதற்குத் தூண்டுதல்

- வாழ்க்கையும் மறைக்கல்வி கற்பதும், இரண்டும் ஒரே செயல் என்பதை ஏற்றுக் கொள்ளுதல்

## 6.1.3 வகுப்பிற்குரிய தேர்ச்சிகள்

1.0 கடவுளின் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஒழுக்க வாழ்வு வாழ்வர்.

2.0 இயேசுவின் வாழ்வை முன்மாதிரியாகக் கொள்வர்.

3.0 கடவுள் அரசின் போதனைகளைப் பின்பற்றி சமுதாயத்தில் நல்வாழ்வு வாழ்வர்.

4.0 திருவிவிலியத்தை நாளாந்த வாழ்வுக்கு வழியாகக் கொள்வர்.

## 6.1.4 கிறிஸ்தவம் - பாடத்திட்டம்

| தேர்ச்சியும் தேர்ச்சி மட்டமும் | விடய உள்ளடக்கம் | பாட வேளை | கற்பித்தல் வளங்கள் |
|---|---|---|---|
| **தலைப்பு : கடவுள்** | | | |
| 1.0 கடவுளின் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஒழுக்க வாழ்வு வாழ்வர்.<br>1.1 விசுவாசத்தோடும் பக்தியோடும் மாட்சியை அனுபவிப்பர். | 1. கடவுளின் அழகிய படைப்பு (தொ.நூ 1:1 - 26) | 02 | பார்த்து உணர்தல் போஸ்டர், இயற்கையின் படைப்புகள், இலை, காய், பூக்கள், குருவி இறகுகள் |
| | 2. ஒழுங்கான, சுழற்சி யான படைப்பின் மகிமை (தொ.நூ 1:14 - 18 | 02 | குருவி இறகுகள் |
| | 3. கடவுள் படைப்பின் பலவிதமான அனுபவங்கள் (மரஞ் செடி கொடிகள்) | 02 | சித்திரம், ஒலிநாடா, வினாக்கொத்து |
| | 4. உயிர் சுபாவத்தை அனுபவித்தல் (விலங்குகளின் உலகத்தில்) | 02 | பார்த்து உணர்தல், சித்திரம் |
| | 5. புதுமைகளான வளர்ச்சி (விதையின் வளர்ச்சி, மிருக விருத்தி, வண்ணத்துப் பூச்சி, தவளை) | 02 | ஒலிநாடா |
| | 6. கடவுள் படைப்பின் பரிபூரணத்துவம் (விஞ்ஞான முறைப்படி) | 02 | பார்த்தல், கலாச்சாரம் |
| | 7. மனிதன் கடவுளின் சாயல் (தொ.நூ 1 : 27) சமத்துவம், வன்முறையை அகற்றல் | 02 | தினசரி பத்திரிகை புகைப்படம், சித்திரம் |
| | 8. மனிதனுக்கு விசேட கொடை தனது படைப்பை நன்மையாக கடவுளின் மகிமைக்காக பாவித்தல் | 02 | தினசரி செய்தித்தாள் புகைப்படம் |

| தலைப்பு : ஆண்டவர் இயேசு | | | |
|---|---|---|---|
| 2.0 இயேசுவின் வாழ்வை முன் மாதிரியாகக் கொள்வர்.<br>2.1 இயேசுவிற்கூடாக வெளிப்படும் கடவுளின் வாழ்வை ஏற்றுக் கொள்வர். | 1. இயேசுவின் மூலம் கடவுளின் பிதாத்தன்மை வெளிப்படுதல் (பரி.லூக்கா 2: 41 - 51) | 02 | வேத வசனங்கள் அடங்கிய மட்டைகள் |
| | 2. இயேசுவின் மூலம் கடவுளை அறிந்து கொள்ளல் (பரி.மாற்கு 2: 1 - 12) | 02 | பரி. வாக்கியங்கள் |
| | 3. கடவுளின் அன்பின் விசேடத்துவத்தை விளங்கிக் கொள்ளல். (காணாமற் போனதை தேடிச் செல்லல்) (பரி. மத்தேயு.18:10 -14) | 02 | இசை நாடகப் பிரதி |
| | 4. ஜெபம் மூலம் கடவுளை ஏற்றுக்கொள்ளல் (பரி. மத்தேயு 7: 9 - 11) | 02 | பாடல்கள் அடங்கிய ஒலிநாடா |
| | 5. கடவுளை பக்திபூர்வமாக ஏற்றுக்கொள்ளல் (பரி. லூக்கா 2: 8 - 20 இடையர்களுக்கு தேவதூதனின் செய்தி) | | |
| | 6. ஆறுதலுக்காக கடவுளை நாடல் பெருஞ்சுமை சுமந்து.... தருவேன். (பரி.மத்தேயு 11:25 - 30) | 02 | விபரங்கள் செய்தித்தாள் |
| | 7. விடுதலை அளிப்பவரின் மரணமும், உயிர்ப்பின் மூலம் கடவுளின் இரக்கத்தின் அனுபவம் | 02 | பிரச்சினைகள் அடங்கிய வினாக்கள். |

| தலைப்பு : கடவுள் அரசு | | | |
|---|---|---|---|
| 3.0 இறையாட்சியின் போதனைகளைப் பின்பற்றி சமுதாயத்தில் நல் வாழ்வு வாழ்வர். | | | |
| 3.1 கடவுளின் பணி செய்ய அழைக்கப்பட்டவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றுவர். | 1. கீழ்ப்படிதல் பரி.மத்தேயு 4:18-20 பரி. லூக்கா 5:5 | 02 | |
| | 2. உடனடி உத்தரவாதம் லேவி எனப்பட்ட மத்தேயு பரி.மத்தேயு 9:9;10 | 02 | திருவிவிலியம் |
| | 3. சமுதாய தடைகளுக்கு மேலாகச் செயற்படல் பிலிப்பு தி.ப 8:26 - 39 | 02 | நிலையான உருவம் |
| | 4. புதுவாழ்வில் பிரவேசித்தல் சவுல் தி.ப 9:1-19 | 02 | பாடல்கள் அல்லது சித்திரங்கள் |
| | 5. வீட்டிலும், சமுதாயத்திலும் தமது செயற்பாடுகள் மார்த்தாள், மரியா பரி.லூக்கா 10:38 - 42 | 02 | செய்தித்தாள் சித்திரம் புகைப்படம் |
| | 6. வெளிப்படையாக சான்றுபகர்தல் சமாரியப் பெண். பரி.யோவான் 4:16-30 | 02 | திருவிவிலியம் |
| | 7. அண்மைக்காலத்தில் கடவுளின் பணிக்காக அழைக்கப்பட்டவர்களின் மூலம் கிடைத்த முன்மாதிரி தியாக சுபாவம்- இவ்லின் கார்ணி | 01 | சித்திரங்கள் புகைப்படங்கள் விபரங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | 8. ஆற்றல்கள் கடவுளின் மாட்சியை வெளிப்படு வதற்கான செயற்பாடு மைக்கல் ஆஞ்சலோ டாவின்சில் | 01 | சித்திரங்கள் புகைப்படங்கள் விபரங்கள் |
| | 9. அஹிம்சையின் செயற்பாடுகள் மாட்டின் லூதர் கிங். ஈ. டபிள்யு. பெரேரா | 01 | பாட புத்தகம் பயண விபரங்கள் உருவங்கள் |
| | 10. தன்னலமற்ற சேவை புளோரன்ஸ் நைடிங்கேல் | 01 | நாட்டியப் பிரதி |
| | 11. தெரேசா அம்மையார் | 01 | பாட புத்தகம் விபரங்கள் |
| | 12. லயனல் மெண்டிஸ் | 01 | பாட புத்தகம் விபரங்கள் |

| தலைப்பு : திருவிவிலியம் | | | |
|---|---|---|---|
| 4.0 திருவிவிலியத்தை நாளாந்த வாழ்வுக்கு வழியாகக் கொள்வர். | | | |
| 4.1 திருவிவிலியத்தில் பழைய ஏற்பாட்டில் விசேடமானவர்களின் உயர்ந்த குணாதிசயங் களை பின்பற்றுவர். | 1. அமைதி - ஈசாக்கு (தொ.நூ. 26:20-23) | 02 | |
| | 2. பின்னடையாத துணிவு யாக்கோபு எனும் இஸ்ரவேல் (தொ.நூ. 32: 22-32) | 02 | |
| | 3. மன்னித்தல் - யோசேப்பு (தொ.நூல் 45:1-15) | 02 | |
| | 4. தாழ்மயான தலைமைத்துவம் மோசே (வனாந்தரத்தில் 40 வருட விசேட சந்தர்ப்பம்) வி.ப 15: 22 - 25, 16: 3 - 8, 18: 24 - 27 | 02 | |
| | 5. மிரியாமும் ஆரோனும் (வி.ப 15: 20 -21) | 02 | |
| | 6. தன்னலமற்ற தன்மை ரூத் - (ரூத் : 1) | 01 | |
| | 7. தவறானவற்றை அகற்றி விடுதல் யோசியா 2. குறிப்பேடு 34: 29-33 | 01 | |

### 6.1.5 கற்றல் - கற்பித்தல் செயன்முறை

திருமறை பற்றிய அறிவு வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும். எனினும் திருமறை அறிவு மாத்திரம் வாழ்க்கைக்குப் பயனளிப்பதில்லை. மாறாக அவ்வறிவு வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். இதுவானது வகுப்பறையில் மட்டுமன்றி அதற்கு வெளியேயும் பின்பற்றப்பட வேண்டும். இதனை எவ்வாறு மேற்கொள்வது என்ற வினாவுக்கு விடை தேடினால் பல்வேறு வழிமுறைகள் மூலம் இதனை மேற்கொள்ளலாம். வகுப்பறையில் கற்கின்ற அம்சங்களும் செயன்முறைகளும் வாழ்க்கையில் நடைமுறைக்கு வர வேண்டும். அப்போது தான் திருமறை மீதான பற்று ஏற்படும்.

- திருவிருந்து வழிபாடு ஒன்றை ஏற்பாடு செய்து அதில் ஆர்வத்தோடு பங்கேற்றல்
- வருடத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் நிறைவேற்றும் வழிபாடுகளில் கலந்துகொள்ளல் (உதாரணமாக பெரிய வியாழன், பெரிய வெள்ளி, உயிர்ப்பு ஞாயிறு, நத்தார் போன்றன)
- திருச்சபையின் செயற்பாடுகளில் பங்கேற்றல்
- நோயாளி ஒருவரை தரிசிக்கச் சென்று ஆறுதற்படுத்தல்
- ஏழைப் பிள்ளைகளுக்கு உடை, உணவு, பானம், புத்தகம், பணம் போன்றவற்றை அன்பளிப்பாக வழங்குதல்
- முதியோர் இல்லமொன்றுக்குச் சென்று அதனைச் சுத்தம் செய்தல்
- முதியோருடன் பணிவாகக் கதைப்பதும், அவர்களை உபசரிப்பதும்
- வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்று அங்கு இடம் பெறும் திரு வழிபாடுகளில் பங்கேற்றல்
- செபம், தியானம், திரு வழிபாடுகளில் கலந்து கொள்ளல்
- ஒரு செயலை ஆரம்பிக்கும் போதும் அதன் முடிவின் போதும் திரு வழிபாடு மேற்கொள்ளல்

இவ்வாறான வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதனூடாக வகுப்பறையில் கற்கின்ற அம்சங்களுக்கும் நடைமுறை திருமறை வாழ்வுக்கும் இடையில் தொடர்புண்டு என்பதை மாணவர்கள் புரிந்து கொள்கின்றனர்.

மேற்கூறப்பட்ட மாதிரிகள் தவிர்ந்த வேறு வழிமுறைகளையும் பின்பற்றுவதற்கான சந்தர்ப்பங் களை மாணவர்களுக்கு ஏற்பாடு செய்து கொடுப்பதற்கு அவகாசத்தை இப்பாடத்திட்டம் ஆசிரியர்களுக்கு வழங்கியுள்ளது.

## 6.1.6 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

1. பாடசாலையில் தவணை ஒவ்வொன்றிலும் குறைந்தது ஒரு முறையேனும் திருவிவிலிய வாசிப்பில் அல்லது திரு வழிபாட்டில் ஈடுபடச் செய்தல்

2. மாணவர்களது ஆன்மீக வளர்ச்சிக்குத் திருச்சபையின் வழிகாட்டல்களைப் பெற்றுக் கொள்ள உற்சாகப்படுத்துதல்

3. சமய, கலாசார சங்கங்களை வகுப்பு மட்டத்தில் ஒழுங்கு செய்தல்

4. சமய கருத்துக்களை நடைமுறைப்படுத்தும் விதமாக சிரமதானம் போன்ற செயற்றிட்டங் களை நடைமுறைப்படுத்தல்

5. திருச்சபையின் செயற்பாடுகளில் பிள்ளைகளைப் பங்கேற்கச் செய்தல்

6. பல்வேறு சமயங்களுக்குரிய புனித தலங்களைத் தரிசிப்பதனூடாகவும் அச்சமயங்களின் பெரியார்களைச் சந்திப்பதனூடாகவும் குறித்த அச்சமயங்களுக்கு மதிப்பளிக்க வகை செய்தல்

## 6.1.7 கணிப்பீடும் மதிப்பீடும்

கணிப்பீட்டு மதிப்பீட்டை பின்வரும் முறைகளினூடாக மேற்கொள்ளலாம்.

- எழுத்துப் பரீட்சை
- குறிப்புப் பதிவேட்டின் வாயிலாக
- ஆக்கங்கள்
- வரைபடங்கள்
- ஒப்படை
- செயற்றிட்டம்
- சுருக்கமான எழுத்துப் பரீட்சை
- அவதானித்தல்
- முறைசார்ந்த பரீட்சை
- முழுப் பரீட்சை

# 6.2.0
# செயற்பாட்டுத் தொடரகம்

### 6.2.1 கற்றல் - கற்பித்தல் அறிமுகம்

இக்கற்கை நெறிக்குரிய கற்றல் - கற்பித்தல் முறையியலைத் தீர்மானிக்கையில், தேடி ஆய்தலை அடிப்படையாகக் கொண்டு, மாணவரது தேர்ச்சிகளை உருவாக்கத்தக்க வகையில் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளைத் திட்டமிடுவது குறித்துக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாறாகத் தேர்ச்சி சார் கல்விக்காக ஆயத்தம் ஆகும்போது ஆசிரியரது வகிபாகத்திலும் தெளிவான மாற்றம் எதிர்பார்க்கப்படுகிறது.

பண்டைக் காலந்தொட்டு பரவலாக நடைமுறையிலிருந்த மரபு ரீதியான கடத்தல் வகிபாகமும் (Transmission Role), பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல் வகிபாகமும் (Transaction Role) எமது வகுப்பறைகளில் தற்போதும் கூட அரசோச்சுவதைக் காண முடிகின்றது. இன்று பாடசாலையை விட்டுச் செல்லும் பிள்ளைகளின் கற்பனைத் திறன்கள், தனியாள் திறன்கள், சமூகத் திறன்கள் போன்றவறை எல்லாம் சீர் குலைந்துள்ள நிலையில் கற்றல் - கற்பித்தல் முறையியல் அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் அதனை எவ்வாறு செய்வது என்பதையும் இனங்காணல் கடினமாகவுள்ளது.

கடத்தல் வகிபாகத்தில் தான் கற்கவேண்டிய அனைத்தையும் அறிந்தவர் ஆசிரியரே என மாணவர் ஏற்றுக்கொள்வர். மாணவருக்கு எதுவுமே தெரியாது எனக் கருதும் ஆசிரியர் தமது அறிவை மாணவருக்குக் கடத்துபவராகச் செயற்படுகின்றார். ஆசிரியரிடத்தே இருந்து மாணவருக்கு அறிவு கடத்தப்படுதல் மாத்திரம் இடம்பெறும். இவ்வகிபாகம் விரிவுரை போன்றதாகவே அமையும். இக்கற்றல் - கற்பித்தற் செயன்முறை மாணவரது சிந்தனையை கற்பனையை தட்டியெழுப்புவதிலோ அவர்களது ஆளிடை மற்றும் சமூகத்திறன்களை விருத்தி செய்வதிலோ கனிசமான பங்களிப்பைச் செய்வதில்லை.

ஆசிரியர் வகுப்பறையில் நடத்தும் கலந்துரையாடல், கொடுக்கல் வாங்கல் வகிபாகத்தின் தொடக்கமாகும். ஆசிரியர்களுக்கும் மாணவருக்கும், பின் மாணவருக்கும் ஆசிரியருக்கும் இடையிலான கருத்துப் பரிமாற்றமும், அதனைத் தொடர்ந்து உருவாகும் மாணவருக்கும் மாணவருக்கும் இடையிலான இடைத்தொடர்புகளும் படிப்படியாக ஓர் உரையாடலாக மாற்றம் பெறும். அறிந்தவற்றிலிருந்து அறியாதவற்றிற்கும், எளியதிலிருந்து சிக்கலானவற்றுக்கும், வரும்படி (தூல நிலையிலிருந்து கருத்துநிலைக்கும்) மாணவர்களை இட்டுச் செல்வதற்காக ஆசிரியர் தொடர்ந்து வினாக்களை விடுப்பார்.

தேர்ச்சி மட்டக் கல்வியில் மாணவர்களது பணிகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. வகுப்பில் ஒவ்வொரு மாணவனும் மாணவியும் அந்தந்தத் தேர்ச்சியில் குறைந்த பட்சம் அண்ணளவும் பாண்டித்திய மட்டத்தையேனும் அடையத்தக்க வகையில் தலையிட்டு வளவாளராக (Resource Person) ஆசிரியர் செயற்படுவார். கற்றலுக்குத் தேவையான உபகரணங்களையும் ஏனைய வசதிகளையும் கொண்ட கற்றல் நோக்குதல் மாணவரது இயலுமைகளையும் இயலாமைகளையும் இனங்காணல். தேவையான முன்னூட்டலும் பின்னூட்டலும் வழங்கி மாணவரது கற்றலை மேம்படுத்தல், வகுப்பறைக்கு அப்பாலும் கற்றல் - கற்பித்தலை இட்டுச் செல்வதற்காகப் பொருத்தமான உபகரணங்களைத் தயார்ப்படுத்தல் போன்றவை எல்லா ஆசிரியர்களாலும் ஆற்றப்பட வேண்டிய அடிப்படைப் பணிகளாகும். மேற்போன்றவாறான பணிகளை உள்ளடக்கிய ஆசிரியர் வகிபாகமே நிலைமாற்ற வகிபாகம் (Transformation Role) எனப்படுகின்றது.

இதன் முதலாம் பகுதியில் பாடத்திட்டம் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகப் பயன்படுத்தத்தக்க செயற்பாட்டுத் தொடர் இரண்டாம் பகுதியில் அடக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்பாடும் குறைந்தபட்சம் மூன்று படிமுறைகள் அடங்கும் வண்ணம் தயாரிக்கப்பட்டுள்ளது. மாணவரைக் கற்றலின்பால் ஈர்ப்பதே செயற்பாட்டின் முதலாவது படிமுறையினால் தொடர்புறுத்தும் படிமுறை (Engagement Step) எனப்படுகிறது. இதன் தொடக்கத்தில் ஆசிரியர் கொடுக்கல் வாங்கல் வகிபாகத்தின் பண்புகளை வெளிக்காட்டியவாறு மாணவருடன் சம்பாசிப்பார். இச்சம்பாசனை பின்னர் விருத்தி செய்து கொள்ள வேண்டிய அடிப்படைத் தேர்ச்சிகளுடன் தொடர்புடைய முன்னறிவு நினைவு கூரப்படும். மேலும் செயற்பாடுகள் குறித்த கோடிகாட்டல்களும் வழங்கப்படும். இவ்வாறான கருத்துப் பரிமாற்றத்துக்காக ஆசிரியர் பல்வேறு உத்திகளைக் கையாளலாம். வினாக்கள் கேட்டல், படங்களைக் காட்சிப்படுத்தல், புதினத்தாள் நறுக்குகளை முன்வைத்தல், காட்டி மறைக்கும் அட்டைகளைக் (Flash Cards) காட்டுதல் போன்ற தூண்டல் முறைகளைக் கையாளல், பிரச்சினைகள், புதிர்கள், விவகார ஆய்வு (Case study) போன்றவற்றை முன்வைத்தல், சம்பாசனைகள், போலச் செய்தல்கள், பாடங்கள், செய்து காட்டல்கள் (Demonstrations), போன்றவற்றை முன்வைத்தல்; ஒலிநாடாக்கள், ஒலி - ஒளி நாடாக்கள் போன்றவற்றைப் பயன்படுத்தல் போன்ற பல்வேறு உத்திகளை இதற்காக ஆசிரியர் பயன்படுத்தலாம். சுருக்கமாகக் கூறுவதெனின், பின்வரும் மூன்று நோக்கங்களையும் அடைவதற்கு இவர்களைக் கொண்டே செயற்பாட்டின் முதலாவது படிமுறை நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

- வகுப்பின் கவனத்தைக் கவர்தல்
- தேவையான முன்னறிவை நினைவு கூர்வதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பளித்தல்
- செயற்பாட்டின் இரண்டாம் படிமுறையின்போது மாணவரை ஈடுபடுத்த எதிர்பார்க்கும் தேடியாய்வின் அடிப்படை அம்சங்களை அம்மாணவர்களுக்கு அறிமுகஞ் செய்தல்

மாணவருக்குக் கண்டறியும் வாய்ப்பை வழங்குவதற்காகவே செயற்பாட்டின் இரண்டாம் படிமுறை திட்டமிடப்பட்டுள்ளது. கண்டறிதலுக்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தற் படிவத்தை அடிப்படையாகக் கொண்டே மாணவர் கண்டறிகையில் ஈடுபடுவர். பிரச்சினையின் வெவ்வேறு அம்சங்களைக் குழுநிலையில் கண்டறிந்து ஒத்துழைத்துக் கற்கத்தக்க வகையில் இக்கண்டறிகையை ஆசிரியர் திட்டமிடல் வேண்டும். தரப்பட்டுள்ள மூல வளங்களைப் பயன்படுத்தி விழிப்புணர்வுடன் குழுக் கலந்துரையாடலை நடத்தியவாறு மாணவர்கள் கண்டறிகையில் ஈடுபடுவதால் இப்படிமுறையின் சிறப்பியல்பாகும். தொடர்ந்தும் இவ்வாறான குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுவதே தன்னடக்கம், ஏனையோரின் கருத்துக்களுக்குச் செவிமடுத்தல், ஏனையோருடன் ஒற்றுமையாகச் செயற்படல், ஏனையோருக்கு உதவி புரிதல், நேர முகாமை, உயரிய தரமுடைய உற்பத்திகளைப் பெறல், நேர்மை போன்ற அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான முக்கியமான பல தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்வதற்கு இப்படிமுறையினூடாக மாணவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும்.

கண்டறிகைக்காக மாணவரை வழிப்படுத்துகையில் மாணவர் குழுக்களின் தலைமைத்துவம் குறித்து ஆசிரியர் முடிவெடுத்தலாகாது. மாறாக மாணவர் குழுவில் ஒருவர் தலைவராக உருவெடுப்பதற்கான சூழ்நிலையை உருவாக்குதல் ஆசியரின் பொறுப்பாகும். இலை மறை காயாகக் காணப்படும் ஆற்றல்கள் வெளிக்கொணரப்பட்டு தருணத்திற்கு ஏற்பத் தலைமைத்துவத்தை ஏற்கும் வாய்ப்பு மாணவருக்குக் கிடைக்க இது வழிகோலும்.

செயற்பாட்டின் மூன்றாம் படிமுறையின் போது, ஒவ்வொரு குழுவுக்கும் தாம் கண்டறிந்தவற்றை அதாவது தமது கண்டறிகையின் பெறுபேறுகளை ஏனையோரும் அறிந்து கொள்ளும் பொருட்டு முன்வைப்பதற்கான வாய்ப்பு வழங்கப்படும். அடிப்படையான முன்வைப்புக்களை மாணவருக்குத் தூண்டுவதே இங்கு ஆசிரியரின் பணியாகும்.

ஒவ்வொரு மாணவனுக்கும் மாணவிக்கும் பொறுப்புக்களை ஆற்றும் வாய்ப்புக் கிடைக்கும் வகையில் முன்வைப்பைத் திட்டமிட்டுக் கொள்ளுமாறு மாணவரை வழிப்படுத்தல் பயனுடையதாகும். வழக்கமாக ஆசிரியரின் குரல் ஒலிக்கும் வகுப்பறையில் மாணவ மாணவியரின் குரல் ஓங்கி ஒலிப்பதற்கு வாய்ப்புக் கிடைத்தல், மாணவர் தாம் கண்டறிந்தவற்றுக்கு விளக்கமளித்தலுடன் (Explanation) தொடர்புடைய இப்படிமுறையின் சிறப்பியல்பாகும்.

இரண்டாம் படிமுறையில், கண்டறிந்தவற்றை விரிவுபடுத்தும் (Eleboration) வாய்ப்பு மூன்றாம் படிமுறையின்போது வழங்கப்படும். ஒவ்வொரு குழுவும் தத்தமது முன்வைப்பை நிறைவு செய்த பின்னர், அது தொடர்பாக ஆக்கபூர்வமாக கருத்துக்களைத் தெரிவிக்குமாறு முதலில் அந்தந்தக் குழுவின் அங்கத்தவர்களுக்கும் பின்னர் ஏனைய குழுக்களுக்கும் வாய்ப்பளிக்கப்படும். இறுதியில் முழுவதையும் மீட்டு ஆய்வு செய்யும் (Review) பொறுப்பு ஆசிரியரையே சாரும். மாணவரது கண்டறிகையில் அடக்கும் முக்கியமான சகல விடயங்களுக்கும் தெளிவுபடுத்தப்படும் வகையிலும் எண்ணக்கருக்களும் கொள்கைகள் கோட்பாடுகளும் மாணவரது மனதில் தெளிவாகப் பதியும் வகையிலும் மீட்டாய்வை முன்வைத்தல் ஆசிரியரின் பொறுப்பாகும்.

வகுப்பறையில் கற்றல் - கற்பித்தற் செயன்முறை எதிர்பார்க்கப்பட்ட வகையில் வெற்றிகரமாக நடைபெறுகிறது என்பதை இடையறாது தேடியறிதல் இச்செயன்முறையை நடைமுறைப்படுத்தும் ஆசிரியரின் பிரதான பொறுப்பாகும். இதற்காகக் கணிப்பீட்டையும் மதிப்பீட்டையும் பயன்படுத்த வேண்டும். திட்டமிட்ட செயற்பாடு தொடர்பாகக் கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டின் போது இதற்காகப் போதிய அவகாசத்தைப் பெறுவதற்கான வாய்ப்பு ஆசியருக்கு வழங்கப்பட்டுள்ளது. செயற்பாட்டின் இரண்டாவது படிமுறையின்போது மாணவர்கள் கண்டறிகையில் ஈடுபட்டிருக்கையில் கணிப்பீட்டையும் (Assessment), செயற்பாட்டின் மூன்றாவது படிமுறையின் போது மாணவர் தம் கண்டறிந்தவற்றை விளக்குகையில் மதிப்பீட்டையும் (Evaluation) நடத்துவதற்கு ஆசிரியருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. கணிப்பீடும் மதிப்பீடும் பற்றிய விரிவான விளக்கம் இவ்வாவணத்தில் பிரிதொரு இடத்தில் தரப்பட்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்ட கற்றல் - கற்பித்தல் முறையியல், நிலைமாற்ற வகிபாகத்தை நடைமுறைப்படுத்தும் வாய்ப்பை ஆசிரியருக்கு வழங்குகின்றது. இச்செயன்முறையின்போது குழுநிலைக் கண்டறிகை முதலிடம் பெறுகின்றது. கொடுக்கல், வாங்கல், உரையாடல், சிற்றுரை போன்றவற்றில் ஈடுபடுவதற்கு ஆசிரியருக்கு வாய்ப்புக் கிடைக்கின்றது. முதலாவது படிமுறையின்போது கொடுக்கல் வாங்கலுக்கும் உரையாடலுக்கும் வாய்ப்புக் கிடைக்கின்றது. இறுதிப் படிமுறையின்போது மீட்டாய்வை நடத்துகையில் சிற்றுரை நடத்துதல் எண்ணக்கருக்களை வலியுறுத்திப் பதித்தல் ஆகியவற்றுக்கு வாய்ப்புக் கிடைக்கின்றது. புத்தாயிரமாம் ஆண்டின் முதலாவது கல்வி மறுசீரமைப்பிற்கு அமைவாக முன்வைக்கப்படும் இக்கலைத்திட்டத்துடன் தொடர்புடைய கற்றல் - கற்பித்தல் முறையியலை அபிவிருத்தி செய்யும்போது ஆசிரியரின் நிலைமாற்ற வகிபாகம் தொடர்பாக மட்டுமன்றி கடத்தல், வகிபாகம், கொடுக்கல் வாங்கல் வகிபாகம் ஆகியவற்றின் குணாம்சங்களும் கவனத்திற் கொள்ளப்பட்டன என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

## 6.2.2 தரவிருத்தி உள்ளீடுகள்

- திருவிவிலியம்
- தரம் 6 பாடப்புத்தகம்
- பயிற்சிப் புத்தகம்
- திருவிவிலியப் படங்கள்
- திருவிவிலியத்திலுள்ள இடங்கள், சம்பவங்கள் உள்ள படங்கள்
- சக்கேயு, பவுலின் அழைப்பு உள்ள படங்கள்
- இயேசு திருமுழுக்குப் பெற்ற படம்
- புகழ் பெற்றவர்களின் படங்கள்
- நீதிமன்ற விசாரணை படம், நீதிமன்ற நிகழ்ச்சிப்படம்
- போஷாக்குக் குறைந்த பிள்ளைகளின் படங்கள்
- யுத்தம், துஷ்பிரயோகம் உள்ள நாடுகளின் படங்கள், நிழற்படங்கள்
- தலைப்புச் செய்திகள்
- பிளாங் சீட் (Half sheed)
- டிமைன் பேப்பர், மார்க்கர் பேனை
- வீடு கட்டுவதற்கான திட்டம் (பிளான்)
- வீடு கட்டுவதற்குத் தேவையான பொருட்கள் (சிமெந்து, மணல், கருங்கல்)
- முரசு பறைசாற்றுபவனின் உடை
- ரபான்
- மண் நிறைந்த பேணி 2
- பயறு வளர்ந்த பேணி 2
- கத்தரிக்கோல்
- கெசட் ரெகோடர்
- வீடியோ இயந்திரம்
- தொலைக்காட்சிப் பெட்டி
- V.C.D யும் CD யும்
- வீடியோ படங்கள்
- ஒலி நாடா
- தினசரிப் பத்திரிகை
- வார பத்திரிகை

# 6.2.3 செயற்பாட்டுத் தொடரகம்

| | |
|---|---|
| தேர்ச்சி 1.0 : | கடவுளின் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஒழுக்க வாழ்வு வாழ்வர். |

தேர்ச்சி மட்டம் 1.1 : விசுவாசத்துடனும் பலத்துடனும் இறை மாட்சியை அனுபவிப்பர்.

செயற்பாடு 1.1 : இறைவனின் அழகிய படைப்பை அனுபவிப்போம்.

நேரம் : 80 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :
- திருவிவிலியம் (தொ.நூ. 1:1-26)
- டிமைன் கடதாசி, நிறப் பேனைகள்
- ஒப்படைத்தாள்

கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

படி 1.1.1 :
- மாணவர்களைச் சூழலின் பொருத்தமான இடத்துக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- சுற்றியுள்ள சூழலை அவதானிப்பதற்கு இடமளியுங்கள்.
- அவர்கள் பெற்றுக்கொண்ட அனுபவத்துடன் வகுப்பறைக்குச் செல்லுங்கள்.
- சூழலில் பெற்றுக்கொண்ட அனுபவங்களை வகுப்பறையில் முன்வைப்பதற்கு சில மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.
- கீழே தரப்பட்ட கருத்துக்களை வெளிப்படுத்தும் வண்ணம் கலந்துரையாடலை நடத்துங்கள்.

| |
|---|
| • இறை தந்தை உலகத்தைப் படைத்தார் என்பதை,<br>• அந்த உலகம் அலங்காரமானது என்பதை,<br>• அவர் படைத்த உலகில் பலவிதமானவர்கள் உண்டு என்பதை<br>• நாம் வாழ்வது கடவுள் படைத்த இந்த சூழலுக்குள் என்பதை |

படி 1.1.2 : • வகுப்பு மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரியுங்கள்.

• தொ.நூ. 1:1-26 பகுதிகளை வாசிப்பதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.

• டிமைன் கடதாசி, நிறப் பேனா கொடுங்கள்.

• ஒப்படைத்தாளைக் கொடுங்கள்.
(ஒப்படை : கடவுளின் அழகிய உலகத்தை சித்திரமாக்குங்கள்.)

படி 1.1.3 : • குழுவை திறந்தவெளி வகுப்பாக முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.

• முன்வைக்கப்பட்ட கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு கீழே தரப்பட்ட கருத்துக்களில் அவதானத்தைச் செலுத்திக் கலந்துரையாடுங்கள்.

- உலகம் கடவுளால் படைக்கப்பட்டது என்பதை,
- உலகம் அழகாகவும், மனிதரின் உபயோகத்திற்காகவும் படைக்கப்பட்டது என்பதை,
- படைப்பை விருத்தி செய்வதும், பாதுகாப்பதும் எமது கடமை என்பதை,
- ஓய்வு நாளை ஓய்வாகவும் தூயதாகவும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை.

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- உலகம் கடவுளின் படைப்பு என்பதை ஏற்றுக்கொள்வர்.
- கடவுள் உலகத்தில் படைத்தவைகளை சித்திரமாக வரைவர்.
- அழகிற்காகவும், மனிதரின் பிரயோசனத்திற்காகவும் படைத்தவற்றில் 6ஐப் பெயரிடுவர்.
- படைப்பை பாதுகாக்க வேண்டும் என்பதை பற்றி ஐந்து கருத்துக்களை முன்வைப்பர்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்

- உங்களுக்குத் தரப்பட்ட விவிலியப் பகுதிக்கூடாக அவதானத்தைச் செலுத்துங்கள்.
- விவிலியப் பகுதியின் கருத்துக்களை வெளிப்படுத்துங்கள்.
- கடவுள் உலகத்தைப் படைத்தார் என்பதைச் சித்திரத்தின் மூலம் எடுத்துக் காட்டுங்கள்.

**தேர்ச்சி 1.0: கடவுளின் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஒழுக்க வாழ்வு வாழ்வர்.**

தேர்ச்சி மட்டம் 1.2 : படைப்பை அதிகமாக விருத்தியடையச் செய்யப் பங்களிப்பர்.

செயற்பாடு 1.2 : ஒழுங்கான, சுழற்சியான படைப்பின் மாட்சியை அனுபவிப்போம்.

நேரம் : 80 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :
- திருவிவிலியம் (தொ.நூ. 1:14-18)
- மழை பெய்யும் நீர் வட்டத்தைக் காட்டும் படம்
- சில பூக்கள், பழங்கள், செடிகள் இவற்றில் இரண்டு, இரண்டு

கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

படி 1.2.1 :
- மழைவீழ்ச்சி நீர்வட்டத்தைக் காட்டும் படத்தை வகுப்பில் முன்வைக்கவும்.
- மழை பெய்யும் முறைகளைப் பற்றிக் கலந்துரையாடிக் கடவுளின் படைப்பை மாட்சிமைப்படுத்துங்கள்.
- 
  - மரஞ்செடி, கொடிகள், நீர் வீழ்ச்சிகள் அனைத்தையும் படைத்தவர் கடவுள் என்பதை,
  - மரஞ்செடி, கொடிகள், நீர் வீழ்ச்சிகள் மனிதரின் உபயோகத்திற்காக கொடுத்தார் என்பதை,
  - மரஞ்செடி, கொடிகளையும், நீர் வீழ்ச்சிகளையும் கொடுத்த எமது கடவுளுக்குத் துதி செலுத்த வேண்டும் என்பதை,
  - மரஞ்செடி, கொடிகளையும் பாதுகாத்தல் எமது கடமை என்பதை
  - மரஞ்செடி, கொடிகளினதும், நீர் வீழ்ச்சிகளின் நிகழ்வுகள் யாவும் சுழற்சியாகவும், ஒழுங்காகவும் நடைபெறுகின்றன என்பதை

படி 1.2.2 :
- தொ.நூ. 1:14-18 பகுதியை அமைதியாய் வாசிப்பதற்கு மாணவர்களை உட்படுத்துங்கள்.
- செடி, கொடிகளிலும், பாய்ந்தோடும் நீர் வீழ்ச்சிகளிலும் ஒரு ஒழுங்கமைப்பும், சுழற்சியும் உண்டு என்பதைக் குறித்துக் கலந்துரையாடுங்கள்.
- முன்வைத்த கருத்துக்களை அட்டவணைப்படுத்துங்கள்.

படி 1.2.3 :

- கொண்டு வந்த பூக்கள், பழங்கள், செடிகள் என்பவற்றை பிள்ளைகளின் கையில் கொடுத்து அவற்றை அவதானிப்பதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.
- அவைகள் பலவிதமாக வேறுபட்டதாகக் காணப்படுகின்றன என்பதை, கலந்துரையாடுவதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.

> - கடவுளின் பலவிதமான படைப்பிற்குள் கடவுளின் மாட்சி வெளிப்படும் என்பதை,
> - கடவுளின் படைப்பானது அழகும், ரம்மியமுமானது என்பதை,
> - செடி, கொடிகளில் சழற்சியான நிகழ்வுகள் உண்டு என்பதை
> - செடி, கொடிகளையும், நீர் ஓடைகளையும் பாதுகாத்து விருத்தியடையச் செய்வது எமது கடமை என்பதை,
> - கடவுள் மனிதரின் உபயோகத்திற்காக மரஞ் செடி, கொடிகள், நீர் ஓடைகளைத் தந்தார் என்பதை

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- செடி, கொடிகள், நீர் ஓடைகளைக் கொடுத்தமைக்காக நன்றி கூறி பாடல்/கவிதையை உருவாக்குவர்.
- செடி, கொடிகளில் உள்ள வேறுபாடான தன்மைகள் மூன்றினைப் பெயரிடுவர்.
- பழங்கள், பூக்களில் உள்ள அழகைப் பற்றி இரண்டு கருத்துக்களை எழுதுவர்.
- மரங்கள், நீர் வீழ்ச்சிகள் மூலம் எமக்குக் கிடைக்கும் நன்மைகள் நான்கினை அட்டவணைப்படுத்துவர்.
- மரங்களை விருத்தி செய்து பாதுகாக்கும் முறையைப் பற்றி ஐந்து கருத்துக்களை முன்வைப்பர்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்

- நீங்கள் வாசிக்கக் கேட்ட விவிலியப் பகுதியில் அவதானத்தைச் செலுத்துங்கள்.
- அதன் கருத்துக்களைச் சேகரியுங்கள்.
- சுழற்சியான படைப்பின் கருத்தக்களைச் சேகரியுங்கள்.
- கடவுளின் படைப்பானது பலவிதமானது என்பதின் கருத்துக்களை முன்வையுங்கள்.

**தேர்ச்சி 1.0 : கடவுளின் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஒழுக்க வாழ்வு வாழ்வர்.**

தேர்ச்சி மட்டம் 1.3 : விசுவாசத்துடனும் பக்தியுடனும் மாட்சியை அனுபவிப்பர்.

செயற்பாடு 1.3 : கடவுள் படைப்பின் பலவிதமானவற்றை அனுபவிப்போம்.

நேரம் : 80 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :
- தானியங்கள் (பயறு) அல்லது விதைகள்
- யோகட் கப்
- மண்ணும், நீரும்
- நடப்பட்ட செடி

கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

படி 1.3.1 :
- கொண்டு வந்த விதை, யோகட் கப்பை பிள்ளைகளுக்குக் கொடுங்கள்.
- விதையை நடுவதற்கான அறிவுரையை வழங்குங்கள்.
- விதை வளரும் சந்தர்ப்பத்தைக் கலந்துரையாடுங்கள்.

- கடவுள் படைப்பில் செடி, கொடிகளும் அடங்கும் என்பதை,
- செடி, கொடிகள் ரம்மியமானது என்பதை,
- மனிதரின் பிரயோசனத்திற்காக செடி, கொடிகள் கொடுக்கப் பட்டன என்பதை,
- செடி, கொடிகளைப் பாதுகாப்பது எமது கடமை என்பதை
- சரியான முறையில் பாவிக்க வேண்டுமென்பதை

படி 1.3.2 :
- நடப்பட்ட செடிகளை அவதானிப்பதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.
- சிறிய விதை பெரிய மரமாகும் முறையை விளக்குங்கள்.
- முன்வைத்த கருத்துக்களை அட்டவணைப்படுத்துங்கள்.

படி 1.3.3 : • மரங்களால் கிடைக்கும் நன்மைகளை அட்டவணைப் படுத்துவதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.

• செடி, கொடிகளைப் பாதுகாப்பதைப் பற்றிப் பத்து வசனங்கள் எழுதுவதற்கு அறிவுரை கூறுங்கள்.

• செடி, கொடிகள் வளருவதற்கு உதவும் கடவுளுக்கு நன்றி கூறி ஒரு விண்ணப்பத்தை முன்வைக்க பிள்ளைகளுக்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.

- சிறிய விதையில் பெரிய விசாலமான மரம் உண்டாகும் என்பதை,
- கடவுள் அவைகளை வளர்ச்சியடையச் செய்கிறார் என்பதை,
- படைப்பின் புதுமைகள் இன்னும் விருத்தியடைகின்றன என்பதை,
- இப்படைப்பின் மூலம் மனிதர் பயன் அடைகின்றனர் என்பதை,
- கடவுளுக்கு நன்றி கூறி அவைகளைப் பாதுகாப்பது நாம் செய்ய வேண்டிவைகளாகும் என்பதை

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- விதையை நடுவதற்கு ஆர்வம் கொள்வர்.
- வகுப்பறையின் முன்னால் பூந்தோட்டங்களை அமைப்பர்.
- செடி,கொடிகளைப் பாதுகாத்துக் கொள்ளும் முறைகளை எழுதிக்காட்டுவர்.
- மரங்களின் பயன்கள் மூன்றை எழுதுவர்.
- செடி, கொடிகளுக்காகவும் அதன் வளர்ச்சிக்காகவும் நன்றி கூறி பிரார்த்திப்பர்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்

- கொண்டு வந்த விதையை நடுவதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.
- அதற்குத் தேவையான உரம், தண்ணீர், சூரிய ஒளியைப் பெற்றுக் கொடுங்கள்.
- அதன் வளர்ச்சியை அவதானித்து அட்டவணைப்படுத்துங்கள்.
- கடவுளின் படைப்பின் பல்வேறு விதங்களைப் பற்றி விபரங்களைச் சேகரியுங்கள்.

| | |
|---|---|
| தேர்ச்சி | 1.0: கடவுளின் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஒழுக்க வாழ்வு வாழ்வர். |

தேர்ச்சி மட்டம் 1.4 : விசுவாசத்துடனும் பக்தியுடனும் மாட்சியை அனுபவிப்பர்.

செயற்பாடு 1.4 : உயிர்களின் பாவத்தை அனுபவிப்போம்.

நேரம் : 80 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :
- நீர்வாழ் விலங்குகள், பறவைகள், ஊர்வன, மிருகங்கள் என்பவற்றின் உருவப் படங்கள்.
- விலங்குகளைப் பாதுகாப்பது பற்றிய விபரங்கள் அடங்கிய செய்தித்தாள்.

கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

படி 1.4.1 :
- உருவப்படங்களைக் காட்டி கடவுளின் படைப்பில் உள்ள புதுமைகளைப் பற்றி வினாவுங்கள்.
- இப்படைப்பைப் பாதுகாப்பதற்காக மனிதர் செய்யக்கூடியவற்றை அறிந்து கொள்வதற்கு பிள்ளைகளுக்குக் கொண்டு வந்த செய்தித்தாளைக் கொடுங்கள்.

- கடவுள் விலங்குகளைப் படைத்தார் என்பதை,
- ஒவ்வொரு விலங்கினங்களுக்கும் பல்வேறு ஆற்றல்கள் உள்ளன என்பதை,
- மனிதரின் உபயோகத்திற்காக கொடுத்தார் என்பதை,
- விலங்குகளுக்குத் துன்பம் செய்யக்கூடாது என்பதை,
- விலங்குகளுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதை

படி 1.4.2 :
- விலங்குகளில் காணப்படும் சிறப்பான உடல் அமைப்புக்களைப் பெயரிட்டு, பல்வேறு ஆற்றல்களையும் பெயரிட்டு கலந்துரை யாடுங்கள்.
- விலங்குகளைப் பாதுகாப்பது பற்றிய விபரங்களைச் செய்தித் தாளில் வாசித்து அதைப் பற்றிய கலந்துரையாடலை நடாத்துங்கள்.
- விலங்குகளின் சுதந்திரத்தைப் பேணும் முறையைக் கலந்துரை யாடுங்கள்.

படி 1.4.3 : • விலங்குகளால் மனிதருக்குக் கிடைக்கும் உபயோகங்களை எழுதுவதற்கு அறிவுரை கொடுங்கள்.

• விலங்குகளின் மூலம் கடவுளின் படைப்பு அலங்காரமானது என்பதை ஐந்து வாக்கியங்களில் எழுதுவதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.

- உயிரான, உயிரற்ற படைப்பிற்குள் விலங்குகள் உயிரான படைப்பு என்பதை,
- விலங்குகளுக்கு சிறப்பான ஆற்றல்களும் உடல் அமைப்பும் உள்ளன என்பதை,
- கடவுளின் படைப்பு உயிரானது என்பதற்கூடாக கடவுள் மாட்சிமைப்படத்தக்கவர் என்பதை,
- விலங்குகளின் சுதந்திரத்தைப் பாராட்ட வேண்டும் என்பதை,
- விலங்குகளுக்கும் அன்பும், இரக்கமும் அவசியம் என்பதை,

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- விலங்குகளின் ஆற்றல்கள் மூன்றினைப் பெயரிடுவர்.
- கடவுளின் படைப்பில் உள்ள நீர்வாழ் விலங்குகள்/பறவைகள்/மிருகங்கள்/ஊர்வன என்பவற்றை மூன்று மூன்றாக எழுதிக் காட்டுவர்.
- பல்வேறு விதமான விலங்குகளால் மனிதருக்குக் கிடைக்கும் பயன்கள் ஐந்தை எழுதுவர்.
- விலங்குகளைப் பாதுகாத்துக் கொள்ளும் முறைகள் மூன்றை முன்வைப்பர்.
- தாம் விரும்பும் விலங்கைப் பற்றிய விபரங்களை எழுதுவர்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்

- தெரிந்தெடுக்கப்பட்ட விலங்கின் உருவப்படங்களைப் பற்றிய சிறப்பான இலட்சணங்களைத் தேடிப்பாருங்கள்.
- படைப்பைப் பாதுகாப்பதற்கு எடுத்த முறைகளைக் கலந்துரையாடுங்கள்.
- விலங்குகளால் மனிதருக்குக் கிடைக்கும் பயன்களைப் பற்றிய கருத்துக்களைத் தேடுங்கள்.
- தேடிய கருத்துக்களை வகுப்பில் முன்வையுங்கள்.

| | |
|---|---|
| தேர்ச்சி 1.0: | கடவுளின் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஒழுக்க வாழ்வு வாழ்வர். |

தேர்ச்சி மட்டம் 1.5 : விசுவாசத்துடனும் பக்தியுடனும் மாட்சிமையை அனுபவிப்பர்.

செயற்பாடு 1.5 : கடவுள் படைப்பின் விருத்தியை அனுபவிப்போம்.

நேரம் : 80 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :
- தவளை, வண்ணத்துப்பூச்சிகளின் வாழ்க்கை வட்ட உருவ அமைப்பைக் காட்டும் படம்
- திரு விவிலியம் (தொ.நூ. 1:3 -14)

கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்.

படி 1.5.1 :
- தவளை, வண்ணத்துப்பூச்சியின் விருத்தியைக் காட்டும் வாழ்க்கை வட்டத்தைத் தயாரிப்பதற்கு இடமளியுங்கள்.
- தவளை, வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கை அமைப்பைப் பற்றி பிள்ளைகளுடன் விமர்சித்துக் கலந்துரையாடலை நடாத்துங்கள்.

> - ஒவ்வொரு நாளும் புது உயிர்கள் உலகத்தில் விருத்தியடைகின்றன என்பதை,
> - விதைகளும், விலங்குகளும் விருத்தியடைவதற்கூடாக இதனைக் காண்கிறோம் என்பதை,
> - சகல விலங்குகளினதும், விதைகளினதும் உருவாக்கம் புதுமையான சுழற்சியாகும் என்பதை,
> - உயிர்களை உருவாக்கி விருத்தி செய்யும் கடவுளுக்கு நன்றி கூற வேண்டும் என்பதை

படி 1.5.2 :
- வகுப்பிற்குக் கொண்டு வந்த விலங்குகளின் வாழ்க்கை சுழற்சியைக் காண்பித்துக் கலந்துரையாடுங்கள்.
- கடவுள் படைப்பில் காணும் புதுமையான விருத்திகளைப் பற்றிய அறிவுரையை வழங்குங்கள்.

படி 1.5.3 :
- பலவித விலங்குகளினதும், விதைகளினதும் விருத்தியைக் காட்டும் சந்தர்ப்பங்களை பெயரிடுவதற்கும் அதனைப் பற்றிய அட்டவணைத் தயாரிப்பதற்கும் சந்தர்ப்பம் கொடுங்கள்.

- ஒவ்வொரு நாளும் புதிய உயிர்கள் தோன்றுகின்றன என்பதற்கான உதாரணங்களை எழுதுவதற்குப் பிள்ளைகளைத் தயார் செய்யுங்கள்.

- புதிய உயிர்களைத் தருவது கடவுள் என்பதை,
- விதைகளும், விலங்குகளுக்கும் அழகான வாழ்க்கை வட்டம் உண்டு என்பதை,
- படைப்பிற்குள் புதுமையான வளர்ச்சிகள் உண்டு என்பதை,
- அப்படைப்பிற்கூடாக மனிதர் நன்மை அடைகின்றனர் என்பதை,
- படைப்பை ஆதரித்துப் பாதுகாப்பது எமது கடமை என்பதை

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- வண்ணத்துப்பூச்சி உருவாகும் சந்தர்ப்பங்களைப் பெயரிடுவர்.
- தவளை, பல்வேறு விலங்குகள் உருவாகும் சந்தர்ப்பங்களைப் பெயரிடுவர்.
- ஒவ்வொரு நாளும் உருவாகும் புதிய உயிர்கள் மூன்றினைப் பெயரிடுவர்.
- விதையின் சிறந்த வளர்ச்சியின் புதுமையை விளக்கி கவிதை ஒன்றை இயற்றுவர்.
- விரும்பிய உயிர்களின் வாழ்க்கைச் சுழற்சியை சித்திரமாக்குவர்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்

- விலங்குகளின் வாழ்க்கை சுழற்சியை அறிந்து கொள்ளுங்கள்.
- ஒவ்வொரு நாளும் புதிய உயிர்கள் உருவாகும் முறைகளின் விபரங்களைத் தேடுங்கள்.
- கருத்துக்களுக்குப் பொருத்தமான விலங்கு வளர்ச்சியை சித்திரமாக்குங்கள்.
- கடவுளின் படைப்பானது பலவிதமானது என்பதின் கருத்துக்களை முன்வையுங்கள்.

**தேர்ச்சி 1.0: கடவுளின் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஒழுக்க வாழ்வு வாழ்வர்.**

**தேர்ச்சி மட்டம் 1.6 :** விசுவாசத்துடனும் பக்தியுடனும் மாட்சியை அனுபவிப்பர்.

**செயற்பாடு 1.6 :** ஏதேன் தோட்டத்திற்கூடாக கடவுளின் படைப்பின் பரிபூரணத்துவத்தைத் தேடிப்பார்ப்போம்.

**நேரம் :** 80 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**
- அழகிய பூந்தோட்டத்தின் சித்திரம்
- திரு விவிலியம் (தொ.நூ. 2:8-14)

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்**

**படி 1.6.1 :**
- கொண்டு வந்த பூந்தோட்டத்தின் படத்தைக் காண்பித்து அதிலுள்ள அழகினைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- தொ.நூ. 2:8-14 பகுதியை வாசித்துப் பார்த்து ஏதேன் தோட்டத்து அழகை வெளிப்படுத்துங்கள்.
- 
    - அழகிய ஏதேன் தோட்டத்தைக் கடவுள் படைத்தார் என்பதை,
    - அவர் படைத்த மனிதரை அங்கே வசிக்கச் செய்தார் என்பதை,
    - ஏதேன் தோட்டம் பரிபூரணமானது என்பதை,
    - நான்கு நதிகள் உள்ளன என்பதை

**படி 1.6.2 :**
- தொ.நூ 2: 8 - 14 பகுதிகளில் வெளிப்படும் அதன் கருத்துக்களை உள்ளடக்கிய சித்திரத்தை உருவாக்குவதற்கு அறிவுரை வழங்குங்கள்.

**படி 1.6.3 :**
- ஏதேன் தோட்டத்தில் கடவுளின் படைப்பானது பரிபூரணத்துவம் நிறைந்ததாகக் காணப்படும் முறையைக் கலந்துரையாடுங்கள்.
- 'ஏதேன் தோட்டம்' என்ற தலைப்பில் பத்து வாக்கியங்கள் எழுதுவதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.

- ஏதேன் தோட்டத்திற்கூடாக கடவுளின் படைப்பின் பரிபூரணத்துவம் வெளிப்படும் என்பதை,
- கண்ணுக்கு அழகானதும் உண்பதற்குச் சுவையானதுமான எல்லா வகை மரங்களும் அங்கு உண்டு என்பதை,

- ஏதேன் தோட்டத்தின் நடுவில் வாழ்வின் மரத்தையும் நன்மை தீமை அளிப்பதற்கு ஏதுவான மரத்தையும் கடவுள் வளரச் செய்தார் என்பதை,
- தோட்டம் செழிப்பாக இருப்பதற்கு நதிகள் உள்ளன என்பதை,
- இவை அனைத்திற்கூடாகவும் கடவுளின் படைப்பு அழகும் மாட்சியும் மிக்கது என்பதை புரிந்துகொண்டு, இவைகளை நாம் அனுபவிக்க முடியும் என்பதை

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- ஏதேன் தோட்டத்தை சித்திரமாக்குவர்.
- ஏதேன் தோட்டத்தைப் பற்றி பத்து வாக்கியங்களை எழுதிக் காட்டுவர்.
- கடவுள் படைப்பின் அழகைப் பற்றிய கவிதை/பாடல் ஒன்றை உருவாக்குவர்.
- கடவுளின் படைப்பின் மாட்சியைக் கூறி விண்ணப்பம் ஒன்றை முன்வைப்பர்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்

- தொ.நூ. 2: 8 - 14 பகுதியில் அவதானத்தைச் செலுத்துங்கள்.
- அதிலுள்ள கருத்துக்களை சேகரியுங்கள்.
- ஏதேன் தோட்டத்தின் படைப்பைச் சித்திரமாக்குங்கள்.
- வகுப்பிற்கு முன் வையுங்கள்.

| | |
|---|---|
| தேர்ச்சி 1.0: | கடவுளின் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஒழுக்க வாழ்வு வாழ்வர். |

தேர்ச்சி மட்டம் 1.7 : விசுவாசத்துடனும் பக்தியுடனும் மாட்சியை அனுபவிப்பர்.

செயறபாடு 1.7 : மனிதருக்குள் இருக்கும் இறை சாயலை ஏற்றுக்கொள்வோம்.

நேரம் : 80 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :
- அரலிப்பூ
- திரு விவிலியம் (தொ.நூ. 1:27)
- பிரிசில் போட்
- நிறங்கள்
- ரிபன் வகை
- கத்தரிக்கோல்

கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

படி 1.7.1 :
- பிள்ளைகளின் கையில் ஒவ்வொரு அரலிப்பூவைக் கொடுங்கள்.
- அமைதியாக இருக்கச் செய்து தியானத்திற்கு ஆயத்தம் செய்யுங்கள்.
- விவிலியப் பகுதிகளைப் பிள்ளைகளுக்குக் கொடுத்து வகுப்பில் முன்வையுங்கள்.
- தாங்கள் பெற்றுக்கொண்ட பூவைப்பற்றி அவதானத்தைச் செலுத்தி அவர்களுக்குள் இருக்கும் கடவுளின் சாயலின் குணாதிசயங்கள் ஐந்தை அறிந்துகொள்ள இடமளியுங்கள்.
- மனிதர் பெற்ற கடவுளின் சாயலைப் பாராட்டி ஆசிரியர் மூலம் பிரார்த்தனைக்கூடாக வழிநடத்துங்கள்.

- எம்மைக் கடவுள் தனது சாயலாகப் படைத்தார் என்பதை,
- கடவுள், மனுக்குலத்தை ஆணும், பெண்ணுமாகப் படைத்தார் என்பதை,
- கடவுளின் முன் ஆணும், பெண்ணும் சமமானவர்கள் என்பதை,
- நாம் ஒருவருக்கொருவர் சமமானவர்கள் என்பதை,

படி 1.7.2 :
- பிள்ளைகளின் குடும்பப் பின்னணியைப் பற்றிய வினாக்களைக் கேட்டுக் கலந்துரையாடலை நடத்துங்கள்.
  - வீட்டில் தாயார் செய்யும் காரியங்கள்
  - தந்தை செய்யும் காரியங்கள்.
  - இருவருமாக வீட்டில் செய்யும் காரியங்கள்.
  - தாயும், தந்தையும் சமுகத்தில் செய்யும் காரியங்கள்.
- இந்த வினாக்கள் சம்பந்தமாகக் கலந்துரையாடலை நடாத்தி கடவுள் மனிதருக்குக் கொடுத்த கடவுளின் சாயலையும், சமத்துவத்தையும் பற்றி விளக்குக.

படி 1.7.3 :
- பிரிசில் போட், கத்தரி, நிறங்கள், ரிபன் போன்றவற்றைக் கொடுங்கள்.
- விவிலியப் பகுதியைப் பெற்றுக் கொடுங்கள் (தொ.நூ 1:27)
- புத்தக அடையாள மட்டை (Book mark) செய்வதற்கான அறிவுறுத்தலை வழங்குங்கள்.

- கடவுளின் சாயல் ஆண், பெண் இருவருக்கும் உண்டு என்பதை,
- ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் சார்ந்திருப்பர் என்பதை,
- ஆண், பெண் சமத்துவத்தைக் கடவுள் பாராட்டுகிறார் என்பதை,
- ஒருவருக்கொருவர் சமமானவர்கள் என்பதை நாம் உணர வேண்டும் என்பதை

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- ஆணுக்கும், பெண்ணுக்கும் இருக்கும் பொதுத்தன்மைகள் மூன்றை எழுதிக் காட்டுவர்.
- தொ.நூ 1 : 27 பகுதியை தன் வார்த்தையில் கூறுவர்.
- தொ.நூ 1 : 27 குறிப்பிட்டு புத்தக அடையாள மட்டை (Book mark) செய்வர்.
- ஆண், பெண் என்ற வகையில் நாம் ஒருவருக்கொருவர் மதிப்பளிக்கும் சந்தர்ப்பங்கள் மூன்றை எழுதுவர்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்

- அனைவருக்கும் அமைதியான தியானத்திற்கு ஆயத்தமாக்குங்கள்.
- வேதப் பகுதியை வாசித்து அதனை தியானம் செய்யுங்கள்.
- ஒருவருக்கொருவரிடையே இருக்கும் பிரச்சனைகளுக்கான விண்ணப்பத்தை முன்வையுங்கள்.

தேர்ச்சி 1.0: கடவுளின் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஒழுக்க வாழ்வு வாழ்வர்.

தேர்ச்சி மட்டம் 1.8 : விசுவாசத்துடனும் பக்தியுடனும் மாட்சியை அனுபவிப்பர்.

செயற்பாடு 1.8 : கடவுளின் படைப்பிற்குள் மனிதரின் சிறப்பை அறிந்து கொள்வோம்.

நேரம் : 80 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :
- கடவுளின் படைப்புப் பற்றிய பாடல் பிரதிகள்
- குறுக்கெழுத்து வினாவுக்கான கட்டங்கள் அடங்கிய பிரதிகள்

கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

படி 1.8.1 :
- பாடல் அடங்கிய பிரதிகளை பிள்ளைகளுக்குப் பெற்றுக் கொடுங்கள்.
- உரத்த தொனியில் பாடலை பாடச் செய்யுங்கள்.
- பாடல்களின் வசனங்களை இயற்றி, இசையமைத்தவரின் திறமைகளைப் பாராட்டுங்கள்.

> - கடவுளின் உருவாக்கத்தை மனிதர் படைப்பிற்குள் காண்கின்றனர் என்பதை,
> - கடவுளின் படைப்புக்களை உபயோகித்தே மனிதரின் உருவாக்கம் அமைகின்றது என்பதை,
> - அவ்வுருவாக்கங்களைச் செய்வதற்கான திறமையைக் கடவுளுக்கூடாக பெறுகின்றோம் என்பதை,
> - கடவுளின் படைப்பிற்கும், மனிதரின் உருவாக்கத்திற்கும் வேறுபாடுகள் உண்டு என்பதை,
>
> மனிதரின் படைப்பிற்குள் கடவுளின் படைப்பு வெளிப் படுகின்றது என்பதை

படி 1.8.2 :
- வினாக்களைக் கலந்துரையாடிய பின் குறுக்கெழுத்துக்கான கட்டங்கள் அடங்கிய பிரதிகளை பிள்ளைகளுக்கு வழங்குங்கள்.
- விடைகளை நிரப்பி எழுதிய பின் அதை விளங்கிப் பிழைகள் இருப்பின் சரி செய்யுங்கள்.
- பல்வேறு வகையான பெயர்களில் அறிமுகமாகும் படைப்பாளர் களின் திறமைகளையும், வேறுபாட்டையும் பாராட்டுங்கள்.

- பல்வேறு வகையான மனித படைப்பின் பலன்களும் அவை கடவுளின் மாட்சிமைக்காக செயல்படுத்தும் முறைமைகளையும் கலந்துரையாடுங்கள்.

படி 1.8.3 : • பிள்ளைகள் அனைவரும் இறைவன் தந்த கொடை என்பதற்காக நன்றி கூறி பாடல்/கவிதை ஒன்றை எழுதுவதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.

- மனிதன் படைப்பு பொருட்களால் அமைக்கப்பட்டவர் என்பதை,
- கடவுளின் படைப்பானது இறைவாக்குக்கூடாக படைக்கப் பட்டது என்பதை,
- கடவுளின் படைப்பில் உள்ள மூலப் பொருட்களுக்கூடாக மனிதர் தம் உருவாக்கத்தை செய்கின்றனர் என்பதை,
- மனிதரால் உருவாக்கப்பட்ட படைப்பு தன் ஞானம், உணர்வு, அனுபவத்துக்கூடாக செயல்படுத்தப்பட்டது என்பதை,
- நாம் படைக்கக்கூடிய ஆற்றலைப் பெறுவது கடவுளின் மூலமே என்பதை,
- அந்த ஆற்றல்களை கடவுளின் மாட்சிக்கும், புகழ்ச்சிக்கும் மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்பதை

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- குறுக்கெழுத்துக் கட்டங்களைப் பூரணப்படுத்துவர்.
- பாடலைத் தாளத்திற்கு ஏற்பப் பாடுவர்.
- படைப்பிற்குள் உள்ள இரண்டு உருவாக்கங்களின் பெயர்களைத் தருவர்.
- தம்க்குக் கிடைக்கப் பெற்ற சிறப்பான திறமைகளுக்காக நன்றி செலுத்தி கவிதை/ பாடல் இயற்றுவர்.
- பிள்ளைகள் கடவுளின் படைப்பை இரசனையுடன் அனுபவித்து அதற்கான விண்ணப்பத்தை முன்வைப்பர்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்

- கடவுளின் படைப்பை உபயோகித்து செய்யக்கூடிய மனிதரின் உருவாக்கங்கள் சிலவற்றை வரிசைப்படுத்துங்கள்.
- மனிதரின் படைப்பு நல்ல காரியங்களுக்காகச் செயல்படுத்தும் முறையை முன்வையுங்கள்.
- தமக்குக் கிடைத்த ஆற்றல்களுக்காக கடவுளிடம் விண்ணப்பம் ஒன்றை முன்வையுங்கள்.

**தேர்ச்சி 2.0: இயேசுவின் வாழ்வை முன்மாதிரியாகக் கொள்வர்.**

தேர்ச்சி மட்டம் 2.1 : இயேசுவின் மூலம் வெளிப்படும் கடவுளை அறிந்து கொள்வர்.

செயற்பாடு 2.1 : இயேசுவின் மூலம் வெளிப்படும் கடவுளை அறிவோம்.

நேரம் : 80 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :
- திரு விவிலியம்
- பெரியதாக வரையப்பட்ட பலஸ்தீனா வரைபடம்

கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

படி 2.1.1 :
- பலஸ்தீனா வரைபடத்தை பிள்ளைகளுக்குக் காண்பியுங்கள்.
- அதில் மத்திய தரைக்கடல், கலிலேயாக் கடல், யோர்தான் நதி, சாக்கடல், நாசரேத்து, எருசலேம் போன்றவற்றைப் பிள்ளைகளுக்குக் காண்பித்து வரைபடத்தில் அடையாள மிடுங்கள்.
- அவ்வாறே பயணம் செய்யும் வழிமுறைகளைப் பற்றிய அறிவையும் கொடுங்கள்.
- எருசலேம் ஆலயத்தில் நிகழ்ந்தவைகளைப் பற்றி கலந்துரை யாடலை நடாத்துங்கள்.

> - இயேசு வரலாற்றுப் பின்னணியின் அடிப்படையில் பாஸ்கா விழாவைக் கொண்டாட எருசலேமுக்குச் சென்றார் என்பதை,
> - யூத ஆண் பிள்ளைகள் அனைவரும் பன்னிரண்டு வயதில் எருசலேம் ஆலயம் செல்வது வழமை என்பதை,
> - யோசேப்பும் மரியாவும் இயேசுவை தேடினர் என்பதை,
> - இயேசுவானவர் தம் தந்தையாகிய கடவுளை ஏற்றுக் கொண்டார் என்பதை

படி 2.1.2 :
- லூக்கா 2:41-50 யை அமைதியாக வாசிக்கச் செய்யுங்கள்.

படி 2.1.3 :
- விவிலியப் பகுதியில் உள்ள நிகழ்வை நாடகமாக முன்வைப்ப தற்கு பிள்ளைகளை உட்படுத்தி வழிகாட்டுங்கள்.

- நாடகத்தை முன்வைப்பது பற்றி ஒரு கணிப்பீடு செய்யுங்கள்.

> - யூத பண்பாடுகளை இயேசுவானவர் பெற்றோர் மூலம் கடைப் பிடித்தார் என்பதை,
> - தமது எதிர் காலப்பணியை அறிந்து கொண்டார் என்பதை,
> - இயேசுவைப் போல் நாமும் பெற்றோருக்கும் கடவுளுக்கும் கீழ்ப்படிய வேண்டும் என்பதை,
> - இயேசுவானவர் ஞானத்திலும், உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்தார் என்பதை,
> - இயேசு பன்னிரண்டு வயதிலே கடவுளோடு மிகவும் நெருங்கிய உறவு கொண்டிருந்தார் என்பதை வெளிப் படுத்தினார் என்பதை,
> - அப்படியான உறவு இருந்தது இயேசுவுக்கு மட்டுமே என்பதை

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- பாஸ்கா விழாவோடு தொடர்புடைய பண்பாடுகள் மூன்றை வெளிப்படுத்துவர்.
- இன்று எமது சமய பண்பாட்டு முறைகள் ஐந்தினைப் பெயரிடுவர்.
- பன்னிரண்டு வயதில் இயேசுவுக்குள் இருந்த சிறப்பான இலட்சணங்கள் மூன்றைப் பெயரிடுவர்.
- பலஸ்தீன வரைப்படத்தில் யோர்தான் நதி, எருசலேம் நாசரேத் என்பதை சரியாக அடையாளமிடுவர்.
- இயேசவைப் போன்று பிள்ளை வளரும் சந்தர்ப்பங்களை அட்டவணைப்படுத்துவர்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்

- இயேசு பன்னிரண்டு வயதில் எருசலேம் கோவிலுக்குள் சென்றதை விளக்குங்கள்.
- அங்கே நடந்த நிகழ்வுகளை நாடகமாக முன் வைப்பதற்குப் பாத்திரங்களை பிரியுங்கள்.
- நாடகத்தை வகுப்பிற்கு முன்வையுங்கள்.

## தேர்ச்சி 2.0: இயேசுவின் வாழ்வை முன்மாதிரியாகக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.2** : இயேசுவின் மூலம் வெளிப்படும் கடவுளை அறிந்து கொள்வர்

**செயற்பாடு 2.2** : இயேசுவின் மூலம் பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொள்வோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :
- முடக்குவாத நோயாளியை இயேசுவண்டையில் கொண்டு வந்த படம்
- திரு விவிலியம்
- ஆயத்தம் செய்த வினாக்கள்

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்**

**படி 2.2.1** :
- முடக்குவாத நோயாளி இயேசுவிடம் கொண்டு வரப்பட்ட விபரங்களைப் பிள்ளைகளிடம் படத்தைக் காட்டிக் கூறுங்கள்.
- அதைப்பற்றி விளக்கிக் கலந்துரையாடலை நடாத்துங்கள்.
- 
  - சுகத்தைப் பெறுவதற்காக முடக்குவாதமுற்றவரை இயேசுவிடம் எடுத்துவந்தார்கள் என்பதை,
  - அது நண்பர்கள் நான்கு பேரால் செய்யப்பட்டது என்பதை,
  - அப்போது இயேசு போதனை செய்து கொண்டிருந்தார் என்பதை,
  - இயேசுவுக்கு உடல் சுகத்தையும், பாவத்துக்கு மன்னிப்பையும் வழங்க முடியும் என்பதை,
  - இயேசு எமக்கும் மன்னிப்பை வழங்குகிறார் என்பதை

**படி 2.2.2** :
- மாற்கு 2: 1-12 பகுதியை உரத்த தொனியில் வாசிப்பதற்கு ஒரு பிள்ளையை ஆயத்தம் செய்யுங்கள்.
- வாசிக்கும் விவிலியப் பகுதியை நன்றாகச் செவிசாய்ப்பதற்குப் பிள்ளைகளை உட்படுத்துங்கள்.

**படி 2.2.3** :
- முடக்குவாதமுற்றவர் பற்றிய கதையை முழுவதுமாகக் கூறி ஆயத்தம் செய்து வந்த வினாக்களை கரும்பலகையில் எழுதுங்கள்.

- விவிலியத்தைப் பாவித்து வினாக்களுக்கு விடையளிப்பதற்கான அறிவுரையைக் கொடுங்கள்.

- எழுதிய விடைகளைப் பார்த்து பிழைகள் இருப்பின் அதைச் சரிசெய்து பாடத்தை முன் எடுத்துச் செல்லுங்கள்.

> - இயேசுவுக்கு மனிதரின் செயற்பாடுகளை அறிய முடியும் என்பதை,
> - இயேசுவால் மட்டுமே பாவமன்னிப்பைக் வழங்க முடியும் என்பதை,
> - எமது பாவங்களுக்கு மன்னிப்பைப் பெறுவதற்காக இயேசு விடம் செல்ல வேண்டும் என்பதை,
> - யூத மக்கள் சிறப்பான முறையில் இறை வல்லமையை அனுபவித்தார்கள் என்பதை,
> - அதே போல் நாமும் கடவுளின் வல்லமையை இன்னும் அனுபவிக்க முடியும் என்பதை

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- ஒழங்கு முறையின்றி எழுதப்பட்ட முடக்குவாத நோயாளியின் கதையை, பிள்ளைகள் ஒழுங்கமைத்து சரியான முறையில் எழுதுவர்.
- 'மகனே உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன' இவ்வார்த்தை யாரால், யாருக்குக் கூறப்பட்டது என்பதை எழுதுவர்.
- பிள்ளைகளுக்கு ஏற்பட்ட உடல் நோய்கள் மூன்றும் உளநோய்கள் மூன்றும் குறிப்பிடுவர்.
- நோயாளிக்காக மன்றாட்டை முன்வைப்பர்.
- தங்கள் தவறுகளுக்காக மன்னிப்பு வேண்டி இயேசுவிடம் செய்யும் மன்றாட்டு ஒன்றை எழுதுவர்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்

- முடக்குவாதமுற்றவரின் கதையை வெளிப்படுத்துங்கள்.
- அக்கதையின் கருத்துக்களை சேகரித்துக் கொள்ளுங்கள்.
- கருத்துக்களுக்கு பொருத்தமான கைவேலைகளைச் செய்யும் முறைகளை சேர்த்துக் கொள்ளுங்கள்.
- பொது வகுப்பிற்கு முன்வையுங்கள்.

தேர்ச்சி 2.0: இயேசுவின் வாழ்வை முன்மாதிரியாகக் கொள்வர்.

தேர்ச்சி மட்டம் 2.3 : இயேசுவின் மூலம் வெளிப்படும் கடவுளை அறிந்து கொள்வர்.

செயற்பாடு 2.3 : காணாமற் போனதைத் தேடிச் செல்வதன் மூலம் கடவுளின் அன்பின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்வோம்.

நேரம் : 80 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :
- ஆட்டைத் தூக்கி வைத்திருக்கும் ஆயரின் படம்
- திரு விவிலியப் பகுதி (மத்தேயு - 18:10-14)
- டிமைன் கடதாசியும், கலர் பேனாக்களும்

கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

படி 2.3.1 :
- ஆட்டைத்தூக்கி வைத்திருக்கும் ஆயரின் படத்தைக் கண்காட்சிப் படுத்தி பிள்ளைகளிடம் வெளிப்படும் கருத்துக்களை ஆராயுங்கள்.
- ஆயரின் செயற்பாட்டை விமர்சித்து அதன் கருத்துக்களைக் கரும்பலகையில் எழுதுங்கள்.

> - இயேசு போதனைகளை அநேகமாக உவமைகள் மூலமே செய்தார் என்பதை,
> - இயேசு நல்ல ஆயன் என்பதை,
> - நாம் கடவுளின் மந்தைகள் என்பதை,
> - நல்ல ஆயர் காணாமல் போன ஆட்டைத் தேடிச் செல்வார் என்பதை,
> - அவர் மிகவும் மகிழ்வடைவது, காணாமல் போன ஆட்டைக் கண்டதன் பிறகு என்பதை

படி 2.3.2 :
- மத்தேயு 18:10-14 வேதப் பகுதிகளைப் பிள்ளைகளுக்குக் கொடுத்து வகுப்பில் முன்வையுங்கள்.
- கலந்துரையாடலின் மூலம் இயேசு நல்ல ஆயன் என்பதின் அடையாளத்தை வெளிப்படுத்துங்கள்.

படி 2.3.3 : • மாணவரை இரண்டு குழுக்களாகப் பிரியுங்கள்.

• டிமைன் கடதாசிகளையும், நிறப் பேனை கொடுங்கள்.

• இன்றைய சமுதாயத்தில் பிள்ளைகள் வழி தவறிப்போகும் சந்தர்ப்பங்களை அட்டவணைப்படுத்துங்கள்.

• குழுக்களைத் திறந்த வகுப்பிற்கு முன்வையுங்கள்.

• ஆடுகளின் நல்ல ஆயர் பற்றிய உருவாக்கத்தின் செயற்பாட்டை முன்வைப்பதற்கு இரண்டு குழுக்களுக்கும் சந்தர்ப்பம் கொடுங்கள்.

- இயேசு ஆடுகளின் நல் ஆயன் என்பதை,
- நாம் அவரின் மந்தையின் ஆடுகள் என்பதை,
- இயேசு வந்தது காணாமல் போனவர்களை மீட்கவே என்பதை,
- நாம் தவறான வழியில் செல்லாமல் இயேசுவுக்குள் வாழ வேண்டும் என்பதை,
- நாம் சமுதாயத்தில் தவறிச் செல்பவர்களைக் கடவுளிடம் அழைத்து வரவேண்டும் என்பதை

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- ஆயரின் குணாதிசயங்களைப் பற்றிய கருத்துக்களை முன்வைப்பர்.
- இன்றைய சமுதாயத்தில் பிள்ளைகள் தவறிச் செல்லும் முறைகளை எழுதிக்காட்டுவர்.
- ஆடுகளின் நல்ல ஆயர் பற்றிய குணாதிசயங்களை விவிலியத்தினூடாக எழுதிக் காட்டுவர்.
- நல்ல ஆயர் பற்றிய உருவாக்கத்தின் செயற்பாட்டை முன் வைப்பர்.
- கடவுளின் அன்பை அனுபவிக்காதவர்களுக்காக கடவுளிடம் செய்யக்கூடிய மன்றாட்டை முன்வைப்பர்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்

- உங்களுக்குக் கிடைத்த தலைப்பு தொடர்பாக அவதானத்தை செலுத்துங்கள்.
- இன்றைய சமுதாயத்தில் பிள்ளைகள் வழித்தவறிச் செல்லும் சந்தர்ப்பங்களை வெளிப்படுத்துங்கள்.
- அச்சந்தர்ப்பங்கள் இரண்டினை கொடுக்கப்பட்ட கடதாசியில் வரிசைப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0: இயேசுவின் வாழ்வை முன்மாதிரியாகக் கொள்வர்.**

**தேர்ச்சி மட்டம் 2.4** : இயேசுவின் மூலம் வெளிப்படும் கடவுளை வாழ்வில் ஏற்றுக் கொள்வர்.

**செயற்பாடு 2.4** : மன்றாட்டின் (வேண்டுதல்) மூலம் கடவுளை ஏற்றுக் கொள்வோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :
- மண்விளக்கு/எண்ணெய்/திரி/நெருப்பெட்டி
- திருவிவிலியம்

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்**

**படி 2.4.1** :
- பிள்ளைகளின் கைகளில் ஆயத்தம் செய்துவைத்த விளக்குகளைக் கொடுங்கள்.
- பிள்ளைகளைத் தியானத்திற்கு உட்படுத்துங்கள்.
- தியானத்தின்போது மத்தேயு 7:7-11 விவிலியப் பகுதிக்கு செவி சாய்க்கச் செய்யுங்கள்.
- தியானத்திற்கூடாக கடவுளுடன் தொடர்பு கொள்ளும் முறையை கலந்துரையாடலுக்குட்படுத்துங்கள்.

- நாம் கடவுளுடன் தொடர்பு கொள்வதற்கு மன்றாட்டு அவசியம் என்பதை,
- எமது மன்றாட்டுக்கு கடவுள் பதில் தருவார் என்பதை,
- மன்றாட்டுடன் அதை நிறைவேற்றுவதற்காக நாமும் செயற்பட வேண்டும் என்பதை,
- கடவுள் நன்மைகளை எமக்குத் தருகிறார் என்பதை,
- இயேசுவின் விண்ணப்பத்திற்கூடாக கடவுளை எமது வாழ்வில் ஏற்றுக் கொள்கிறோம் என்பதை

**படி 2.4.2** :
- பெற்றோர் எமது தேவைகளை நிறைவு செய்யும் சந்தர்ப்பங் களைப் பற்றி கலந்துரையாடுங்கள்.
- நாம் வாழுகின்ற சமுதாயத்தில் கிடைக்கப்பெற்ற ஆசீர்வாதங் களைப் பற்றி கலந்துரையாடச் செய்யுங்கள்.
- மேற்குறிப்பிட்ட இரு சந்தர்ப்பங்களுக்கூடாக எமக்குக் கிடைத் துள்ள ஆசீர்வாதங்களைக் கலந்துரையாடுங்கள்.

படி 2.4.3 : • மத்தேயு 7:7-11 வரையிலான வேதப் பகுதியில் உள்ள கருத்துக் களைக் கலந்துரையாடி அதைக் கரும்பலகையில் எழுதுங்கள்.

• மன்றாட்டை முன்வைப்பதற்கு பலவித முறைகள் உள்ளன என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

- எமது மன்றட்டோடு எமது செயற்பாட்டையும் நிறைவேற்ற வேண்டும் என்பதை,
- இயேசுவின் மூலம் வெளிப்படும் கடவுளை வாழ்வில் ஏற்றுக் கொள்வோம் என்பதை,
- மன்றாட்டை எமது சுயநலத்துக்காகச் செய்யக்கூடாது என்பதை,
- கடவுள் எமக்கு ஆசீர்வாதத்தைப் பெற்றுத்தருவது ஒவ்வொருவரின் மூலமாகும் என்பதை,
- விண்ணப்பம் செய்வதற்கு பலமுறைகள் உண்டு என்பதை (நாடகம், பாடல், சித்திரம்)

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- மன்றாட்டில் அடங்க வேண்டிய முக்கிய கருத்துக்கள் மூன்றை எழுதிக்காட்டுவர்.
- இயேசு தந்தையிடம் மன்றாடிய மூன்று சந்தர்ப்பங்களைப் பெயரிடுவர்.
- எமக்காகவும், பிறருக்காகவும் மன்றாடும் மூன்று சந்தர்ப்பங்களை முன்வைப்பர்.
- விண்ணப்பம் செய்யக்கூடிய பலவித முறைகளில் மூன்றை எழுதிக் காண்பிப்பர்.
- மன்றாட்டை முன்வைக்கும் ஒரு முறையை உபயோகித்துத் தனது அன்றாட வாழ்வின் தேவைகளுக்காக விண்ணப்பத்தை முன்வைப்பர்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்

- பெற்றோர் எமது தேவைகளை நிறைவேற்றும் முறைகளின் கருத்துக்களை சேகரியுங்கள்.
- கடவுள் எமது வேண்டுதல்களுக்கு செவிமடுக்கின்றார் என்பதை உறுதிப்படுத்தி வரிசைப் படுத்துங்கள்.
- வகுப்பிற்கு முன்வையுங்கள்.

**தேர்ச்சி 2.0: இயேசுவின் வாழ்வை முன்மாதிரியாகக் கொள்வர்.**

தேர்ச்சி மட்டம் 2.5 : இயேசுவின் மூலம் வெளிப்படும் கடவுளை அறிந்து கொள்வர்.

செயற்பாடு 2.5 : கடவுளை பக்திபூர்வமாக ஏற்றுக்கொள்வோம்.

நேரம் : 80 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :
- திரு விவிலியம் (லூக்கா 2:8-20)
- பாடப்புத்தகம்
- சில வெள்ளை நிறப்பூக்கள்
- தாளம்

கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

படி 2.5.1 :
- பிள்ளைகளின் கைகளில் பூக்களைக் கொடுங்கள்.
- பாடலுக்கு ஏற்ப நடனமாடுவதற்கு வழிகாட்டுங்கள்.
- தாளத்தைத் தட்டி பக்திபூர்வமாக பாடலைப் பின்தொடர்ந்து நடனத்தைச் செய்யுங்கள்.

> - இடையர்கள் கிடைத்த நற்செய்தியை பக்திபூர்வமாக ஏற்றுக் கொண்டார்கள் என்பதை,
> - இயேசுவை காண்பதற்காக இடையர்கள் கூட்டமாக சென்றார்கள் என்பதை,
> - இயேசுவை கண்டதற்கூடாக கடவுளை மாட்சிமைப் படுத்தினார்கள் என்பதை,
> - நாமும் நற்செய்திக்கூடாக கடவுளை பக்திபூர்வமாக ஏற்றுக் கொண்டோம் என்பதை,
> - நாமும் எல்லா சந்தர்ப்பங்களிலும் கடவுளை புகழ வேண்டும் என்பதை

படி 2.5.2 :
- லூக்கா 2:6-20 விவிலியப் பகுதியை வகுப்பிற்கு முன்வையுங்கள்..
- விவிலியப் பகுதியின் நிகழ்வுகளை அபிநய நாட்டியமாக

படி 2.5.3 :
- அபிநய நாட்டியத்தை முன்வைத்த கதையைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்..
- இயேசுவை ஏற்றுக்கொண்ட முறையைப் பற்றி பிள்ளை களிடம் வினாவி அக்கருத்துக்களை கரும்பலகையில் எழுதுங்கள்.

- நற்செய்தியான இயேசுவை உலகமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை,
- இடையர்கள் இயேசுவைப் புகழ்ந்து பணிந்துகொண்டதன் மூலம் கடவுளை மாட்சிமைப்படுத்தினர் என்பதை,
- இடையர்கள் கண்ட மாட்சி வாழ்க்கை முழுவதும் வெளிப் பட்டது என்பதை,
- வெளித்தோற்றத்திற்கு மட்டுமல்லாது உள்ளார்ந்த வகையில் பக்தியோடு வாழ வேண்டும் என்பதை,

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- தாளத்திற்கு ஏற்ப மலர் நடனமாடுவர்.
- இயேசுவின் பிறப்புச் செய்தியைப் பெற்ற இடையர்கள் எடுத்த நடவடிக்கைகளை அபிநய நாடகமாகச் செய்வர்.
- அவர்களின் பக்தியைப் பற்றிய காட்சியை, கணிப்பீடாக செய்வர்.
- தனது வாழ்வை மாற்றிக்கொள்ள எடுக்கவேண்டிய முறைகள் பற்றிய நான்கு கருத்துக்களை எழுதுவர்.
- இடையர்களின் துதித்தலுக்கூடாக மூன்று கருத்துக்களை முன்வைப்பர்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்

- லூக்கா 2:8-20 விவிலியப் பகுதியில் அவதானத்தைச் செலுத்துங்கள்.
- விவிலியப் பகுதியின் கருத்துக்களை வெளிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- கடவுளை பக்திபூர்வமாக வழிபடும் முறையில் கருத்துக்களை முன்வையுங்கள்.

**தேர்ச்சி 2.0: இயேசுவின் வாழ்வை முன்மாதிரியாகக் கொள்வர்.**

**தேர்ச்சி மட்டம் 2.6 :** இயேசுவின் மூலம் வெளிப்படும் கடவுளை அறிந்து கொள்வர்.

**செயற்பாடு 2.6 :** ஆறுதலுக்காகக் கடவுளை நாடிச் செல்வோம்.

**நேரம் :** 80 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள் :**
- திரு விவிலியம் (மத்தேயு 11:25-30)
- பலவிதமான தொழில்கள் பற்றிய சந்தர்ப்பங்களைக் காட்டும் படங்கள்.
- வெள்ளைத்தாள்.

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்**

**படி 2.6.1 :**
- பலவிதமான பாரமான வேலை செய்கின்ற மனிதரின் வேலையின் சந்தர்ப்பங்களைப் பற்றிய உருவப்படங்கள் சிலவற்றைக் காட்டுங்கள்.
- அவ்வாறு வேலை செய்வதற்கூடாக மனிதர் சுமக்கும் சுமைகள் எவை என்பதைப் பற்றிப் பிள்ளைகளின் கருத்துக்களை வினாவுங்கள்.
- பிள்ளைகளின் கருத்துக்களை கரும்பலகையில் எழுதுங்கள்.

> - வாழ்வின் சவால்களுக்கு முகங்கொடுத்தலும் சுமை சுமத்தல் என்பதை,
> - எமது சக்தியாலும், ஆற்றலாலும் மட்டுமே சுமை சுமக்க முடியாது என்பதை,
> - எமது பாரங்களை சுமப்பதற்கு இயேசு ஆயத்தம் என்பதை,
> - பெருஞ்சுமை சுமக்கும் யாவரும் அதை தீர்ப்பதற்கு இயேசுவிடம் வர வேண்டும் என்பதை,

**படி 2.6.2 :**
- வெள்ளைக் கடதாசிகளை பகிர்ந்து கொடுங்கள்.
- அதில் அவர்களின் வாழ்க்கைச் சுமைகளை அட்டவணைப்படுத்த அறிவுரை கொடுங்கள்.
- அந்தக் கடதாசிகளை ஆசிரியர் சேர்த்துக் கொள்ளுங்கள்.
- அந்தப் பிரச்சினைகளுக்கு இயேசு பெற்றுத்தரும் ஆறுதலைப் பற்றி விளக்குங்கள்.

படி 2.6.3 : • எமது வாழ்வில் உள்ள பாவங்கள் வெளிவரும் சந்தர்ப்பங்களையும் நாம் நடந்து கொள்ளும் முறைகளைப் பற்றியும் கலந்துரையாடுங்கள்.

• பிள்ளைகளின் பிரச்சினைகள் பற்றிப் பொதுவாக விண்ணப்பம் செய்வதற்குப் பிள்ளைகளை உட்படுத்துங்கள்.

- எங்களால் தாங்கக்கூடியது அவரின் போதனைகளால் மட்டுமே என்பதை,
- இயேசு பாவத்தில் இருப்பவர்களுக்கு விடுதலை கொடுப்பவர் என்பதை,
- இயேசுவானவர் அனைவருக்கும் (நோயாளிகளுக்கு/ பாவிகளுக்கு) ஆறுதல் கொடுத்தார் என்பதை,
- இயேசுவானவரை ஆறுதல் அளிப்பவராக எமது வாழ்வில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை,
- இயேசுவின் வாழ்வின் மூலம் கடவுள் எமக்கு ஆறுதல் அளிப்பவராக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- வகுப்பின் நண்பர்களின் பிரச்சனைகள் துன்பங்களுக்காக வேண்டுதல் செய்ய முன்வருவர்.
- இயேசு ஆறுதல் கொடுத்த நபர்கள் மூவரின் பெயர்களைத் தருவர்.
- எமது சமுதாயத்தில் இருக்கும் பிரச்சினைகள் ஐந்தை விளக்குவர்.
- பாவத்தில் துன்புற்ற நபர்கள் மூவரின் செயல்பாட்டை எழுதுவர்.
- ஒவ்வொருவரின் பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெற்றுக்கொள்வதற்காகச் செய்யக்கூடிய செயற்பாடுகள் இரண்டை எழுதுவர்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்

- நண்பர்களின் வாழ்க்கைச் சுமைகளைப் பற்றிய குறிப்பு எழுதுங்கள்.
- கடவுளிடம் அந்த பிரச்சினைகளை முன்வைப்பதினால் கிடைக்கும் ஆறுதலை முன்வைக்கவும்.
- அனைத்துப் பிரச்சினைகள் துன்பங்களுக்கும் ஆறுதலான விண்ணப்பத்தை முன்வைக்கவும்.

**தேர்ச்சி 2.0: இயேசுவின் வாழ்வை முன்மாதிரியாகக் கொள்வர்.**

தேர்ச்சி மட்டம் 2.7 : இயேசுவின் மூலம் வெளிப்படும் கடவுளை அறிந்து கொள்வர்.

செயற்பாடு 2.7 : இயேசுவின் மூலம் வெளிப்படும் கடவுளை வாழ்வில் ஏற்றுக் கொள்வர்.

நேரம் : 80 நிமிடங்கள்

தர உள்ளீடுகள் :
- சித்திரம் வரைவதற்குத் தேவையான கடதாசி
- நிறங்கள்
- திரு விவிலியம்

கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்

படி 2.7.1 :
- கடதாசிகளையும், நிறப் பேனைகளையும் பிள்ளைகள் அனைவரின் கைகளில் கொடுங்கள்.
- 'இயேசு' என்ற தலைப்பின் கீழ் தம் நினைவிற்குள் வரும் சித்திரத்தை வரைவதற்கு அறிவுரை வழங்குங்கள்.
- பிள்ளைகள் வரைந்த சித்திரங்களைப் பற்றிக் கணிப்பீடு செய்யுங்கள்.
- மாற்கு 15:21-27 வரையிலான விவிலியப் பகுதியை வகுப்பிற்கு முன்வைத்து அதைப் பற்றிய பொது கருத்தை முன்வையுங்கள்.

> - இயேசு சிலுவையில் ஆணிகளால் அடிக்கப்பட்டார் என்பதை,
> - சிலுவைச் சாவு என்பது அநியாயம் செய்தவர்களுக்கு என்பதை,
> - சிலுவையின் மேல் இயேசுவின் குற்றத்தை எழுதி வைத்தார்கள் என்பதை,
> - எமது பாவங்களுக்காக இயேசுவானவர் மரித்தார் என்பதை,
> - இயேசுவானவர் சிலுவையில் தமக்குத் தீமை செய்தவர்களை மன்னித்தார் என்பதை,
> - இயேசுவானவர் மூன்றாம் நாள் வெற்றி பெற்று எழுந்தார் என்பதை.

படி 2.7.2 :
- இயேசு சிலுவையில் அறையப்பட்டிருக்கும் படத்தைக் காண்பித்து அதைப் பற்றி விமர்சித்து அவரின் சாவு முக்கியமானது என்பதை கலந்துரையாடுக.

படி 2.7.3 :

- மாணவரை மூன்று குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் கீழே உள்ள தலைப்பை பெற்றுக் கொடுத்து கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கு இட மளியுங்கள்.
- சிலுவைச் சாவு மிக வேதனைக்குரிய அனுபவமாகும்.
- இயேசுவை கொலை செய்வதற்கான இருந்த காரணங் களைக் கலந்துரையாடுங்கள்.
- அவரின் உயிர்ப்பை ஏற்றுக்கொள்வதற்கு இருந்த கருத்துக்களை காட்சிக்கூடாக விளக்குங்கள்.
- குழுக்களின் கருத்துக்களை வகுப்பில் முன்வைப்பதற்குச் சந்தர்ப்பத்தைக் கொடுத்து அதைப் பற்றிய பொதுக் கருத்துக் களை முன் வையுங்கள்.

- உரோமையில் அநியாயம் செய்தவர்களுக்கு சாவைக் கொடுக்கும் ஒரு சாதனமாகும் என்பதை,
- இயேசு யூதர்களின் அரசனாக சாவிற்கு நியமிக்கப்பட்டார் என்பதை,
- இயேசுவானவரின் உயிர்ப்பு உடல் உயிர்ப்பு என்பதை,
- இயேசுவின் வாழ்வில் சாவு முடிவில்லை என்பதை,
- இயேசுவிடம் மன்னிப்பை பெறும் நாம் அம் மன்னிப்பை மற்றவர்களுக்கும் வழங்க வேண்டும் என்பதை.

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- இயேசு சிலுவையில் அறையப்பட்டதற்கான மூன்று குற்றச்சாட்டுக்களை எழுதுவர்.
- இயேசுவின் சாவை கடவுள் நன்மையாக மாற்றிய முறையை விளக்குவர்.
- இயேசுவின் உயிர்ப்புக்கான சாட்சிகள் மூன்றை எழுதுவர்.
- திருமுழுக்கும், திருவிருந்தும் தேவ ஆராதனைக்கூடாக இயேசுவின் சாவையும், உயிர்ப்பையும் வெளிப்படுத்தும் முறைகளைக் குறிப்பிடுவர்.
- இயேசுவைப் போன்று நாமும் ஒருவருக்கொருவர் மன்னிப்பு வழங்கும் இரண்டு சந்தர்ப்பங்களை விளக்குவர்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்

- மாற்கு 15:21-27 வரையிலான விவிலியப் பகுதியை வாசியுங்கள்.
- அதில் வெளிப்படும் கருத்துக்கள் மூன்றை எழுதுங்கள்.
- இயேசு சிலுவைச் சாவு உயிர்ப்பு மூலம் உமக்குக் கிடைத்த நற்பேறை முன் வையுங்கள்.

| தேர்ச்சி | 3.0 : | இறையாட்சியின் போதனைகளைப் பின்பற்றி சமுதாயத்தில் நல்வாழ்வு வாழ்வர். |
|---|---|---|

தேர்ச்சிமட்டம் 3.1 : கடவுள் பணிசெய்ய அழைக்கப்பட்டவர்களின் முன்மாதிரியை பின்பற்றுவர்.

செயற்பாடு 3.1 : பேதுருவின் கீழ்ப்படிதலின் முன்மாதிரியைப் பின்பற்றுவோம்.

நேரம் : 80 நிமிடம்

தர உள்ளீடு :
- பலஸ்தீன வரைபடம்
- திரு விவிலியம்
- A.4 கடதாசி

கற்றல் கற்பித்தல் செயற்பாடு

படி 3.1.1 :
- பலஸ்தீன வரைபடத்தைக் காண்பித்து கலிலேயாக் கடல் இருந்த இடங்களைக் காட்டுங்கள்.
- கலிலேயாக் கடற்கரையில் நிகழ்ந்த முதல் சீடர்களின் அழைப்பின் நிகழ்வுகள் பற்றிய படங்களைக் காண்பித்து அது பற்றிய கருத்துக்களை ஆராயுங்கள்.

> - இயேசு கலிலேயாக் கடற்கரையில் சில மீனவர்களை சந்தித்தார் என்பதை,
> - மீனவர்களாக இருந்த போதே இயேசு அவர்களை பணிசெய்ய அழைத்தார் என்பதை,
> - அவர்கள் இயேசுவுக்கு கீழ்ப்படிந்து உடன்பட்டார்கள் என்பதை,
> - பலவிதமான பணிகளுக்காக இயேசு எங்களையும் அழைக்கிறார் என்பதை,
> - அப்படியான சந்தர்ப்பத்தில் நாமும் பேதுருவின் கீழ்ப்படிதலை முன்மாதிரியாகக்கொள்ள வேண்டும் என்பதை.

படி 3.1.2 :
- A4 கடதாசியை பிள்ளைகளிடம் பகிர்ந்து கொடுங்கள்.
- வீட்டில் / பாடசாலையில் / ஓய்வுநாட்பாடசாலையில் கீழ்ப்படிந்த சந்தர்ப்பங்கள் இரண்டு, இரண்டாக எழுதுவதற்கு சந்தர்ப்பம் கொடுங்கள்.
- பிள்ளைகளால் எழுதப்பட்ட கருத்துக்களை வகுப்பில் முன்வைப் பதற்கு அனைத்துப் பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம் கொடுங்கள், கீழ்ப்படிதலின் முக்கியத்துவத்தை விளக்கப்படுத்துங்கள்.

படி 3.1.3 :

- மத்தேயு 4:18-20 லூக்கா 5:5 பகுதிகளை வகுப்பில் முன்வையுங்கள்.
- பேதுரு இயேசுவுக்கு கீழ்ப்படிந்த முறையை பிள்ளைகளின் மொழிநடையில் எழுதுவதற்கு சந்தர்ப்பம் கொடுங்கள்.

> - இயேசு அழைத்த போது பேதுருவும் அவர் சகோதரனும் உடனடியாக ஏற்றுக்கொண்டு கீழ்ப்படிந்தனர் என்பதை,
> - வாழ்க்கையில் எப்படியான சந்தர்ப்பத்திலும், பலவித முறைகளில் எமக்குக் கிடைக்கும் அழைப்பிற்கு ஒரு மனதாய் உடன்பட வேண்டும் என்பதை,
> - இயேசுவின் அழைப்பானது எமது தராதரத்தைப் பார்த்து அல்ல என்பதை,
> - பேதுருவின் கீழ்ப்படிதலின் முன்மாதிரியை எமது வாழ்விலும் முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும் என்பதை,
> - இயேசு பேதுருவை அழைத்தது சிறப்பான அழைப்பிற்காக என்பதை,
> - அந்த அழைப்பிற்கூடாக பேதுருவின் முழு வாழ்க்கையும் மாறியது என்பதை.

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- கீழே உள்ள வினாக்களுக்கு விடை எழுதுவர்.
    1. முதல் சீடர்கள் அழைக்கப்பட்ட இடம்.
    2. முதல் சீடர்களின் பெயர்கள்.
    3. பேதுரு கீழ்ப்படிந்த முறை.
- கிறிஸ்தவ பிள்ளையாகக் கீழ்ப்படிய வேண்டிய சந்தர்ப்பங்கள் மூன்றினை எழுதிக்காட்டுவர்.
- லூக் 5.5 இல் குறிப்பிடப்பட்ட பேதுருவின் கூற்றுப்படி பெற்றுக் கொள்ளக்கூடிய முன்மாதிரியை எழுதுவர்.
- லூக் 5.5 பகுதியை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படும் செயற்பாட்டை முன்வைப்பர்.
- இயேசுவைப் பின்பற்றிச் சென்று தமது வாழ்வை மாற்றிக் கொண்டவர்கள் பற்றிய சிறு குறிப்பை முன்வைப்பர்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்.

- பேதுருவைப் பற்றிய விபரங்களை புதிய ஏற்பாட்டில் தேடிப் பாருங்கள்.
- அக்கருத்துக்களை சேர்த்துக் கொள்ளுங்கள்.
- சிறப்பான நிகழ்வுகள் ஒவ்வொன்று பற்றிய விபரங்களை வகுப்பில் முன்வையுங்கள்.

தேர்ச்சி 3.0 : இறையாட்சியின் போதனைகளைப் பின்பற்றி சமுதாயத்தில் நல்வாழ்வு வாழ்வர்.

தேர்ச்சிமட்டம் 3.2 : கடவுள் பணிசெய்ய அழைக்கப்பட்டவர்களின் முன்மாதிரியை பின்பற்றுவர்.

செயற்பாடு 3.2 : அழைப்பிற்கு உடனடியான உத்தரவாதத்தைக் காணப்போம்.

நேரம் : 80 நிமிடம்

தர உள்ளீடு :
- திரு விவிலியம்
- ஆயத்தப்படுத்தப்பட்ட வினாக்கள்

கற்றல் கற்பித்தல் செயற்பாடு

படி 3.2.1 :
- வகுப்பறைக்கு குருவை அழைக்கவும். (முன் ஆயத்தம்)
- இறைப்பணிக்காக குரு அழைப்பு பெற்ற முறையையும், அழைப்பை ஏற்றுக் கொண்டு உடன்பட்ட முறையையும் சினேக பூர்வமாக ஆராய்வதற்கு, பிள்ளைகளுக்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.
- மத்தேயு 9:9-13 பகுதியில் உள்ள மத்தேயுவின் அழைப்பையும் குருவை நன்கு விளங்கப் படுத்தச் செய்யுங்கள்.

> - அங்கச்சாவடியில் அமர்ந்திருந்த மத்தேயுவை இயேசு சந்தித்தார் என்பதை,
> - மத்தேயுவிற்கு இயேசுவின் அழைப்பு கிடைத்தது என்பதை,
> - மத்தேயு அந்த அழைப்பிற்கு உடனடியான மாறுத்தரம் காட்டினார் என்பதை,
> - நாமும் எமக்குக் கிடைக்கும் அழைப்பிற்கு மத்தேயுவைப் போல் உடனடியாக உடன்பட வேண்டும் என்பதை,
> - நாமும் அனைத்தையும் விட்டு அவரைப் பின்செல்ல வேண்டும் என்பதை.

படி 3.2.2 :
- ஆயத்தம் செய்து வந்த வினாக்களை கரும்பலகையில் எழுதுங்கள்.
- மத்தேயுவிற்குப் பாவித்த இன்னுமோர் பெயர் என்ன?
- "என்னைப் பின்பற்றி வா" என்று கூறிய இயேசுவுக்கு கீழ்ப்படிந்த மத்தேயு காட்டிய செயற்பாடு என்ன?

- மத்தேயுவின் வீட்டில் இயேசு கூறிய வார்த்தையின்படி சென்றது என்ன காரியத்திற்காக?

- பிள்ளைகள் எழுதின விடைகளைப்பற்றி கலந்துரையாடுக.

படி 3.2.3

- உடனடி உத்தரவாதத்தைக் காண்பித்ததைப் பற்றி பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு நபரைப் பற்றி அவர் அழைப்பைப் பெற்ற முறையையும், அதற்கு அவர் எவ்வாறு உடன்பட்டார் என்பதையும் பற்றிய கலந்துரையாடலை நடாத்துங்கள்.

- கலந்துரையாடிய கருத்துக்களை அவர்களின் மொழிநடையில் குறித்துக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.

> - இயேசு வந்தது பாவிகளுக்காக பணி செய்வதற்காக என்பதை,
> - இயேசுவின் அழைப்பிற்கு உடன்பட்டு கடவுளின் சேவைக்காக தொழிலை விட்டு வந்தனர் என்பதை,
> - இயேசுவின் பணியின் நோக்கத்தை மத்தேயுவின் வீட்டில் இருந்த அனைவரின் முன்னிலையிலும் விளங்கப்படுத்தினார் என்பதை,
> - எங்களுக்கும் பலவித சந்தர்ப்பங்களில் பலவிதமான அழைப்புக் கிடைக்கும் என்பதை,
> - அந்த அழைப்பிற்காக நாமும் உடன்பட வேண்டும் என்பதை

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- வினாக்களுக்கு விடை எழுதிக்காட்டுவார்.
- பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் குறிப்பிடப்பட்டுள்ள கடவுளின் அழைப்பிற் உடனடியாக உடன்பட்ட இருவரைப் பற்றிய கருத்துக்களைத் தேடுவர்.
- பாடசாலைப் பிள்ளையாக கடவுளின் பணியைச் செய்வது பற்றி நீங்கள் தெரிவு செய்யும் செயற்பாட்டு வழிகள் இரண்டை எழுதிக் காட்டுவர்.
- உமது வாழ்வில் கடவுளின் அழைப்பிற்கு அவதானம் செலுத்திய இரண்டு சந்தர்ப்பங்களை உதாரணத்துடன் எழுதிக் காட்டுவர்.
- மத்தேயுவின் வீட்டில் இருந்த தனிப்பட்ட குழுவினர் இருவரைப் பெயரிடுவர்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்.

- மத்தேயு 9:9-13 பகுதியில் உள்ளவற்றை வாசித்துப் பாருங்கள், அவதானத்தை செலுத்துங்கள்.
- விவிலியப் பகுதியின் கருத்துக்களை வெளிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- கொடுக்கப்பட்ட வினாக்களுக்கான விடைகளை எழுதுங்கள்.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | : | இறையாட்சியின் போதனைகளைப் பின்பற்றி சமுதாயத்தில் நல்வாழ்வு வாழ்வர். |

தேர்ச்சிமட்டம் 3.3 : கடவுள் பணிசெய்ய அழைக்கப்பட்டவர்களின் முன்மாதிரியை பின்பற்றுவர்.

செயற்பாடு 3.3 : கடவுளின் பணியாளன் பிலிப்பு அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றுவோம்.

நேரம் : 80 நிமிடம்

தர உள்ளீடு :
- திரு விவிலியம்
- பகுதி, பகுதியாக மாற்றி எழுதப்பட்ட கதையின் 5 மட்டைகள்
- A4 கடதாசி
- நிறப் பேனாக்கள்

கற்றல் கற்பித்தல் செயற்பாடு

படி 3.3.1 :
- தி. பணி 8:26-39 வரையிலான வேதாகமப் பகுதியை வகுப்பில் முன்வையுங்கள்.
- திரு விவிலியப் பகுதியில் உள்ள கதை அடங்கிய 5 மட்டைகளை பிள்ளைகளின் கையில் கொடுங்கள்.
- மட்டைகளைப் பெற்ற பிள்ளைகளுக்கு கலந்துரையாட சந்தர்ப்பம் கொடுங்கள், மாறி எழுதப்பட்ட கதையை ஒழுங்கு முறையாக அமைத்து அப்பகுதிகளை வகுப்பில் முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் கொடுங்கள்.

> - அமைச்சருக்கு கடவுளின் செய்தியை பெற்றுக் கொடுத்தவர் பிலிப்பு என்பதை,
> - பிலிப்பு கடவுளின் கட்டளைக்கு கீழ்ப்படிந்தார் என்பதை
> - எல்லா விதமான சோதனைகளிலும் கடவுளின் செய்தியை வெளிப்படுத்துவது முக்கியம் என்பதை,
> - பிலிப்புவை போன்று நாமும் இவ்வாறு கடவுளின் செய்தியை கூறுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும் என்பதை,
> - அப்போது சமூக சோதனைகளுக்கூடாக நாமும் கடவுளின் பணிக்கு உட்படுவோம் என்பதை.

படி 3.3.2 :
- மூன்று குழுக்களாகப் பிரியுங்கள்.
- கீழே கொடுக்கப்பட்ட தலைப்புக்களைக் கொடுங்கள்.

1. சமுதாயத்தில் இருந்த தடைகளின் மத்தியிலும் பிலிப்பு கடவுளின் அழைப்பிற்கு அவதானத்தைச் செலுத்திய முறையை எழுதுங்கள்.
2. அமைச்சரிடம் இருந்த விவிலியப்பகுதியின் கருத்தைச் சாதாரணமாக எழுதுங்கள்.
3. பிலிப்பு கடவுளின் பணியை நிறைவேற்றிய முறையையும் அமைச்சர் கடவுளை ஏற்றுக்கொண்டதைப் பற்றியும் ஆராயுங்கள்.

படி 3.3.3 :
- A4 கடதாசியையும் நிறப் பேனாவையும் கொடுத்து குழுக்கள் முன்வைத்த கருத்துக்களை சேர்த்துக்கொள்ள அறிவுரை வழங்குங்கள்.
- எழுதப்பட்ட கருத்துக்களை வகுப்பில் முன்வைத்து பொதுக் கலந்துரையாடலுக்கு உட்படுத்துங்கள்.
- பாடத்திற்குள் மிகவும் மனதைக் கவர்ந்த நிகழ்வைப் படமாக வரைவதற்கு சந்தர்ப்பம் கொடுங்கள்.

- சமுதாயத் தடைகளைத் தவிர்த்து கடவுளின் அழைப்பில் கவனம் செலுத்த வேண்டும் என்பதை,
- பிலிப்பைப் போன்று, நம் அனைவருக்கும் தூய ஆவியானவரின் வழிகாட்டல் கிடைக்கும் என்பதை,
- கடவுள் அனைவரையும் ஒரே விதமாகக் கவனிக்கிறார் என்பதை,
- சமுதாயத்தில் கிறிஸ்தவர்கள், அனைவருக்கும் பணி செய்ய வேண்டும் என்பதை,
- நாம் எந்த சந்தர்ப்பத்திலும் பலவிதமான சமுக சேவைகளுக்காக அர்ப்பணிப்புச் செய்ய வேண்டும் என்பதை

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- விவிலியக் கதையை ஒழுங்கு முறையாக வகுப்பில் முன்வைப்பர்.
- பிலிப்பு மந்திரியைச் சந்தித்த சந்தர்ப்பத்தில், விரும்பிய எந்த நிகழ்வையாவது பிள்ளைகள் சித்திரமாக வரைவர்.
- இக்கதையில் தூய ஆவியானவர் செயற்பட்ட சந்தர்ப்பங்கள் இரண்டை எழுதிக் காட்டுவர்.
- பிலிப்பின் கடவுள் பணியையும், அமைச்சர் கடவுளை ஏற்றுக் கொண்ட முறையையும் பற்றி விரிவான கடிதம் அமைப்பர்.
- கடவுளின் பணிக்கு அழைக்கப்பட்டவர்களின் முன்மாதிரியைப் பற்றிய கவிதையொன்றை உருவாக்குவர்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்.

- பிலிப்பு பெற்ற கடவுளின் அழைப்பைப் பற்றிய கருத்துக்களைச் சேகரியுங்கள்.
- கொடுக்கப்பட்ட கணிப்பீட்டைப் பற்றி அவதானத்தைச் செலுத்துங்கள்.
- குழுக்களால் கொடுக்கப்பட்ட கருத்துக்களை வகுப்பில் முன்வையுங்கள்.

தேர்ச்சி 3.0 : இறையாட்சியின் போதனைகளைப் பின்பற்றி சமுதாயத்தில் நல்வாழ்வு வாழ்வர்.

தேர்ச்சிமட்டம் 3.4 : கடவுள் பணிசெய்ய அழைக்கப்பட்டவர்களின் முன்மாதிரியை பின்பற்றுவர்.

செயற்பாடு 3.4 : புது வாழ்வுக்கு பவுலை முன்மாதிரியாகக் கொள்வோம்.

நேரம் : 80 நிமிடம்

தர உள்ளீடு :
- திரு விவிலியம்
- சவுலின் மாற்றம் பற்றிய சித்திரங்கள்.

## கற்றல் கற்பித்தல் செயற்பாடு

படி 3.4.1 :
- சவுலின் மாற்றத்தைப் பற்றிய சித்திரத்தை வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.
- பவுலின் மாற்றம் பற்றி பிள்ளைகள் அறிந்த விபரங்களை ஆராய்ந்து அந்த கருத்துக்களை கரும்பலகையில் எழுதுங்கள்.

- பவுல் கிறிஸ்தவர்களை துன்புறுத்துவதற்காக புறப்பட்டுச் சென்றார் என்பதை,
- சவுலுக்கு இயேசுவானவர் தரிசனமானார் என்பதை,
- இயேசுவானவரின் வழி காட்டலின் மூலம் அனனியா சவுலுக்கு பார்வையைப் பெற்றுக் கொடுத்தார் என்பதை,
- கடவுளின் அழைப்பிற்கு ஏற்ப நாமும் எமது வாழ்வை மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதை,
- பவுலை எமது வாழ்வில் முன்மாதிரியாக கொள்ள வேண்டும் என்பதை.

படி 3.4.2 :
- தி.பணி 9:1 – 19 வரை அமைதியாக வாசிப்பதற்கு சந்தர்ப்பம் கொடுங்கள்.

படி 3.4.3 :
- பவுலின் மனமாற்றம் பற்றிய கதையை நாடகப் பிரதியாக எழுதுவதற்கு அறிவுரை வழங்குங்கள்.
- பிள்ளைகளின் நாடகப் பிரதிகளில் மிகவும் நல்லதை தெரிவு செய்து, அதை பிள்ளைகளிடம் முன்வைத்து நடித்துக் காட்டு வதற்கு சந்தர்ப்பம் கொடுங்கள்.
- நடித்த நாடகத்தைப் பற்றி கணிப்பீடு செய்யுங்கள்.

- இயேசுவை சந்தித்ததற்கூடாக சவுலில் மாற்றம் நிகழ்ந்தது என்பதை,
- புது வாழ்வை சந்திப்பதற்கு சவால்களுக்கு முகம் கொடுக்க ஆயத்தமாக இருக்க வேண்டும் என்பதை,
- சவுல் புற இனத்தாருக்கு நற்செய்தியைக் கூறுவதற்காக தெரிவு செய்யப்பட்ட முக்கியமான நபர் என்பதை,
- இயேசு பல்வேறுபட்ட தேவைகளுக்காக பல்வேறுபட்ட மனிதர்களை பல்வேறுபட்ட முறைகளில் ஏற்படுத்திக் கொள்கிறார் என்பதை,
- பணியைப் பற்றிய பவுலின் முன்மாதிரியை நாமும் பின்பற்ற வேண்டும் என்பதை.

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- எழுதிய நாடகப் பிரதிகளில், ஒரு நாடகப் பிரதியின் படி நாடகத்தை நடிப்பர்.
- தனது வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்திய சிறப்பான நிகழ்வை எழுதுவர்.
- கிறிஸ்தவர்காகிய நாம் இன்றைய சமுதாயத்தில் முகம் கொடுக்கும் சவால்கள் மூன்றை எழுதுவர்.
- சவால்களின் முன்னால் கிறிஸ்தவராக முகம் கொடுக்க வேண்டும் என்பதை விளக்குவர்.
- கடவுளின் பணிக்கு அழைக்கப்பட்டவர்களின் முன்மாதிரியைப் பற்றிய கவிதையொன்றை உருவாக்குவர்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்

- பவுலைப் பற்றிய விபரங்களை சேகரியுங்கள்.
- பவுலின் மனமாற்றத்தைப் பற்றிய கதையை கட்டியெழுப்பி நாடகப் பிரதியை தயார் செய்யுங்கள்.
- நாடகத்தை நடித்துப் பழகுவதற்கு நேரத்தை ஒதுக்குங்கள்.
- வகுப்பின் முன்னால் அரங்கேற்றுங்கள்.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி | 3.0 : | இறையாட்சியின் போதனைகளைப் பின்பற்றி சமுதாயத்தில் நல்வாழ்வு வாழ்வர். |

தேர்ச்சிமட்டம் 3.5 : கடவுள் பணிசெய்ய அழைக்கப்பட்டவர்களின் முன்மாதிரியை பின்பற்றுவர்.

செயற்பாடு 3.5 : மிகவும் நல்லதைத் தெரிவு செய்வோம்.

நேரம் : 80 நிமிடம்

தர உள்ளீடு :
- திரு விவிலியம்
- A4 கடதாசி
- நிறப் பேனாக்கள்

## கற்றல் கற்பித்தல் செயற்பாடு

படி 3.5.1 :
- A4 கடதாசியையும், பேனாக்களையும் பிள்ளைகளுக்கு கொடுங்கள்.
- காலையில் எழுந்தது முதல், நித்திரைக்கு செல்லும் வரையிலான செயற்பாடுகளை குறிப்பதற்கு சந்தர்ப்பம் கொடுங்கள்.
- நாம் எவ்வளவு நேரத்தை கடவுளுக்காக கொடுத்தோம் என்பதைக் கலந்துரையாடுங்கள்.
- லூக்கா 10:38 – 42 வாசிப்பதற்கு சந்தர்ப்பம் கொடுங்கள்.

> - மார்த்தா, மரியா இருவரும் சகோதரிகள் என்பதை,
> - மார்த்தால் வெளிவேலைகளில் மிகவும் கவனத்தை செலுத்தினார் என்பதை,
> - மரியா இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டாள் என்பதை,
> - முதலிடம் கொடுக்க வேண்டியது கடவுளின் வார்த்தையை செவிமடுப்பது என்பதை,
> - நாமும் மரியாவின் முன்மாதிரியைப் பின்பற்றி கடவுளின் வார்த்தைக்கு செவிகொடுப்பதற்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்பதை.

படி 3.5.2
- வகுப்பை இரண்டு குழுக்களாகப் பிரியுங்கள்.
- விவிலியப் பகுதியை வாசிப்பதற்கு அறிவுரை வழங்குங்கள்.

- இரண்டு தலைப்புக்களைப் பெற்றுக் கொடுங்கள்.
  1. மிகவும் உயர்ந்தவர் மார்த்தா
  2. மிகவும் உயர்ந்தவள் மரியா

  உடனடி விவாதத்தை நடத்துங்கள்.

படி 3.5.3

- விவாதத்தின் கருத்துக்கள் பற்றிக் கலந்துரையாடி கடவுளின் வார்த்தையைக் கேட்பதன் முக்கியத்துவத்தை விளங்கப்படுத்துங்கள்.

- இயேசு கூறிய மிகவும் முக்கியமான பங்கைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

- யூத சமுதாயத்தில் பெண்களுக்கு இடமில்லை என்பதை,
- மார்த்தாவும், மரியாவும் சமுதாய தடைகளை உடைத்து தமது வீட்டுக்கு இயேசுவை வரவேற்றனர் என்பதை,
- மரியா இயேசுவின் வார்த்தைகளைக் கேட்பதிலும், மார்த்தாள் உபசரிப்பதிலும் விருப்பம் கொணடிருந்தனர் என்பதை,
- எல்லாவற்றையும் விட கடவுளின் வார்த்தைக்கு செவி சாய்ப்பது முக்கியம் என்பதை,
- இன்றைய நாளிலும் விவிலியத்தை வாசித்து வேண்டுதல் செய்து மரியாவின் முன்மாதிரியை எமது வாழ்வில் ஏற்றுக் கொள்வோம் என்பதை.

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- மார்த்தாளின் நல்ல குணவியல்புகள் இரண்டினை எழுதுவர்.
- மரியாவின் நல்ல குணவியல்புகள் இரண்டினை எழுதுவர்.
- இவர்கள் இருவரில் இயேசு மரியாவை மிகவும் பாராட்டிக் கூறிய செய்தியைக் கூறுவர்.
- இன்று எமக்கு மரியாவைப் போல் செய்யக்கூடிய காரியங்கள் இரண்டினை எழுதிக் காட்டுவர்.
- தினந்தோறும் குடும்ப மன்றாட்டு/ விவிலியவாசிப்பு/ பாடல் பாடுவது போன்ற முக்கியத்து வத்தைப் பற்றிய கருத்துக்களைக் கூறுவர்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்

- லூக்கா 10:38-42 வேதப் பகுதியில் அவதானத்தைச் செலுத்துக.
- கொடுக்கப்பட்ட தலைப்புக்களில் அவதானத்தைச் செலுத்தி விபரங்களைச் சேகரியுங்கள்.
- உடனடியாக கதையை முன்வைப்பதற்கு கருத்துக்களை சேகரியுங்கள்.

**தேர்ச்சி 3.0 : இறையாட்சியின் போதனைகளைப் பின்பற்றி சமுதாயத்தில் நல்வாழ்வு வாழ்வர்.**

**தேர்ச்சிமட்டம் 3.6 :** கடவுள் பணிசெய்ய அழைக்கப்பட்டவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றுவர்.

**செயற்பாடு 3.6 :** நாம் பிரசித்தமாக (வெளிப்படையாக) சான்று பகர்வோம்.

**நேரம் :** 80 நிமிடம்

**தர உள்ளீடு :**
- திரு விவிலியம்
- A4 கடதாசி
- நிறப் பேனாக்கள்

## கற்றல் கற்பித்தல் செயற்பாடு

**படி 3.6.1 :**
- தண்ணீர்க் கோப்பை ஒன்றை பிள்ளைகளின் கையில் கொடுத்து தாகத்தை தணிப்பதற்கான தண்ணீரின் அவசியத் தைக் கலந்துரையாடுங்கள்.
- இயேசுவானவர் சமாரியப் பெண்ணுக்கு தருவேன் எனக்கூறிய வாழ்வு தரும் தண்ணீர் எப்படியானது என்பதைக் கலந்துரை யாடுங்கள்.

> - இயேசு யூதேயாவில் இருந்து கலிலேயாவுக்கு செல்லும் வழியில் சமாரிய பெண்ணைச் சந்தித்து அவளிடம் தண்ணீர் கேட்டார் என்பதை,
> - சமாரியப் பெண் தண்ணீர் கொடுப்பதற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை என்பதை,
> - இயேசுவை அறிந்து கொண்டதன் பின் சமாரியப் பெண்ணின் வாழ்வில் மாற்றம் ஏற்பட்டது என்பதை,
> - அவள் போய் ஊர் மக்கள் முன்னிலையில் இயேசுவைப் பற்றி கூறினாள் என்பதை,
> - நாமும் இயேசுவைப் பற்றி வெளிப்படையாகச் சான்று பகர்வதற்கு முன்வர வேண்டும் என்பதை.

**படி 3.6.2 :**
- யோவான் 4:6-42 பகுதியை உரத்த சத்தமாக வாசிப்பதற்கு சந்தர்ப்பம் கொடுங்கள்.
- உடனடியான வினாக்களைக் கேட்டு கதையைக் கட்டியெழுப்பி விடைகளைக் கரும்பலகையில் எழுதுங்கள்.

படி 3.6.3 :

- A4 கடதாசியையும், நிறப் பேனாக்களையும் பிள்ளைகளுக்குக் கொடுத்து "வாழ்வு தரும் தண்ணீரை" பற்றி பிள்ளைகளின் கருத்துக்களை எழுதிக் காட்டுவதற்கு சந்தர்ப்பம் கொடுங்கள்.

- எழுதிய கருத்துக்களை விமர்சித்து சமாரியப் பெண்ணின் வாழ்வின் மாற்றத்தைப் பற்றிய கருத்துக்களை முன் வையுங்கள்.

- சமாரியப் பெண் இயேசுவைச் சந்தித்த இடத்தில் இருந்து சான்று பகன்ற சந்தர்ப்பம் வரை நடந்த நிகழ்வுகளை தமது மொழிநடையில் எழுதுவதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.

- யூதருக்கும், சமாரியருக்கும் இடையில் எந்தவித தொடர்பும் இல்லை என்பதை,
- எனவேதான் சமாரியப் பெண் இயேசுவுக்கு தண்ணீர் கொடுப்பதற்கு முன்வரவில்லை என்பதை,
- இறுதியாக இயேசுவை சமாரியப் பெண் தனிப்பட்ட முறையில் அறிந்து கொண்டாள் என்பதை,
- அவ்வாறு அறிந்து கொண்ட போது வெளிப்படையாக சான்று பகர்வதற்கு அவள் முன்வந்தாள் என்பதை,
- நாமும் இயேசுவானவரை தனிப்பட்ட முறையில் அறிந்து கொள்ளலாம் என்பதை,
- அவ்வாறு அறிந்து கொண்டதை வெளிப்படையாக சான்று பகர வேண்டியது எமது வாழ்க்கை முழுவதிலும் நிகழ வேண்டிய ஒன்றாகும் என்பதை

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- "வாழ்வு தரும் தண்ணீர்" பற்றிய கருத்துக்களை முன்வைப்பர்.
- இயேசுவை அறிந்து கொண்டதன் பின் அவள் செய்த செயற்பாட்டை எழுதிக் காட்டுவர்.
- பிள்ளைகளின் அன்றாட வாழ்வில் இயேசுவின் வழிகாட்டலைப் பெற்ற முறையைப் பற்றிய சாட்சியை முன்வைப்பர்.
- இயேசுவை அறிந்து கொண்டதன் பின் சமாரியப் பெண் மாறியதைப் பற்றி இரண்டு கருத்துக்களை முன்வைப்பர்.
- சமாரியப் பெண்ணிடம் நாம் பெறக்கூடிய முன்மாதிரியை எழுதிக் காட்டுவர்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்

- சமாரியப் பெண் சான்று பகர்ந்ததைப் பற்றியதன் முக்கியத்துவத்தைக் கலந்துரை யாடுங்கள்
- உங்களின் வாழ்க்கையில் சான்று பகரக்கூடிய சந்தர்ப்பங்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள்.
- அக்கருத்துக்களை வகுப்பில் முன்வையுங்கள்.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி | 3.0 : | இறையாட்சியின் போதனைகளைப் பின்பற்றி சமுதாயத்தில் நல்வாழ்வு வாழ்வர். |

தேர்ச்சிமட்டம் 3.7 : கடவுள் பணிசெய்ய அழைக்கப்பட்டவர்களின் முன்மாதிரியை பின்பற்றுவர்.

செயற்பாடு 3.7 : தியாகம் செய்வோம்.

நேரம் : 40 நிமிடம்

தர உள்ளீடு : • பலவித அவசியத் தேவைகளுக்காக வெளிநாடுகளில் இருந்து இங்கு வந்தவர்களின் படத்துடனான விபரங்கள் அடங்கிய செய்தித்தாள்.

## கற்றல் கற்பித்தல் செயற்பாடு

படி 3.7.1 :

- வெளிநாட்டில் இருப்பவர்கள் பற்றிய விபரங்கள் அடங்கிய செய்தித்தாளை பிள்ளைகளிடம் கொடுங்கள்.
- அவர்கள் வேறு நாடுகளுக்குச் சென்றதன் காரணங்கள் என்ன? ஆராய்க.
- இவ்வின்கார்ணி அம்மையார் இலங்கைக்கு வந்ததையும், அவர்களின் எதிர்பார்ப்பையும் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

> - இவ்வின் கார்ணி அம்மையார் தலாவ என்ற பிரதேசத்தில் வாழ்ந்தார் என்பதை,
> - அவர் வாழ்ந்த சூழலில் மிகவும் ஆதரவு கொண்டார் என்பதை,
> - தலாவ பிரதேசத்தில் துன்பப்படும் மக்கள் மத்தியில் சாதாரணமாக வாழ்ந்தார் என்பதை,
> - தன் வாழ்நாள் முழுவதும் இயேசுவை மற்றவர்களும் அனுபவிக்க வழி செய்தார் என்பதை,
> - தேவையிலுள்ளவர்களுக்காக எமது வாழ்வை அர்ப்பணிக்க வேண்டும் என்பதை.

படி 3.7.2 :

- கீழே தரப்பட்ட கருத்துக்களை பிள்ளைகளுடன் கலந்துரையாடுங்கள்.
  - தனது நாட்டில் சுகபோகமான வாழ்வை வாழ்வதற்கான சந்தர்ப்பம் இருந்தும் அவற்றை எல்லாம் விட்டு எமது நாட்டுக்கு வந்தமை
  - அவர்கள் இங்கு வருவதற்கு அவர்களிடமிருந்த எதிர்பார்ப்புக்கள்
  - தலாவ என்ற பின்தங்கிய பிரதேசத்தில் பணியை ஆரம்பித்தமை

- நோயாளிகளுக்காக செய்த சேவையைப் பாராட்டுங்கள்.

படி 3.7.3 :

- இயேசு பிறரைப் பற்றி கூறியவைகளைப் பிள்ளைகள் செயல்படுத்தும் முறையைப் பற்றிக் கலந்துரையாட பிள்ளைகளுக்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.
- கருத்துக்களை ஆராய்ந்து கரும்பலகையில் எழுதுங்கள்.
- எவரேனும் ஒருவர் இறை சேவைக்கு உட்படும்போது அவருக்குள் இருக்கவேண்டியவற்றை இவ்வின் கார்ணி அம்மையாரிடம் இருந்து பெற்றுக்கொள்ளும் முன்மாதிரியை அட்டவணைப்படுத்த உட்படுத்துங்கள்.

> - வெளிநாட்டுப் பெண்மணியாக இந்நாட்டுக்கு வந்து இலங்கை மக்களுக்குச் சேவை செய்தார் என்பதை,
> - தனது சேவைக்காக தெரிவுசெய்த பிரதேசம் பின்தங்கிய கடினம் பிரதேசமாகும் என்பதை,
> - தமது சுகபோகமான வாழ்வைவிட்டுத் துன்புறும் மக்களோடு துன்பம் நிறைந்த வாழ்க்கைக்கு பழகிக் கொண்டார் என்பதை,
> - நோயாளிகளுக்காக தமது வாழ்வை அர்ப்பணித்தார் என்பதை,
> - எமது வாழ்க்கை முழுவதும் மற்றவர்கள் இயேசுவை அனுபவிக்கச் செய்ய வேண்டும் என்பதை.

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- இவ்வின் காரணி அம்மையாரின் நல்ல குண இயல்புகள் மூன்றை எழுதுவர்.
- இறை சேவைக்கு அர்ப்பணிக்கும் ஒருவரிடம் இருக்க வேண்டிய குணங்கள் மூன்றைப் பெயரிடுவர்.
- பிள்ளைகளுக்கு வெளிநாடு செல்லும் சந்தர்ப்பம் கிடைத்தால் அவர்கள் கவனித்துப் பார்க்கும் கருத்துக்கள் மூன்றைச் சேகரிப்பர்.
- தனது வகுப்பில் சாதாரண நிலையில் இருக்கும் நண்பர்களின் அவசியத் தேவைகளைத் தேடிப்பார்த்து உதவி செய்வார்.
- இயேசுவுக்காகத் தனது வாழ்வை அர்ப்பணித்த நபர்கள் ஐவரின் பெயர்களைப் புதிய ஏற்பாட்டில் தேடி எழுதுவர்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்

- இவ்வின் கார்ணி அம்மையாரைப் பற்றிய விபரங்களைச் சேகரியுங்கள்.
- அக்கருத்தக்களை கலைப்படைப்பாக எழுதுவர்.
- அவ்வாறு தயாரிக்கப்பட்டதை புத்தக சஞ்சிகையாக உருவாக்குவர்.

**தேர்ச்சி 3.0 : இறையாட்சியின் போதனைகளைப் பின்பற்றி சமுதாயத்தில் நல்வாழ்வு வாழ்வர்.**

**தேர்ச்சிமட்டம் 3.8 :** கடவுள் பணிசெய்ய அழைக்கப்பட்டவர்களின் முன்மாதிரியை பின்பற்றுவர்.

**செயற்பாடு 3.8 :** ஆற்றல்களை இறை மாட்சிக்காக அர்ப்பணிப்போம்.

**நேரம் :** 40 நிமிடம்

**தர உள்ளீடு :**
- டேவிட் பெயின்டர் வரைந்த இயேசுவின் விண்ணேற்பு, இயேசுவின் சிலுவைச்சாவு பற்றிய படங்கள் (இணையம் மூலம் பெறலாம் - Internet)

## கற்றல் கற்பித்தல் செயற்பாடு

**படி 3.8.1 :**
- டேவிட் பெயின்டரால் வரையப்பட்ட உருவப்படங்களை முன்வைத்து அதைப்பற்றிக் கலந்துரையாடுக.
- டேவிட் பெயின்டரும், மைக்கல் ஆஞ்சலோவும் வரைந்த சித்திரங்களின் முக்கியத்துவத்தைப் பற்றிக் கலந்துரையாடுக.

> - டேவிட் பெயின்டருக்கும், மைக்கல் ஆஞ்சலோவுக்கும் கடவுள் சித்திரம் வரையக்கூடிய ஆற்றலைக் கொடுத்தார் என்பதை,
> - அவர்களால் வரையப்பட்ட சித்திரங்களை இன்றைய தினத்திலும் காணக்கூடியதாக உள்ளது என்பதை,
> - அந்த ஓவியங்கள் இன்றும்கூட பாராட்ட வேண்டியது என்பதை உணர்வர் என்பதை,
> - கடவுள் பலவிதமானவர்களிடம் பலவித திறமைகளைக் கொடுக்கிறார் என்பதை,
> - எங்களுக்குக் கிடைத்துள்ள ஆற்றல்களைத் இறை மாட்சிக்காக செயல்படுத்துவோம் என்பதை.

**படி 3.8.2 :**
- டேவிட் பெயின்டரும், மைக்கல் ஆஞ்சலோவும் வரைந்த சித்திரங்களில் உள்ள கிறிஸ்தவ பெறுமதி பற்றிக் கணிப்பீடு செய்யுங்கள்.
- மைக்கல் ஆஞ்சலோ, டேவிட் பெயின்டர் ஆகிய வரைப்பட ஓவியர்கள் இருவரும் தமது திறமைகளைக் கடவுளின் மாட்சிக்காக செயற்படுத்திய முறையைக் கலந்துரையாடுக.

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- கடவுள் தரும் பலவிதமான திறமைகளைப் பிள்ளைகள் அட்டவணைப்படுத்துவர்.
- தமது திறமைகளை இறை மாட்சிக்காகப் பயன்படுத்திய வழிமுறைகளை எழுதிக் காட்டுவர்.
- ஒவ்வொரு பிள்ளைகளும் தமது திறமைகளை வெளிப்படுத்தி தமது காரியங்களைச் செய்து கொண்டிருப்பார்.
- டேவிட் பெயின்டரும், மைக்கல் ஆஞ்சலோவும் வரைந்த சித்திரங்களைப் பெயரிடுவர்.
- பாடல்/கவிதை எழுதிக்காட்டுவர்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்

- டேவிட் பெயின்டர் வரைந்த சித்திரங்களைப் பற்றிய விபரங்களை முன்வைப்பர்
- டேவிட் பெயின்டர் வரைந்த சித்திரங்களின் மூன்றின் பெயர்களைத் தருக.
- சித்திரங்களை வரைவதன் மூலம் கடவுளை மகிமைப்படுத்தக்கூடிய முறைகளை வரிசைப்படுத்துவர்.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | : | இறையாட்சியின் போதனைகளைப் பின்பற்றி சமுதாயத்தில் நல்வாழ்வு வாழ்வர். |

தேர்ச்சிமட்டம் 3.9 : கடவுள் பணிசெய்ய அழைக்கப்பட்டவர்களின் முன்மாதிரியை பின்பற்றுவர்.

செயற்பாடு 3.9 : அனைத்து பிரச்சினைகள், துன்பங்களின் முன்னால் அஹிம்சையோடு செயல்படுவோம்.

நேரம் : 40 நிமிடம்

தர உள்ளீடு :
- E.W. பெரேராவின் பெயரால் வெளியிடப்பட்ட முத்திரை
- E.W. பெரேராவும், மார்டின் லூதர் கிங்கும் பற்றிய விபரங்கள் அடங்கிய சஞ்சிகை

## கற்றல் கற்பித்தல் செயற்பாடு

படி 3.9.1 :
- பிள்ளைகளின் மனதைக் கவர்ந்த வீரர்கள் பற்றிய கருத்துக்களை ஆராயுங்கள்.
- அவ்வாறு தனிப்பட்ட வீரராகக் கவனத்திற் கொள்வதற்கான காரணத்தைக் கலந்துரையாடுக.
- E.W. பெரேராவின் முத்திரையைப் பற்றி உரையாடி வீரர்களின் இலட்சணங்களைக் குறித்துக் கலந்துரை யாடுங்கள்.

> - உலகத்தின் சகல மக்களும் சமமானவர்கள் என எண்ண வேண்டும் என்பதை,
> - E.W. பெரேராவும், மாட்டின் லூதர் கிங்கும் தமது வேண்டுகோள்களை அஹிம்சையான முறையில் முன்வைத்தார்கள் என்பதை,
> - தமது விசுவாசத்தைச் செயல் முறையில் காட்டினார்கள் என்பதை,
> - தமது நாட்டில் துன்பப்படும் மக்களுக்காக இருவரும் தம்மை அர்ப்பணித்தார்கள் என்பதை,
> - நாமும் விசுவாசத்தை வளர்த்துக் கொண்டு பிறருக்காக எம்மை அர்ப்பணம் செய்ய வேண்டும் என்பதை.

படி 3.9.2 : 
- E.W. பெரேரா, மார்டின் லூதர்கிங் பற்றிய விபரங்கள் அடங்கிய சஞ்சிகையைப் பிள்ளைகளுக்குக் கொடுங்கள்.
- அந்த சஞ்சிகையில் உள்ள முக்கியமான கருத்துக்கள் பற்றி ஆராய்க.

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- E.W. பெரேராவைப் பற்றிப் பாராட்டி ஐந்து வாக்கியங்கள் எழுதுவர்.
- மார்டின் லூதர்கிங் பற்றிப் பாராட்டி ஐந்து வாக்கியங்கள் எழுதுவர்.
- இந் நபர்கள் இருவரிடமும் காணக்கூடிய விசேடமான பொது இலட்சணங்கள் மூன்றைப் பெயரிடுவர்.
- இன்று எமது நாட்டில் மனிதர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள், துன்பங்கள் ஐந்தை முன்வைப்பர்.
- கிறிஸ்தவப் பிள்ளையாக பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்காகச் செய்யக்கூடிய முறைகள் இரண்டினைத் தருவர்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்

- E.W. பெரேரா, மார்டின் லூதர் கிங் இருவரைப் பற்றிய விபரங்களை எடுத்துக் கூறுங்கள்.
- வீரர்களின் இலட்சணங்களைக் குறிப்பிடுங்கள்.
- அத்தகைய இலட்சணங்களை வகுப்பில் முன்வையுங்கள்.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி | 3.0 : | இறையாட்சியின் போதனைகளைப் பின்பற்றி சமுதாயத்தில் நல்வாழ்வு வாழ்வர். |

தேர்ச்சிமட்டம் 3.10 : கடவுள் பணிசெய்ய அழைக்கப்பட்டவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றுவர்.

செயற்பாடு 3.10 : புளோரன்ஸ் நைட்டிங்கேல், எமது வாழ்விற்கு முன்மாதிரியாகக் கொள்வோம்.

நேரம் : 40 நிமிடம்

தர உள்ளீடு :
- புளோரன்ஸ் நைட்டிங்கேல் பற்றிய விபரங்களும், சத்தியப் பிரமாணமும் அடங்கிய பிரதி
- தேவைக்கு ஏற்ப மண் விளக்கு (திரி) எண்ணெய்

## கற்றல் கற்பித்தல் செயற்பாடு

படி 3.10.1 :
- புளோரன்ஸ் நைட்டிங்கேல் விபரங்கள் அடங்கிய பிரதிகளை பிள்ளைகளிடம் கொடுங்கள்.
- அதை வாசித்துப் பார்ப்பதற்கு நேரத்தைக் கொடுங்கள்.
- நீங்கள் நல்ல சேவை இணைந்து கொண்டீர்கள் என்பதற்காக சத்தியப்பிரமாணம் செய்வதற்கு எழுந்து நின்று சத்தமாகக் கூறுவதற்கான சந்தர்ப்பத்தைக் கொடுங்கள். (விளக்கை ஏற்றி)

> - தீபம் ஏந்தியப் பெண்ணாக புளோரன்ஸ் நைட்டிங்கேல் அறிமுகமானார் என்பதை,
> - நைட்டிங்கேலின் சத்தியப் பிரமாணத்தை முழு உலகமும் ஏற்றுக் கொண்டது என்பதை,
> - எமது எதிரிகளாக இருந்தாலும் பணி செய்ய ஆயத்தமாக இருக்க வேண்டும் என்பதை,
> - இன்று எமது நாட்டில் புளோரன்சின் சத்தியப் பிரமாணத்தைப் பெற்றுக் கொடுத்து நல்ல சேவைக்கு உட்பட வேண்டும் என்பதை,
> - நாமும் நமது எதிரிகளையும் நேசிக்க வேண்டும் என்பதை.

படி 3.10.2 :
- நைட்டிங்கேலின் சத்தியப் பிரமாணத்தில் உள்ள கருத்துக் களை தமது மொழிநடையில் எழுதுவதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.
- நைட்டிங்கேலின் வாழ்வின் முன்மாதிரியைப் பற்றிய கலந்துரையாடலை நடத்துங்கள்.

படி 3.10.3 :
- இன்று எமது சமுதாயத்தில் எதிரிகளாக (பகைவராக) இருப்பவர்களை அறிந்து கொண்டு அவர்களுக்காக எடுக்க வேண்டிய வழிமுறைளை எழுதிக்காட்டுவதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.

- புளோரன்ஸ் நைட்டிங்கேலைப் போன்று நாமும் நடந்து கொள்ளும் முறைகளைக் கலந்துரையாடுங்கள்.

- பிரான்ஸ் யுத்தத்தின் காலத்தில் புளோரன்ஸ் நைட்டிங்கேல் வாழ்ந்தார் என்பதை,
- பிரச்சினைகள் துன்பங்களின் மத்தியில் காயப்பட்ட போர் வீரர்களுக்காக சேவை செய்தார் என்பதை,
- பகல், இரவு பாராமல் நோயாளர்களின் அருகில் சென்று உரையாடி, வேண்டுதல் செய்து, ஒரு தாதியாக இருந்தார் என்பதை,
- எமது எதிரிகளுடன் போராடுவதை விட அவர்களுக்கு சேவை புரிவது ஆசீர்வாதமாகும் என்பதை,
- நாம் எப்போதும் பிறருக்காகப் பொறுமையோடு மன்றாட்டின் மூலம் வழிநடத்துதலைப் பெற்று செயல்பட வேண்டும் என்பதை.

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- புளோரன்ஸ் நைட்டிங்கேலிடம் உள்ள நல்ல குணாதிசயங்கள் மூன்றை எழுதிக்காட்டுவர்.
- சத்தியப் பிரமணத்தில் உள்ள முக்கியமான மூன்று கருத்துக்களைப் பெயரிடுவர்.
- சத்துருவை சினேகிப்பதற்காக எம்மிடையே வளர்த்துகொள்ள வேண்டிய குணாதிசயங்கள் ஐந்தை எழுதுவர்.
- நல்ல பாடசாலை மாணவர்களாக பிள்ளைகளிடம் இருக்க வேண்டிய முறைகள் பற்றிய சத்தியப் பிரமாணத்தை எழுதிக்காட்டுவர்.
- அந்த சத்தியப் பிரமாணத்தை ஒரு உருவாக்கமாக முன்வைப்பர்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்

- நைட்டின்கேலின் சத்தியப் பிரமாண விபரங்களை எழுதிக் காட்டுங்கள்.

- நைட்டிங்கேலிடம் காணக்கூடிய நல்ல குணாதிசயங்கள் இரண்டை முன்வையுங்கள்.

- நாம் ஒவ்வொருவரிலும் அன்புகூரும் முறைகளைப் பற்றிய விபரங்களைக் கட்டியெழுப்புங்கள்.

தேர்ச்சி 3.0 : இறையாட்சியின் போதனைகளைப் பின்பற்றி சமுதாயத்தில் நல்வாழ்வு வாழ்வர்.

தேர்ச்சிமட்டம் 3.11 : கடவுள் பணிசெய்ய அழைக்கப்பட்டவர்களின் முன்மாதிரியை பின்பற்றுவர்.

செயற்பாடு 3.11 : அன்றைய தெரேசா அவர்களின் வாழ்வின் அர்ப்பணிப்பை முன்மாதிரியாகக் கொள்வோம்.

நேரம் : 40 நிமிடம்

தர உள்ளீடு :
- பெரிதாக்கப்பட்ட தெரேசா அம்மையாரின் படம்
- தெரேசா அம்மையாரைப் பற்றிய விபரங்கள் அடங்கிய செய்தித்தாள்

கற்றல் கற்பித்தல் செயற்பாடு

படி 3.11.1 :
- அன்றைய தெரேசாவின் அம்மையாரின் உருவப்படத்தைக் காண்பித்து அவர்கள் பற்றிய தெரிந்த கருத்துக்களை பிள்ளை களிடம் ஆராய்க.
- தெரிவித்த கருத்துக்களை வெளிப்படுத்தும் வண்ணமாக கலந்துரையாடலை நடாத்தி பிள்ளைகளின் கருத்துக்களை கரும்பலகையில் எழுதுங்கள்.

> - உரோமன் கத்தோலிக்க கன்னியர் மடத்தில் அவர்கள் அழைப்பைப் பெற்றார்கள் என்பதை,
> - சிறு வயது முதல் இயேசுவின் போதனையை அறிந்து கொண்டார்கள் என்பதை,
> - அவர்களின் செல்வத்தையும், நேரத்தையும் நோயாளிகளுக்காகப் பயன்படுத்தினார் என்பதை,
> - அநேகர் சுகபோக வாழ்வையே விரும்பினாலும், அன்னை தெரேசா துன்பங்களை அனுபவிக்கவே விரும்பினார் என்பதை,
> - நாமும் கடவுள் அழைக்கும்போது அவரைப் பின் சென்று அனைத்தையும் கைவிட வேண்டும் என்பதை.

படி 3.11.2 :
- இந்தியாவில் கங்கை நதிக்கரை அருகில் சேரியில் வாழ்ந்த மக்களைப் பற்றிய விபரங்களை பிள்ளைகளுக்கு முன்வையுங்கள்.
- சேரிகளில் வாழ்வை நடாத்தும் மக்களுக்காக இப்போது செயற்படும் சேவைகள் பற்றிய விளக்கத்தைத் தெளிவாகக் கொடுங்கள்.

படிமுறை 3.11.3 :

- அன்னை தெரேசா அன்றாட வாழ்வில் செய்த சேவையின் செயல்பாட்டைப் பாராட்டி கலந்துரையாடலை நடாத்துங்கள்.
- அன்னை தெரேசாவின் விபரங்கள் அடங்கிய கடிதத்தை வாசித்துக் கருத்துக்களைச் சேகரித்துக்கொள்ள பிள்ளை களுக்கு அறிவுரை வழங்குங்கள்.
- சேகரிக்கப்பட்ட விபரங்களை உருவாக்கமாக அமைத்து சுவரொட்டி செய்வதற்கான வழிகாட்டலைக் கொடுங்கள்.

> - அன்னை தெரேசா ஐரோப்பாவில் செல்வந்த குடும்பத்தில் பிறந்தவர் என்பதை,
> - செல்வந்தமான வாழ்வைவிட்டு இந்தியாவின் தொழு நோயாளிகளுக்காக தமது வாழ்வை அர்ப்பணித்தார் என்பதை,
> - துன்பமான வாழ்க்கை வாழ்ந்து இயேசுவின் துன்பம் நிறைந்த சேவையில் பங்கு கொண்டார் என்பதை,
> - பல சந்தர்ப்பங்களில் நெருக்கடியான நிலையில் சேவைக்குக் கடவுள் எம்மையும் அழைப்பார் என்பதை,
> - நாமும் கடவுளின் அழைப்புக்குத் தலைசாய்க்க வேண்டும் என்பதை

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- சுவரொட்டியின் மூலம் அன்னையின் தெரேசாவின் அம்மையாரின் சேவையைப் பற்றிய விபரங்களை சேகரிப்பர்.
- நமது நாட்டில் இருக்கும் தொழு நோயைப் போன்ற மூன்று நோய்களைப் பெயரிடுவர்.
- அவ்வாறான நோய்களுக்காக இன்று இருக்கும் இரண்டு இடங்களின் பெயர்களைத் தருவர்.
- எமது வகுப்பில் பல்வேறு அவசியத் தேவைகளுடன் இருக்கும் பிள்ளைகளுக்காக செய்யக்கூடியவற்றை அட்டவணைப்படுத்துவர்.
- அன்னை தெரேசாவைப் பாராட்டி கவிதை ஒன்றை உருவாக்குவர்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்

- அன்னை தெரேசா அவர்களைப் பற்றிய விபரங்களை சேகரியுங்கள்.
- அன்னை தெரேசாவின் படத்தைச் சேர்த்துக் கொள்ளுங்கள்.
- படங்களையும், விபரங்களையும் உள்ளடக்கி, சஞ்சிகை ஒன்றை உருவாக்குங்கள்.

| | |
|---|---|
| தேர்ச்சி 4.0 : | திரு விவிலியத்தை நாளாந்த வாழ்வுக்கு வழியாகக் கொள்வர். |

தேர்ச்சிமட்டம் 4.1 : திரு விவிலியத்தில் பழைய ஏற்பாட்டு உத்தமர்களின் விசேட குணாதிசயங்களை வாழ்வில் பின்பற்றுவர்.

செயற்பாடு 4.1 : சமாதானமாக வாழ்வை வாழ்வோம்.

நேரம் : 40 நிமிடம்

தர உள்ளீடு :
- நாட்டினில் நிலவும் பிரச்சினைகள் பற்றிய விபரங்கள் அடங்கிய செய்தித்தாளின் பகுதி
- பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கவேண்டிய விபரங்கள்
- திரு விவிலியம்

## கற்றல் கற்பித்தல் செயற்பாடு

படிமுறை 4.1.1 :
- செய்தித்தாளின் விபரங்களைப் பிள்ளைகளின் கையில் கொடுங்கள்.
- நிலவும் பிரச்சினைகளும், அதற்கான தீர்வுகளையும் பற்றி கலந்துரையாடுங்கள்.
- தொ.நூ. 26:20-23 பகுதிகளை வாசிப்பதற்கு சந்தர்ப்பம் கொடுங்கள்.

> - கொராரி மேய்ப்பர்கள் ஈசாக்கின் மேய்ப்பர்களைத் துன்பப்படுத்தினர் என்பதை,
> - கடவுள் தகப்பனைப் போன்று அவர்களுக்கு வழிகாட்டினார் என்பதை,
> - எமது வாழ்விலும் பிரச்சினைகள், தடைகள் நிகழ்கின்றன என்பதை,
> - அப்பிரச்சினைகளை சமாதானமாகத் தீர்த்துக் கொள்வதற்கு உற்சாகப்பட வேண்டும் என்பதை,
> - எமக்கும் கடவுளின் வழிநடத்தல் கிடைக்கின்றது என்பதை.

படிமுறை 4.1.2 :
- ஈசாக்கின் மேய்ப்பர்களுக்கு ஏற்பட்ட துன்பங்களைத் தேடிப் பார்ப்பதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.
- அந்தத் துன்பங்களுக்கு அவர்கள் எடுத்த செயல்முறைகளைத் தேடிப்பார்ப்பதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.
- வேதாகமத்தில் தேடிய கருத்துக்களின்படி ஈசாக்கின் சமாதான வாழ்வு என்ற தலைப்பின் கீழ் 10 வாக்கியங்கள் எழுதுவதற்கு வழிப்படுத்துங்கள்.

படிமுறை 4.1.3 :
- நமது நாட்டில் இருக்கும் பிரச்சினைகளைக் குறித்துக் கொள்ளுவதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.
- அந்தப் பிரச்சினைகளுக்குப் பிள்ளைகள் நினைக்கும் தீர்வுகள் என்ன என்பதை எழுதிக்காட்டுவதற்கு உட்படுத்துங்கள்.
- வீட்டில்/பாடசாலையில்/நாட்டில் உள்ள பிரச்சினைகளும் அவை ஏற்படுவதற்கான காரணங்களையும் ஆராய்க.

- ஈசாக்கின் குழுவினர்களுக்குப் பிரச்சினைகள் இருந்தாலும் அவர்கள் சமாதானமாக செயல்பட்டார்கள் என்பதை,
- தீமையை வெல்ல நன்மையான செயற்பாடுகள் உதவும் என்பதை,
- கடவுள் சமாதானமாகச் செயல்பட்ட ஈசாக்கை ஆசீர்வதித்தார் என்பதை,
- எமது நாட்டின் பிரச்சினைகள், தடைகளின் முன்னால் சமாதானத் தீர்வுடன் செல்ல வேண்டும் என்பதை,
- சமாதான வாழ்வில் உள்ள நல்ல பிரதிபலன் அனைவருக்கும் ஆசீர்வாதமாக இருக்கும் என்பதை

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- வீட்டில்/பாடசாலையில்/நாட்டில் நிலவும் பிரச்சினைகளை மூன்று மூன்றாக எழுதுவர்.
- அதற்கான தீர்வையும் எழுதிக்காட்டுவர்.
- பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய நபரிடம் இருக்கவேண்டிய குணாதிசயங்கள் மூன்றை எழுதுவர்.
- ஈசாக்கிடம் உள்ள நல்ல குணாதிசயங்கள் மூன்றை விளக்குவர்.
- சமுதாயப் பிரச்சினைகளும் அதைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளையும் முன்வைப்பர்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்

- தொ.நூ 26:20-23 விவிலியப் பகுதியில் அவதானத்தைச் செலுத்துங்கள்.
- விவிலியப் பகுதியில் உள்ள கருத்துக்களை வெளிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- சமாதானமாக வாழ்வது பற்றிய கருத்துக்களை முன்வைப்பர்.

| | |
|---|---|
| தேர்ச்சி 4.0 : | திரு விவிலியத்தை நாளாந்த வாழ்வுக்கு வழியாகக் கொள்வர். |

தேர்ச்சிமட்டம் 4.2 : திரு விவிலியத்தில் பழைய ஏற்பாட்டு உத்தமர்களின் விசேட குணாதிசயங்களை வாழ்வில் பின்பற்றுவர்.

செயற்பாடு 4.2 : பின்னடையாது துணிவுடன் செயல்படுவோம்.

நேரம் : 80 நிமிடம்

தர உள்ளீடு : • தொ.நூ 32: 22 - 32 வேதாகமப் பகுதி அடங்கிய பிரதி

## கற்றல் கற்பித்தல் செயற்பாடு

படிமுறை 4.2.1 :

- விவிலியப் பகுதி அடங்கிய பிரதிகளைப் பிள்ளைகளின் கையில் கொடுங்கள்.
- அப்பகுதியை வாசிப்பதற்கு நேரத்தைக் கொடுங்கள்.
- அக்கதையை சுவையாகப் பிள்ளைகளுக்கு விளக்குங்கள்.

- யாக்கோபு கடவுளுடன் துணிவுடன் போராடினான் என்பதை,
- யாக்கோபு கடவுளிடம் ஆசீர்வாதத்தைக் கேட்டான் என்பதை,
- கடவுள் யாக்கோபுக்கு ஆசீர்வாதத்தைக் கொடுத்தார் என்பதை,
- நாமும் நமது வாழ்வில் கடவுளின் செயல்பாடுகளை அனுபவிப்போம் என்பதை,
- கடவுளுடன் ஜீவிப்பதன் மூலம் எமக்கும் ஆசீர்வாதம் கிடைக்கும் என்பதை.

படிமுறை 4.2.2 :

- யாக்கோபு பின்னடையாது தைரியத்துடன் செயல்பட்ட முறையை விளக்குக.
- அவன் அவ்வாறு செயல்பட்டதால் அவனுக்குக் கிடைத்த பெயரையும் ஆசீர்வாதத்தையும் எழுதிக் காட்டுங்கள்.

படிமுறை 4.2.3 : • எமது வாழ்க்கைப் பயணத்தில் நாம் எடுக்கும் தீர்மானங்களின் சந்தர்ப்பங்களைப் பெயரிடுவர்.

• எமது வாழ்க்கைப் பயணத்தில் தீர்மானங்கள் எடுக்கும் சந்தர்ப்பங்களில் முகங்கொடுப்பதற்கு பின்பற்ற வேண்டிய செயற்பாடுகளை எழுதுவதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.

- யாக்கோபு கடவுளுடன் போராடி வெற்றி பெற்றான் என்பதை,
- யாக்கோபு கடவுளை முகமுகமாகக் கண்டான் என்பதை,
- அவன் இஸ்ரவேல் என்ற பெயரைப் பெற்றான் என்பதை,
- யாக்கோபுக்குக் கடவுளின் ஆசீர்வாதம் கிடைத்தது என்பதை,
- நாமும் கடவுளோடு வாழ்வதால் ஆசீர்வாதம் கிடைக்கின்றது என்பதை

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- யாக்கோபுக்குக் கிடைத்த பெயரையும் அதன் கருத்தையும் எழுதிக்காட்டுவர்.
- யாக்கோபு இருந்த அவ் இடத்திற்கு வைத்த பெயரைக் குறித்துக் கொள்வர்.
- யாக்கோபிடம் இருந்த குணாதிசயங்கள் இரண்டை எழுதிக்காட்டுவர்.
- தமது வாழ்க்கைப் பயணத்தில் எடுத்த தீர்மானங்களின் சந்தர்ப்பங்கள் இரண்டைப் பெயரிடுவர்.
- அவ்வாறான சந்தர்ப்பத்தில் செயல்பட்ட முறையை எழுதிக் காட்டுவர்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்

- தொ.நூ 32: 22-32 விவிலியப் பகுதியில் அவதானத்தைச் செலுத்துங்கள்.
- விவிலியப் பகுதியில் உள்ள கருத்துக்களை வெளிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- யாக்கோபின் பின்னடையாத துணிவைப் பற்றிய விபரத்துடனான கடிதத்தை உருவாக்குங்கள்.

**தேர்ச்சி 4.0 : திரு விவிலியத்தை நாளாந்த வாழ்வுக்கு வழியாகக் கொள்வர்.**

தேர்ச்சிமட்டம் 4.3 : திரு விவிலியத்தில் பழைய ஏற்பாட்டு உத்தமர்களின் விசேட குணாதிசயங்களை வாழ்வில் பின்பற்றுவர்.

செயற்பாடு 4.3 : நாம் ஒருவருக்கொருவர் மன்னிப்பை வழங்குவோம்.

நேரம் : 80 நிமிடம்

தர உள்ளீடு :
- திரு விவிலியம்
- A4 கடதாசி
- நிறப் பேனாக்கள்

## கற்றல் கற்பித்தல் செயற்பாடு

படிமுறை 4.3.1 :

- தனக்குத் தவறு செய்த ஒருவருக்குத் தான் மன்னிப்பு அளித்த சம்பவம் பற்றி பிள்ளைகளிடம் வினாவுங்கள்.
- இவ்வாறு தனக்குத் தவறு செய்த சகோதரர்களுக்கு மன்னிப்பு அளித்த வேதாகமக் கதையைப் பற்றிப் பிள்ளைகள் அறிந்த விபரங்களைக் கேட்டு, அவற்றைக் கரும்பலகையில் குறிப்பிடுங்கள்.

> - யோசேப்பு தனக்கு தவறு செய்த சகோதரர்களுக்கு மன்னிப்பு வழங்கினார் என்பதை,
> - யோசேப்பின் சகல காரியங்களிலும் கடவுளின் வழிநடத்துதல் கிடைத்தது என்பதை,
> - நாமும் கடவுளின் விருப்பத்துக்குக் கீழ்ப்படியும்போது எமக்கும் ஆசீர்வாதம் கிடைக்கும் என்பதை,
> - கடவுள் எமது தவறுகளுக்கு மன்னிப்புத் தருகிறார் என்பதை,
> - நாமும் மற்றவர்களின் தவறுகளை மன்னிக்க வேண்டும் என்பதை,

படிமுறை 4.3.2 :

- தொ.நூ. 45:1-15 பகுதியை வாசிப்பதற்கு வழிகாட்டுங்கள்.
- விவிலியத்தை உபயோகித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்க அறிவுரை வழங்குங்கள்.
  - யோசேப்புக்கு சகோதரர்கள் செய்த தீமைகள்
  - யோசேப்பு அனுபவித்த துன்பங்கள்
  - கடவுள் யோசேப்புக்குக் கொடுத்த விசேட ஆற்றல்
  - அவர் பெற்ற விசேட வரப்பிரசாதத்தால் அவரிடம் ஒப்படைக்கப்பட்ட காரியங்கள்

படிமுறை 4.3.3 : • யோசேப்பு சகோதரர்களுக்கு மன்னிப்பு வழங்கிய முறையை கலந்துரையாடுங்கள்.

• மன்னிப்பு அளிப்பதன் முக்கியத்துவத்தை ஆராய்க.

• நாம் ஒருவரிலொருவர் அன்பு கூறும் முறையைப்பற்றி பிள்ளைகளின் கருத்துக்களை எழுதுவதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.

- கடவுள் யோசேப்புடன் கூட இருந்தார் என்பதை,
- மன்னிப்பு வழங்க வேண்டியது நிகழ்ந்த தவறை மறப்பது என்பதை,
- மன்னிப்பு வழங்குவது இலவசமாக கொடுக்கப்பட வேண்டும் என்பதை,
- மன்னிப்பு வழங்குவது தலைவர்களின் உத்தம குணாதிசயம் என்பதை,
- மன்னிப்புப் பெறுகிறவர்களும், மன்னிப்பு வழங்குபவர்களும் பாக்கியவான்கள் என்பதை

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- ஒருவரில் ஒருவர் அன்பு கூறும் முறையைப் பற்றிய கருத்துக்களை எழுதிக்காட்டுவர்.
- பிள்ளைகள் ஒருவருக்கொருவர் மன்னிப்பு வழங்கிய சந்தர்ப்பத்தை விளக்குவர்.
- யோசேப்பின் கதையில் மனதைக் கவர்ந்த தரிசனத்தை சித்திரமாக்குவர்.
- யோசேப்பு சகோதரர்களுக்கு வழங்கிய மன்னிப்பை விபரமாக எழுதுவர்.
- நாம் ஒருவரை ஒருவர் மன்னிப்பதால் பெறும் ஆசீர்வாதங்கள் மூன்றை எழுதுவர்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்

- தொ.நூ 45: 1-15 விவிலியப் பகுதியில் அவதானத்தைச் செலுத்துங்கள்.
- விவிலியப் பகுதியில் உள்ள கருத்துக்களை வெளிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- தரப்பட்ட வினாக்களுக்கு விடைகளை எழுதுங்கள்.

தேர்ச்சி 4.0 : திரு விவிலியத்தை நாளாந்த வாழ்வுக்கு வழியாகக் கொள்வர்.

தேர்ச்சிமட்டம் 4.4 : திரு விவிலியத்தில் பழைய ஏற்பாட்டு உத்தமர்களின் விசேட குணாதிசயங்களை வாழ்வில் பின்பற்றுவர்.

செயற்பாடு 4.4 : கடவுளின் அழைப்பில் தாழ்மையுடன் தலைமைத்துவம் வகிப்போம்.

நேரம் : 80 நிமிடம்

தர உள்ளீடு :
- மோசேயின் கதைகள் அடங்கிய படங்கள்
- பிரிஸ்சில் போட் 2
- மோசேயின் படம்

## கற்றல் கற்பித்தல் செயற்பாடு

படிமுறை 4.4.1 :
- மோசேயின் கதையில் அடங்கிய படங்களுடன் நாற்பது வருடங்கள் வனாந்தரப் பயணத்தை பிள்ளைகளுக்கு முன்வையுங்கள்.

- இஸ்ரவேல் மக்கள் 40 வருடங்கள் வனாந்தரத்தில் பயணம் செய்தார்கள் என்பதை,
- கடவுள் அவர்களின் உணவு, தண்ணீர் தேவைகளை கவனித்துக் கொண்டார் என்பதை,
- கடவுளுக்கு முன்பாக இஸ்ரவேல் மக்கள் தம் கஷ்டமான வேதனைகளை எப்போதும் முன்வைத்து முறுமுறுத்தார்கள் என்பதை,
- மோசே தலைவனாக மற்றவர்களின் கருத்துக்களுக்கும் மதிப்புக்கொடுத்து பிரச்சினைகளுக்குத் தீர்வு கொடுத்தார் என்பதை,
- அநேக வேளைகளில் நாமும் நமக்கு உள்ளவற்றை விட இல்லாதவைகளைப் பற்றியே கவலை கொள்கிறோம் என்பதை

படிமுறை 4.4.2 :
- வனாந்தரத்தில் பயணம் செய்த மக்களின் அனுபவங்கள் ஐந்தை எழுதி வகுப்பில் முன்வைப்பதற்குப் பிள்ளைகளை வழிப்படுத்துங்கள்.
- அக்கருத்துக்களைக் கலந்துரையாடுங்கள்.
- விடுதலைப் பயணம் 15:22-25/16:3-8/18:24-27 பகுதிகள் மூலம் கடவுள் மோசேயுடன் செயல்பட்ட முறைகளைத் தேடிப் பார்ப்பதற்கான சந்தர்ப்பத்தைக் கொடுங்கள்.

- தேடிய கருத்துக்களை வகுப்பில் முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.

படிமுறை 4.4.3 :

- பிரிசில் போர்ட்டை பிள்ளைகளிடம் கொடுங்கள்.
- அதன் நடுவில் மோசேயின் படத்தை ஒட்டச் செய்ய அறிவுரை வழங்குங்கள்.
- படத்தைச் சுற்றி மோசேயின் குணாதிசயங்களை எழுதிக் காட்டுவதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.

> - கி.வ. 1500 அளவில் இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் இருந்து வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு வந்தார்கள் என்பதை,
> - இஸ்ரவேல் மக்கள் விசேட வரப்பிரசாதத்தைப் பெற்ற மக்கள் என்பதை,
> - கடவுளின் இரக்கத்தோடு மோசே பொறுமையோடு மக்களை வழிநடத்தினார் என்பதை,
> - பொறுமையும், தாழ்மையும் தலைவர்களிடம் இருக்க வேண்டிய விசேட குணங்களாகும் என்பதை,
> - மோசேயைப் போன்ற தலைவர்களைப் பெற்றுத் தருவதற்காக நாம் கடவுளிடம் ஜெபிக்க வேண்டும் என்பதை

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- ''வனாந்தரப் பயணம்'' இதை ஏழு வாக்கியங்களில் விளக்குவர்.
- மோசேயின் தலைமைத்துவத்தின் மூன்று குணங்களை எழுதுவர்.
- இன்று சமுதாயத்தில் இருக்கும் தலைவர்களிடம் இருக்கவேண்டிய குணாதிசயங்கள் என நீங்கள் நினைக்கும் மூன்று குணங்களின் பெயர்களைத் தருவர்.
- தலைமைத்துவத்தில் தவறிப் போவதால் ஏற்படும் கஷ்டங்கள் மூன்றை எழுதுவர்.
- மோசேயைப் போன்று தலைமைத்துவத்தை பெற்றுத்தர வேண்டிய விண்ணப்பத்தை முன்வைப்பர். அவ்விண்ணப்பத்தை அட்டையில் எழுதி நாட்டுக்கு / சபைக்கு/சமுதாயத் தலைவர்களுக்கு அஞ்சல் செய்வர்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்.

- விடுதலைப் பயணம் 15:22-25/16:3-8/18:24-27 பகுதிகளை வாசித்துக் கருத்துக்களை வெளிப்படுத்துங்கள்.
- மோசேயின் செயற்பாடுகளை வெளிப்படுத்துங்கள்.
- அக்கருத்துக்களை வகுப்பில் முன்வையுங்கள்.

**தேர்ச்சி 4.0 : திரு விவிலியத்தை நாளாந்த வாழ்வுக்கு வழியாகக் கொள்வர்.**

**தேர்ச்சிமட்டம் 4.5 :** திரு விவிலியத்தில் பழைய ஏற்பாட்டு உத்தமர்களின் விசேட குணாதிசயங்களை வாழ்வில் பின்பற்றுவர்.

**செயற்பாடு 4.5 :** கடவுளுக்கு எந்த வேளையிலும் துதி செலுத்துவோம்.

**நேரம் :** 80 நிமிடம்

**தர உள்ளீடு :**
- சூழலில் கிடைப்பவற்றால் தயாரிக்கப்பட்ட இசைக் கருவிகள் (மூடிகள்/சிரட்டைகள்/மூங்கில்/டின்/எக்ஸ்ரே காட்)
- திரு விவிலியம்

## கற்றல் கற்பித்தல் செயற்பாடு

படிமுறை 4.5.1 :
- முன்பே ஆயத்தம் செய்யப்பட்ட இசைக்கருவிகளை பிள்ளைகளிடம் கொடுங்கள்.
- பாடலைப் பாடுவதோடு அக்கருவிகளை தாளத்திற்கு அமைய இசைக்கச் செய்ய அறிவுரை வழங்குங்கள்.
- மிரியாம் கடவுளைத் துதித்த முறையை விளக்குங்கள்.

> - இஸ்ரவேல் மக்கள் எப்போதும் கடவுளின் வல்லமையை அனுபவித்தார்கள் என்பதை,
> - அதற்காக அவர்கள் எப்போதும் கடவுளைத் துதித்தார்கள் என்பதை,
> - அதற்காக அவர்கள் இசைக்கருவிகளை உபயோகித்தார்கள் என்பதை,
> - அனைவரும் சேர்ந்து துதித்தார்கள் என்பதை,
> - எல்லா வேலைகளிலும் நாமும் கடவுளைத் துதிக்க வேண்டும் என்பதை,

படிமுறை 4.5.2 :
- விடுதலைப் பயணம் 15:20-21 பகுதியை உரத்த தொனியில் வாசியுங்கள்.
- மிரியாம்மோடு கூட மற்றவர்களும் கடவுளைத் துதிப்பதற்கு இணைந்து கொண்டமை பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- கஷ்டமான சந்தர்ப்பங்களிலும் முகங்கொடுத்து இருப்பதற்கு அவர்கள் செய்த செயல்களைப் பாராட்டுங்கள்.

படிமுறை 4.5.3 :
- மிரியாமும் மற்றவர்களும் கடவுளைத் துதிப்பதற்காக உபயோகித்த இசைக்கருவிகளை எழுதுவதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.
- இன்றைய தினத்தில் கடவுளைத் துதிப்பதற்காக பாவிக்கக்கூடிய இசைக்கருவிகளைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- சுற்றுப்புற சூழலை உபயோகித்து உருவாக்கக்கூடிய இசைக்கருவிகளை செய்வதற்கான அவசியமான அறிவுறுத்தல் களைக் கொடுங்கள்.
- இன்று கடவுளைத் துதிப்பதற்காக (பாடவும்/இசைக் கருவியை இசைக்கவும்) உபயோகிக்கின்ற முறைகளைக் கணிப்பீடு செய்யுங்கள்.

- பிரபலமான எகிப்தியரின் படைகளின் முன்னால் இஸ்ரவேல் மக்கள் ஆதரவற்ற நிலையில் இருந்தனர் என்பதை,
- அந்த வேலையில் இஸ்ரவேல் மக்கள் கடவுளின் கருணையை அனுபவித்தனர் என்பதை,
- யூத பண்பாட்டில் இசைகளைப் பாவித்தார்கள் என்பதை,
- தனிப்பட்ட விதத்திலும், சமூகமாக சேர்ந்தும் கடவுளைத் துதிப்பதற்காகப் பாடல்களைப் பாடினார்கள் என்பதை,
- நாமும் எமது அனுதின செயற்பாடுகளுடன் கடவுளைத் துதிப்பதற்காக இசைகளை உபயோகிக்க வேண்டும் என்பதை

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- இஸ்ரவேல் மக்கள் பாவித்த இசைக்கருவிகள் மூன்றினைப் பெயரிடுவர்.
- சுற்றுப்புற சூழலில் உள்ளவைகளைப் பயன்படுத்தி ஒரு இசைக்கருவியை உருவாக்குவர்.
- இன்றைய தினத்தில் கடவுளைத் துதிக்கக்கூடிய மூன்று முறைகளை விபரிப்பர்.
- துதித்தலைப் பொதுவாக செய்யும்போது உண்டாகும் நன்மைகள் மூன்றைக் குறிப்பிடுவர்.
- கடவுளைத் துதிப்பதற்கு ஒரு பாடலை இயற்றி தாளத்திற்கு அமைய பாடுவதற்கு முன்வையுங்கள்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்

- மிரியாம் கடவுளுக்கு துதி செலுத்திய முறையின் விபரங்களை சேகரித்துக் கொள்ளுங்கள்.
- இன்று எமக்குக் கடவுளைத் துதிப்பதற்காக கலந்துகொள்ளக்கூடிய முறைகளின் விபரங்களை சேகரித்துக் கொள்ளுங்கள்.
- அக்கருத்துக்களை வகுப்பில் முன்வையுங்கள்.

**தேர்ச்சி 4.0 : திரு விவிலியத்தை நாளாந்த வாழ்வுக்கு வழியாகக் கொள்வர்.**

தேர்ச்சிமட்டம் 4.6 : திரு விவிலியத்தில் பழைய ஏற்பாட்டு உத்தமர்களின் விசேட குணாதிசயங்களை வாழ்வில் பின்பற்றுவர்.

செயற்பாடு 4.6 : நாம் எம்மை விட மேலாக பிறரை ஆதரவு செய்வோம்.

நேரம் : 40 நிமிடம்

தர உள்ளீடு :
- இஸ்ராயேல் தேசத்தைப் பற்றிய வரைபடம்
- திரு விவிலியம்
- A4 கடதாசி
- நிறப் பேனாக்கள்

## கற்றல் கற்பித்தல் செயற்பாடு

படிமுறை 4.6.1 :
- இஸ்ராயேல் தேசப்படத்தை பிள்ளைகளுக்குக் காண்பியுங்கள்.
- அதில் பெத்லகேம்/மோலாப் தேசம்/ மத்திய தரைக்கடல்/ சாக்கடல்/ யோர்தான் நதி ஆகியவற்றைக் காண்பித்துக் கலந்துரையாடுங்கள்.

> - இஸ்ராயேல் தேசத்தை சில சமயங்களில் உத்தமர்கள் ஆட்சி செய்தார்கள் என்பதை,
> - இஸ்ராயேல் தேசத்தில் அடிக்கடி பஞ்சம் ஏற்பட்டதால் மக்கள் வேறு நாடுகளுக்கு சென்றார்கள் என்பதை,
> - அங்கு சென்று புற இனத்தவர்களுடன் வசித்தனர் என்பதை,
> - பஞ்சம் ஏற்பட்டதன் பின்னால் ரூத்தன் நாட்டில் வசிப்பதற்கு இடங்கள் இருந்தபோதும் அவைகளை விட்டுச் சென்றார் என்பதை.

படிமுறை 4.6.2 :
- இஸ்ராயேல் தேசத்தில் பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் மக்கள் அதற்காகச் செயல்பட்ட முறைகளைக் கலந்துரையாடுங்கள்.
- எலிமலேக்/மக்லோன்/கிலியோன் ஆகியோர்களின் குடும்பம் செயல்பட்ட முறைகளைத் தேடிப்பார்ப்பதற்கு வேதாகமத்தை வாசிப்பதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.
- அவ்வாறு அக்குடும்பங்கள் செயல்பட்ட செயல்களை கணிப்பீட்டுக்கு உட்படுத்துங்கள்.

படிமுறை 4.6.3 :

- பஞ்சம் ஏற்பட்ட பின்னால் ரூத்தினால் செய்யப்பட்ட காரியங்களை அட்டவணைப்படுத்துவதற்கு அறிவுரை வழங்குங்கள்.
- ரூத்தின் செயற்பாடுகளைப் பாராட்டி கலந்துரையாடலை நடத்துங்கள்.
- ரூத்தின் கதையில் மனதைக் கவர்ந்த ஒன்றை சித்திரமாக்குவதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள். அதற்காக A4 கடதாசியையும் நிறப் பேனாக்களையம் கொடுங்கள்.

- ரூத் தனது மாமியை மிகவும் நேசித்தாள் என்பதை,
- ரூத்தின் மாமியாரிடம் இருந்த கடவுளின் விசுவாசத்தை ரூத்தும் பெற்றுக் கொண்டாள் என்பதை,
- செய்ய முடியாத காரியத்தையும் செய்வதற்கு ரூத் முன்வந்தார் என்பதை,
- அவளைக் கடவுள் ஆசீர்வதித்தார் என்பதை,
- அவ்வாறு நாமும் கடவுளின் இரக்கத்தை எப்போதும் பெறுகின்றோம் என்பதை

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- ரூத்தின் வாழ்வைப் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுவர்.
- ரூத்தின் கதையில் மனதைக் கவர்ந்த நிகழ்வை சித்திரமாக்குவர்.
- ரூத். 1-16 வேதாகம வசனத்தை உபயோகித்து புத்தக பக்க அடையாளம் (Book mark) ஒன்றை அமைப்பர்.
- தாம் கடவுளின் இரக்கத்தைப் பெற்று வளர்ச்சி அடைவதற்காக நன்றி கூறி விண்ணப்பத்தை முன்வைப்பர்.
- கடவுளின் இரக்கத்தைப் பெற்ற சந்தர்ப்பங்கள் இரண்டினை விளக்குவர்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்

- ரூத்தின் வாழ்வில் பெற்றுக் கொள்ளக்கூடிய முன்மாதிரிகளை வரிசைப்படுத்துங்கள்.
- ரூத்தின் கதையைப் பற்றிய விபரங்களைத் தேடிப்பாருங்கள்.
- மனதைக் கவர்ந்த சம்பவத்தை சித்திரமாக்குங்கள்.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி | 4.0 : | திரு விவிலியத்தை நாளாந்த வாழ்வுக்கு வழியாகக் கொள்வர். |

தேர்ச்சிமட்டம் 4.7 : திரு விவிலியத்தில் பழைய ஏற்பாட்டு உத்தமர்களின் விசேட குணாதிசயங்களை வாழ்வில் பின்பற்றுவர்.

செயற்பாடு 4.7 : தவறானவற்றை விலக்கிவிடுவோம்.

நேரம் : 840 நிமிடம்

தர உள்ளீடு :
- 2 குறிப்பேடு 34 ஆம் அதிகாரம் அடங்கிய பிரதி
- மாக்கர் பேனை
- A4 கடதாசி, பேனை

## கற்றல் கற்பித்தல் செயற்பாடு

படிமுறை 4.7.1 :

- A4 கடதாசியையும் பேனாக்களையும் பிள்ளைகளிடம் கொடுங்கள்.
- உங்கள் நாட்டின் தலைவர்களால் சமுதாயத்தில் நடைபெறும் ஐந்து தவறுகளை அகற்றிவிட எதிர்பார்க்கும் செயற்பாடுகளை எழுதுவதற்கு அறிவுரை வழங்குங்கள்.
- பிள்ளைகள் எழுதிய கருத்துக்களை ஆராயுங்கள்.
- கி.வ 640 வாழ்ந்த யோசியாவின் காலத்தில் இருந்த தவறுகள் இரண்டினை எடுத்துக் கூறுங்கள்.

> - இஸ்ரவேல் அரசர்களிடையே நல்லவர்களும், தீயவர்களும் இருந்தனர் என்பதை,
> - நல்ல அரசர்கள் கடவுளின் நீதிக்கு கட்டுப்பட்டு தம் மக்களையும் உணரச் செய்தனர் என்பதை,
> - சில வழிபாடுகளை இல்லாமல் செய்த அனைத்து பிற இனத்தவர்களின் கடவுள் சிலைகளையும் தகர்த்துப் போட்டார் என்பதை,
> - அனைத்து மக்களும் கடவுளை மாத்திரம் வழிப்பட்டனர் என்பதை,
> - எமது சமுதாயத்தில் உள்ள தவறுகளை நீக்குவதற்கு வேதாகமம் உதவுகின்றது என்பதை,
> - எனவே தொடர்ந்தும் வேதாகமம் வாசிப்பது மிகவும் முக்கியமானது என்பதை

படிமுறை 4.7.2 : • 2 குறிப்பேடு 34ம் அதிகாரப் பிரதிகளையும் மாக்கர் பேனாக்களையும் பிள்ளைகளிடம் கொடுங்கள்.

• அந்த வேதாகமம் பகுதியை அமைதியாக வாசிக்கச் செய்யுங்கள்.

• பிரதிகளை வாசித்தபின்னர் கீழே கொடுக்கப்பட்டவைகளை நிறைவு செய்வதற்கு மாக்கர் பேனாக்களைப் பயன்படுத்த அறிவுரை வழங்குங்கள்.

- யோசியா அரசனாகும் போது வயது.....
- அவரிடம் ஒப்படைக்கப்பட்ட பிரதான காரியம்
- நாட்டில் நிலவிய தவறான செயற்பாடுகள்
- அவரிடம் ஒப்படைக்கப்பட்ட காரியத்தை செய்வதற்கு முன்வந்த முறைகள்
- அதன் பலன்கள்

படிமுறை 4.7.3 : • கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு வெளிப்படுத்திய கருத்துக்களை வகுப்பில் முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் கொடுங்கள்.

• அது தொடர்பாக பிள்ளைகளுடன் கலந்துரையாடலை நடாத்துங்கள்.

- இஸ்ராயேல் நாடுகளில் அரசர்களின் பிரதான காரியமாக அமைந்தது கடவுளின் நீதியை செயல் படுத்துவது என்பதை,
- அதன்படி யோசியா அனைத்து அடிப்படை வசதிகளையும் கொடுத்தார் என்பதை,
- சுற்றி இருந்த இனத்தவர் செய்த தேவையற்ற காரியங்களை செய்யாமல் யோசியா உணர்ந்து நடந்தார் என்பதை,
- எட்டு வயதில் அரசனாகி 31 வருடங்கள் ஆட்சி செய்து கடவுளின் மக்களை போசித்தார் என்பதை,
- எமது நாட்டிற்கு/சபைக்கு/யோசியாவைப் போன்ற அரச தலைவன் அவசியம் என்பதை,
- அதற்காக நாம் உணர்ந்து கொண்டு கடவுளின் வழிநடத்துதலை தேடவேண்டும் என்பதை.

## கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமான நியதிகள்

- யோசியா ஆட்சி செய்தபோது அவன் நாட்டில் இருந்த பிரதான இலட்சணங்கள் இரண்டினை எழுதிக்காட்டுவர்.
- நாட்டின் நிலைமையை அறிந்த யோசியாவிற்கு ஏற்பட்ட உணர்வுகள் இரண்டினை எழுதுவர்.
- யோசியா நாட்டின் மக்களுக்காக எடுத்த செயல்பாடுகள் இரண்டினை விபரிப்பர்.
- உங்களின் கிறிஸ்தவ மக்களில் காணும் தவறுகளும் அதற்கான கருத்துக்களையும் எழுதுவர்.
- இத்தகைய தவறுகளை தவிர்த்துக் கொள்வதற்காக எடுக்கவேண்டிய செயற்பாடுகள் இரண்டினை விபரிப்பர்.

## குழு ஆய்வு தொடர்பான அறிவுறுத்தல்கள்

- 2 குறிப்பேடு 34ஆம் அதிகாரத்தில் கவனத்தைச் செலுத்துங்கள்.
- வேதாகமப் பகுதியின் கருத்துக்களை வெளிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- அக்கருத்துக்களை உபயோகித்து கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடைகளைத் தேடுங்கள்.

# கணிப்பீடும் மதிப்பீடும்

# அறிமுகம்

கற்றல் - கற்பித்தற் செய்கையின் மூலம் எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகளைத் தெளிவாகப் பெற்றுக் கொள்வதற்கும், மாணவர்கள் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்குமாக, வகுப்பறையில் இலகுவாகச் செயற்படுத்த முடியுமான, ஒன்றுக்கொன்று தொடர்புபட்ட இரண்டு வேலைத்திட்டங்களாகக் கணிப்பீட்டையும், மதிப்பீட்டையும் கருதலாம். கணிப்பீடு சரியான முறையில் நடைபெறுமெனின், வகுப்பில் கற்கும் ஒவ்வொரு பிள்ளையும் உரிய தேர்ச்சியின் (நிபுணத்துவத்தின்) அண்மிய மட்டத்தையாவது பெற்றுக் கொள்வது கடினமல்ல. மதிப்பீட்டின் மூலம் எதிர்பார்க்கப்படுவது பிள்ளைகள் பெற்றுக் கொண்ட தேர்ச்சி எம்மட்டத்தில் காணப்படுகிறது என்பதைக் கண்டுகொள்வதாகும்.

கணிப்பீட்டைச் செயற்படுத்தும்போது ஆசிரியர்கள் மாணவர்களுக்கு இரண்டு விதமாக வழிகாட்டல்களை வழங்கலாம். இவ்வழிகாட்டல்கள் இரண்டும் பொதுவாகப் பின்னூட்டல் (Feed Back), முன்னோக்கிய ஊட்டல் (Feed Forward) என அழைக்கப்படுகின்றன. மாணவர் களின் பலவீனம், இயலாமை என்பவற்றை இனங்கண்டு கொண்ட பின், அவர்களிடம் காணப்படும் கற்றல் தொடர்பான பிரச்சினைகளை நீக்கிக் கொள்வதற்கு பின்னூட்டலையும், மாணவர்களின் பலம், இயலுமை என்பவற்றை இனங்கண்டு கொண்ட பின் அவற்றை மேலும் விருத்தி செய்து கொள்வதற்கு முன்னோக்கிய ஊட்டலையும் வழங்குவது ஆசிரியரின் கடமையோடு சார்ந்த பொறுப்பாகும்.

கற்றல் - கற்பித்தல் செய்கையின் வெற்றி பாடத்திட்டத்திலுள்ள தேர்ச்சிகளில் எத்தேர்ச்சி களை மாணவர்கள் எந்த மட்டத்தில் அடைந்துள்ளனர் என்பதை அறிவதன் மூலம் இனங் காணப்படுகின்றது. கற்றல் - கற்பித்தல் செய்கையின் போது மாணவர்கள் அடைந்த தேர்ச்சி மட்டங்களை அளவிடுவது எதிர்பார்க்கப்படுவதோடு, அடைந்த தேர்ச்சி மட்டங்கள் பற்றிய விபரங்களை பெற்றோர் உள்ளிட்ட மற்றும் உரிய நபர்களுக்கும் தொடர்பாடல் செய்வது ஆசிரியரின் பொறுப்பாகும்.

உங்களிடம் முன்வைக்கப்பட்டுள்ள இப்பாடத்திட்டம் மாணவர் மையமான (Student-Centered), தேர்ச்சி மட்ட (Competency-Based), செயற்பாடு சார்ந்த (Activity-Oriented) பிரவேசத்தைக் கொண்டது. வாழ்வைக் கருத்துள்ளதாக்கிக் கொள்வதற்கு, செயற்பாட்டினூடாகக் கற்றல் என்பது ஆசிரியரின் உருமாற்றப் பங்களிப்பில் காணப்படும் பிரதான அம்சமாகும்.

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட செயற்பாடுகளின் தொடரகத்தின் ஊடாகச் செயற்படுத்தப்படும் இப்பாடத்திட்டமானது, கற்றல்-கற்பித்தலை கணிப்பீடு-மதிப்பீடு என்பவற்றோடு ஒன்றிணைப்பதற்கு

முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்பாட்டிலும் அதன் இரண்டாம் படியில் மாணவர்கள், குழுவாக ஆய்வில் ஈடுபடும்போது அவர்களைக் கணிப்பீடு செய்வதற்கும் செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் தமது கண்டுபிடிப்புக்கள், முடிவுகள் என்பவற்றைச் சமர்ப்பிக்கும் போது மாணவர்களை மதிப்பீடு செய்வதற்கும் ஆசிரியருக்கு முடியுமாகின்றது. மாணவர்கள் குழுவாக ஆய்வில் ஈடுபட்டிருக்கும்போது அவர்களினூடே சென்று அவர்களது வேலைகளை அவதானிப்பதன் மூலம், மாணவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை வகுப்பறையில் தீர்ப்பதற்குரிய வசதிகளையும், வழிகாட்டல்களையும் வழங்குவது ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படுகின்றது.

கணிப்பீடு, மதிப்பீடு என்பவற்றை இலகுவாகச் செய்து கொள்வதற்கு ஐந்து பொது நியதிகள் முன்வைக்கப்படுகின்றன. இந்நியதிகளில் முதன் மூன்று நியதிகளும் உரிய தேர்ச்சி மட்டத்தோடு தொடர்பான அறிவு, மனப்பாங்கு, திறன்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதாகவும், அடுத்த இரண்டு நியதிகளும் வாழ்க்கைக்குத் தேவைப்படும் முக்கியமான இரண்டு திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கானதாகவும் இருத்தல் வேண்டும். இந்த ஐந்து நியதிகளுடன் இணைந்ததான நடத்தை மாற்றங்கள் வகுப்பறையில் மாணவர்களிடம் காணப்படுகின்றதா என்பதைக் கண்டு கொள்வதற்கு ஆசிரியர் முயற்சி எடுக்க வேண்டியதோடு கணிப்பீட்டின் மூலம் கண்டு கொள்ளப்படும் மாணவர்கள் பெற்றுள்ள இத்திறன்களின் அளவை மதிப்பீட்டின் மூலம் ஆசிரியர் அளந்து கொள்ள வேண்டும்.

கணிப்பீடு தொடர்பான வேலைத் திட்டங்களை அபிவிருத்தி செய்து கொள்வதன் மூலம் கற்றல் - கற்பித்தற் செய்கையை விரிவுபடுத்திக் கொள்ளலாம். இதற்காக முதலில் செயற்பாட்டுத் தொடரகத்தில் வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளை கணிப்பீட்டு வகைகளை அடிப்படையாகக் கொண்டதான தொகுதிகளாக வேறாக்கிக் கொள்க.

மாணவர்களின் கற்றலை மலரச் செய்யக்கூடியதாக, உரிய பாடவிடயத்துடன் தொடர்பான செயற்பாட்டைத் தெரிவு செய்த பின் இனி, உரிய கற்றல் - கற்பித்தல் செய்கைக்கான சாதனங்களைத் தயாரித்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு செயற்பாட்டின் ஆரம்பத்திலும் உரிய உபகரணங்களைக் குழுக்களுக்கு வழங்க வேண்டும். கற்றல் - கற்பித்தல் செய்கையை விரிவாக்கும் போது அவை அமையக்கூடிய வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- எண்ணக்கருப்படம் (Concept Maps)
- சுவர்ச் செய்தித்தாள் (Wall News Papers)
- புதிர்ப்போட்டி (Quizzes)
- வினாவிடைப் புத்தகம் (Question and Answer Books)

- மாணவர் செயற்பாட்டுக் கோவை (Portfolios)
- கண்காட்சி (Exhibitions)
- விவாதம் (Debates)
- குழுக் கலந்துரையாடல் (Panel Discussions)
- கருத்தரங்கு (Seminars)
- உடனடிச் சொற்பொழிவு (Impromptu Speeches)
- நாடகப் பாத்திரம் (Role Plays)
- இலக்கியக் கருத்துக்களையும், விமர்சனங்களையும் முன்வைத்தல் (Presentation of Literature Reviews)
- வெளிக்களப் புத்தகம் / தினக் குறிப்புப் புத்தகம் / வேலைப்புத்தகம் (Field Books / Nature Diaries)
- செய்முறைச் சோதனை (Practical Tests)

பாட வழிகாட்டியின் மூன்றாம் பகுதி, உத்தேச கற்றல் - கற்பித்தற் செய்கைகளை விரிவாக்கும் வகைகளைக் கொண்ட செயற்பாடுகளையும் அதற்கான கற்றல் - கற்பித்தல் சாதனங்களையும் அறிமுகஞ் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளினுள் கணிப்பீடும், அதனோடு தொடர்பான மதிப்பீடும் இணைக்கப்பட்டுள்ளதால் கற்றல் - கற்பித்தற் செய்கை மேலும் விரிவாக்கப்பட்டுள்ளதோடு மாணவர்கள் ஆர்வத்தோடும் மகிழ்ச்சியோடும் கற்றலில் ஈடுபடுவதற்கு முடியுமாகின்றது.

## 6.3.2 கற்றல் - கற்பித்தலை
## மேலும் விரிவுபடுத்துவதற்கான கருவிகள்

01. தவணை : • முதலாம் தவணை
உபகரணத்தின் இலக்கம் : • 01

02. தேர்ச்சி மட்டம் : • 1.1, 1.2, 1.3, 1.4

03. உள்ளடக்கமும் விடயப்பரப்பு: • இறைவனின் அழகிய படைப்புகள் முறையான, சுழற்சி முறை ஒழுங்கிலான படைப்பின் மகிமை
இறை படைப்பின் பல்விதங்கள்
உயிர்பேறு நிலையை அனுபவித்தல்

04. கருவியின் தன்மை : • இறை படைப்பின் அற்புதத்தன்மையை எடுத்துக் காட்டும் மாணவர்களின் ஆக்கங்களின் கண்காட்சி

05. கருவியின் நோக்கம் :
- இறைபடைப்பின்அழகைத் தெடிக் கண்டுபிடிப்பர்.
- இறைபடைப்பின் ஒழுங்கையும் சுழற்சிமுறை ஒழுங்கையும் சித்திரங்களின் மூலம் முன்வைப்பர்.
- படைப்பின் பல்விதங்களை எடுத்துக்காட்டும் சித்திரங்களை முன்வைப்பர்.
- உயிர்பேறு நிலையை விளக்கும் படங்களைத் தீட்டுவர்.

06. கருவியைச் செயல்படுத்துவதற்கு
ஆசிரியருக்கான அறிவுரை :
- 1.1, 1.2 செயற்பாடுகளை ஆரம்பிக்கும் முன்னர் உபகரண வகுப்பு அறிமுகப்படுத்தவும்.
- இது இறுதியில் தனித்தனியாக படம் வரைந்து காட்சிப்படுத்துவதோடு நிறைவுறும் என்று அறிவிக்கவும்.
- படங்கள் வரைவதற்கான சூழலை உருவாக்கிக் கொள்ளும்படி மாணவருக்குக் கூறவும்.
- குறிப்பிட்ட நேரத்திற்குள் படங்களை வரையவும், ஆக்கங்களை உருவாக்கவும் மாணவரை உற்சாகப்படுத்தவும்.
- கண்காட்சிக்கான தினத்தை அறிவிக்கவும்.

மாணவருக்கான அறிவுரை :
- ஆசிரியரின் அறிவுறைகளைக் கவனமாகக் கேட்கவும்.
- பாடசாலை வளாகச் சூழலில் அவதானிப்புச் சுற்றில் ஈடுபடவும்.

சூழலின் பல்வேறு தன்மைகள், வியப்பூட்டும் அழகு, சுழற்சி முறைஒழுங்கு என்பவற்றைச் சித்திரிக்கும் படமொன்றை வரையவும்.

07. கணிப்பீட்டு முறை

| கணிப்பீட்டு நியதிகள் / குழு இல. பெயர். | நோக்கத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளல் | செயற்பாட்டை நடைமுறைப் படுத்தலும் பொறுப்புணர்வும். | அறிவுறுத்தல்களைச் சிறப்பாகப் பின்பற்றுதல் | தலைமைத்துவப் பண்புகளை வெளிப்படுத்துதல் | சித்திரங்களின் கலைச் சிறப்புகளும் நிறைவுகளும் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

புள்ளித்திட்டம்:
மிக நன்று - 04
நன்று - 03
சாதாரணம் - 02
வித்தியடைய வேண்டும் - 01

| | | | |
|---|---|---|---|
| 01. | தவணை | : | • இரண்டாந் தவணை |
| | உபகரணத்தின் இலக்கம் | : | • 01 |
| 02. | தேர்ச்சி மட்டம் | : | • 2.1, 2.2, 2.3, 2.4 |
| 03. | உள்ளடக்கமும் விடயப்பரப்பும்: | | • இயேசுவின் மூலம் இறைவனின் பிதாத்தன்மையை விளங்கிக் கொள்ளல்<br>• இயேசுவின் மூலம் இறைவனை அறிந்து கொள்ளல்<br>• இறையன்பின் சிறப்புக்களை விளங்கிக்கொள்ளல் மன்றாட்டின் மூலம் இறைவனை ஏற்றுக்கொள்ளல் |
| 04. | கருவியின் தன்மை | : | • இயேசுவின் மூலம் கடவுளை அறிந்துகொள்வதற் கென நற்செய்தியில் காணும் கதைகளை உடனடியாக சொந்த மொழிநடையில் முன்வைக்கவும். |
| 05. | கருவியின் நோக்கம் | : | • இயேசுக்கூடாக பிதாவாகிய கடவுளைத் தேடுவர்.<br>• இறையன்பின் சிறப்பியல்புகள் பற்றி ஆழமான தகவல்களைச் சேகரிப்பர்.<br>• தேடிக் கண்டுபிடித்தவை மூலமாக நற்செய்திக் கதைகளை சொந்த வார்த்தைகளில் முன்வைப்பர்.<br>• உயிர்பேறு நிலையை விளக்கும் படங்களைத் தீட்டுவர். |
| 06. | கருவியைச் செயல்படுத்துவதற்கு ஆசிரியருக்கான அறிவுரை | : | • 2.1 செயன்முறையை ஆரம்பிக்க முன்னர், இந்த வளத்தை உபகரண வகுப்பு அறிமுகப்படுத்தவும்.<br>• குழுக்களாக ஆழ்ந்த உண்மைகளைச் சேகரித்த பின்னர், தனித்தனியாக கதைகளைக் கூறுவதோடு செயற்பாடு நிறைவுறும் என்று அறிவிக்கவும்.<br>• மாணவரை இரு குழுக்களாகப் பிரிக்கவும்.<br>• தரப்பட்டுள்ள அட்டவணையில் தமது குழுவிற்கு ஏற்ற நிரலை குறிப்பேட்டில் குறித்துக்கொள்ளும் படி அறிவுறுத்தவும்.<br>• தகவல்களைச் சேகரிப்பதற்குத் தேவையான உசாத்துணை குறிப்புகளைக் கண்டுபிடிக்க உதவவும்.<br>• கண்டுபிடித்த குறிப்புகளை அனைத்துக் குழுக்களுடனும் பகிர்ந்து கலந்துரையாட இடமளிக்கவும். |

- குழுக்களில் உரை நிகழ்த்த விரும்பும் மாணவரைத் தெரிவு செய்ய அவர்களுக்கு இடமளிக்கவும்.
- உரை நிகழ்த்தும் தினத்தை மாணவருக்கு அறிவிக்கவும்.

மாணவருக்கான அறிவுரை :

- தகவல்களைச் சேகரிக்கும்போது தமது குழுவின் புள்ளித்திட்டத்தைப் பதிவுசெய்து கொள்ளவும்.
- உரிய மூல ஆதாரங்களைப் பரிசீலித்து, சரியான தகவல்களைப் பதிவுசெய்து கொள்ளவும்.
- குழுவாகச் சேகரித்த தகவல்களின் அடிப்படையில் உடனடி உரையை ஆயத்தப்படுத்திக் கொள்ளவும்.
- குழுவின் தலைவரைத் தெரிவுசெய்து கொண்டு, உரிய தினத்தில் பேச்சை நிகழ்த்தவும்.

முதலாவது குழு

01. இயேசுவின் மூலம் இறைவனின் பிதாத்தன்மையை வெளிப்படுத்துதல் பற்றிய வேதாகமக் கதை
02. அதில் காணும் விசேட நிகழ்வு
03. இறைவனின் பிதாத்தன்மை வெளிப்படுத்தப்பட்ட விதம்
04. இயேசுவின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட கடவுளை உங்கள் வாழ்வில் ஏற்றுக்கொள்ளும் விதம்

இரண்டாவது குழு

01. காணாமற்போன ஆட்டின் கதையை அறிமுகப் படுத்தல்
02. காணாமற் போனவர்களைத் தேடிச்செல்வதற்கு எடுக்கக்கூடிய நடைமுறை
03. மன்றாட்டின் மூலம் கிடைக்கும் இறையாசியை அறிந்துகொள்ளல்
04. மன்றாட்டின் மூலம் இறைவனை ஏற்றுக் கொள்ளல் மேலானது எனவும்.

## 07. கணிப்பீட்டு முறை

| கணிப்பீட்டு நியதிகள் / குழு இல. பெயர். | நோக்கத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளல் | செயற்பாட்டை நடைமுறைப் படுத்தலும் பொறுப்புணர்வும். | தகவல்களின் ஏற்புடைமை | தலைமைத்துவப் பண்புகளை வெளிப்படுத்துதல் | உடனடிப் பேச்சு மனதைக் கவருதல் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

புள்ளித்திட்டம்:

மிக நன்று - 04
நன்று - 03
சாதாரணம் - 02
வித்தியடைய வேண்டும் - 01

ක්‍රිස්තු ධර්මය 6 ශ්‍රේණිය (T)
ගුරු මාර්ගෝපදේශ සංග්‍රහය

2010/T/06/TIM/2500